
# கல்வித்தந்தை

29692





# கல்வித் தந்தை

1978ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 5ஆம் நாள்
நடைபெற்ற திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி
ஆண்டுவிழாவின் போது ஆசிரியப்
பெருமக்களுக்கு அளித்த அன்பளிப்பு

ந. வேலுசாமி, எம்.ஏ.

நக்கீரர் கழகம்
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

வள்ளலார் நிலையம்
"தமிழகம்"
சென்னை - 81

முதற் பதிப்பு: 1975

© உரிமை ஆசிரியருக்கே

TwN12
31N75

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
சென்னை - 1

விலை ரூ. 6/-

அச்சிட்டோர்:
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை-13

# காணிக்கை

பள்ளியிறுதி வகுப்பு முடித்த பின்றை, தொடக்கப் பள்ளி ஆசிரியனாக விழைந்த என்னைத் திசை திருப்பிக் கல்லூரிக்குள் செலுத்தி — அதன் மூலம் 'உண்மைத் தந்தையாம் என்னை மறந்து, இந்தக் கல்வித் தந்தையைக் காலமெல்லாம் போற்றிக் கொண்டிரு' என்று ஆணையிட்டுவிட்டுத் தெய்வமாகி விட்ட என் தந்தை திரு. கு. **நல்லையன்** அவர்களுக்கு விழி வழியே வழியும் கண்ணீரோடு இந்நூலைக் காணிக்கை ஆக்குகின்றேன்...!

# பதிப்புரை

நெ. து. சு. அவர்கள் கல்வி உலகில் ஒரு கலங்கரை விளக்கு; ஏழை மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கிவரும் அன்பு நெஞ்சத்தினர்; பிஞ்சு உள்ளங்களில் ஏற்றத்தாழ்வினைப் போக்கச் சீருடை தோற்றுவித்த உளவியலார்; கல்விப் பணிகளுக்குப் பொதுமக்களையே வள்ளல்களாக்கி எண்ணற்ற பள்ளிகளை அமைத்த வள்ளல்களைத் தோற்றுவித்த வள்ளல். முதியோர் கல்விக்கு முதலிடம் அளித்த எழுத்தறிவித்த இறைவன்; இத்தனைக்கும் மேலாக அவர் ஒரு சீர்திருத்தச் செம்மல்; பகுத்தறிவுப் பாசறையில் பண்பட்ட வீரர்.

இத்தகைய இளைஞர் பெருந்தகை, கல்விநெறிக் காவலர் நெ. து. சு. அவர்களின் புகழ் விரிக்கும் நறுமண மலரினைத் தமிழ்த் தாயின் இணையடிகளில் படைக்கும் நற்பேற்றினைப் பெற்றிருக்கிறது வள்ளலார் நிலையம்.

இந்நூலாசிரியர் திரு. நா. வேலுசாமி, எம்.ஏ., அவர்கள் தன் பெருமுயற்சியால் புகழ் மணக்கும் மலர்கள் சிலவற்றை மாலையாகத் தொடுத்துத் தந்துள்ளார். ஏனைய புதுமண மலர்களையும் விரைவில் தமிழுலகுக்குத் தர இந்நிலையம் விழைகிறது.

இந்நூலின் விற்பனைத் தொகை முழுதும் திரு. நெ. து. சு. கல்விப்பணி அறக்கட்டளைக்கே உரிமையாகும். இந்த அரும் பணிக்குத் துணைநின்ற சான்றோர் அனைவர்க்கும், விற்பனை உரிமை ஏற்ற பாரி நிலையத்தார்க்கும் எங்கள் நன்றி.

அன்பன்,

**சிறுவை. மோகனசுந்தரன்**

வள்ளலார் நிலையம்,

சென்னை - 81.

# சிறப்புரை

சீரிய தொண்டுகள் புரிந்து, மனித இன முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுவரும் இலட்சியவாதிகள், காலத்தை வென்று, ஞாலம் போற்ற வாழும் நற்பேறு பெற்றவர்கள். எந்த நேரமும் மனித குலத்தின் உயர்வைக் குறித்துச் சிந்தித்துச் செயற்படும் அந்தச் செம்மல்கள் போற்றப்படுகிறார்கள்; அத்தகையோர் இந்த ஈரங்கண்மா ஞாலத்துள் சிலரே. அந்த விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருள் ஒருவரே நம் கல்விநெறிக் காவலர், தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள். காலமெல்லாம் கல்வித்தொண்டையே தம் உயிர்த் துடிப்பாக, இதய நாடியாகக் கருதி அல்லும்பகலும் அயராது பாடுபட்டு வரும் நல்லறிஞரைத் தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்லாமல், இந்த இந்தியத் துணைக் கண்டமே நன்கு அறியும்.

சாதி, சமயக் கட்டுப்பாடுகளை அறுத்தெறிந்து, சமுதாயத்தில் எதிர் நீச்சல் போட்டு, தமக்கெனச் சில கொள்கைகளை வள்ளுவர் நெறியில் வகுத்துக் கொண்டு, அவற்றைக் கடைப்பிடித்து வாழும் நற்றமிழர். கல்வித் துறையில் பல புதுமைகளையும், புரட்சிகளையும், சாதித்த நற்றொண்டர். தமிழகத்தில் பொதுக் கல்வி இயக்குநராக இருந்தபோது, மதிய உணவுத் திட்டம் சீருடைத் திட்டம் ஞானத் தந்தையர் திட்டம் போன்றப் பல திட்டங்களைத் தீட்டித் திறமையாய்ச் செயற்படுத்திய திறனாளர். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் இருந்தபோது கல்வித் துறையில் பல புதுமைகளை ஆற்றிய கல்வி வல்லுனர்.

நாட்டிலே வறுமை ஒழிய வேண்டும்; வளம் பெருக வேண்டும்; சாதி ஒழிய வேண்டும்; சமத்துவம் வளரவேண்டும். அறியாமை ஒழிய வேண்டும்; அறிவு வளரவேண்டும். அதற்காக எல்லோரும் கற்கவேண்டும்; நன்றாகக் கற்க வேண்டும்; ஒன்றாகக் கற்கவேண்டும். இவையே, அவருடைய இலட்சிய முழக்கங்களாகும்.

கொள்கைகளின் உருவாக்கத்தை அலுவலர்கள் நேராகத் தாங்களே செய்ய இயலாது. ஆட்சியாளரிடம் கூறி, அவர்களின் ஒப்புதல் பெற்றால்தான் கொள்கைகள் நேர்மையுடையதானாலும், அலுவலர்கள் கொண்டு செலுத்த இயலும். அவ்வாறு ஒப்புதல் பெற்ற பிறகு அவைகள் ஆட்சியாளர் கொள்கைகள் ஆகிவிடும். கொள்கைகள் சிறப்பானவையானாலும் கொண்டு செலுத்துவோர் ஊக்கமும் உந்தலும் கொடுக்கவில்லையானால் கொள்கைகள் தோல்வியுறும். இது இயற்கையில் காணும் உண்மை. கொள்கைகளின் உருவாக்கத்திற்கு உருக்கொடுத்தும் சீரிய நிலையில் கொண்டு செலுத்தியும், கல்வி, சமுதாயம் ஆகியவற்றைக் கண்களாகக் கொண்டு பணியாற்றி அயராது உழைத்து வெற்றி பெற்ற தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலனாரின் அருமையான ஆற்றல்களையும் நெகிழ்வான நெஞ்சப் போக்கையும் பல பெரியவர்களின் தாக்கத்தையும் அவர்களோடு பொருந்திய பணிகளையும், பண்புகளையும் திரு. வேலுசாமி பக்தனாக நின்று எடுத்துக் காட்டுகிறார். இந்த நல்லாரின் உழைப்பும், ஊக்கமும் சமுதாய நோக்கும் ஞானக்கண் திறக்க எடுத்துக் கொண்ட முயற்சியும் வருங்கால இளைஞர்களுக்கு வழி காட்டுமாறு திரு. வேலுசாமி எழுத்து வடிவில் செய்த கன்னி முயற்சி வெல்க என என் வாழ்த்துக்களைப் பொழிகின்றேன்.

**சு. ந. சொக்கலிங்கம்**
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை.

சென்னை,
22—11—75

# வாழ்த்துரை

சேலம் அரசு கலைக் கல்லூரியில் நான் முதல்வராகப் பணியாற்றியபோது கற்கும்போதே மாணவர்கள் பொருள் ஈட்ட வேண்டும் என்னும் விருப்பத்தால்—மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைப் பணி, மாலை நேரக் கல்லூரி மாணவர்களின் மிதி வண்டிகளைப் பாதுகாக்கும் பணி, மாணவர் விடுதியில் உணவு பரிமாறும் பணி ஆகியவற்றை அந்தக் கல்லூரியில் ஏற்பாடு செய்து சுமார் பன்னிரண்டு மாணவர்களுக்கு ஒரு திங்களுக்கு ஒருவருக்கு சுமார் ஐம்பது ரூபாய் முதல் எழுபத்தைந்து ரூபாய் வரை கிடைக்க வழி செய்தேன். அப்பொழுது மிக ஆர்வத்தோடு உழைப்பின் உயர்வை எண்ணித் துணிவுடன் வந்த மாணவர்களுள் திரு. வேலுசாமியும் ஒருவர். அவ்வாறு ஈட்டிய தொகையை வைத்துக்கொண்டு முதுகலைப் பட்டக் கல்வியும் கற்று, தம்மை உயர்த்திக்கொண்டார் எனின், அவர் வழி போற்றுதற்குரியதல்லவா! தன் நிலையைத் துணைவேந்தரிடம் சொல்லவே உழைப்பையும், விடாமுயற்சியையும், ஊக்கத்தையும் போற்றிய அந்தப் பண்பாளர் முதுகலை வகுப்பில் அவருக்கு இடந்தந்தார் எனின், உழைப்பின் உருவம் முதுகலைப் பட்டம் பெற்று இன்று நூலாசிரியர் வடிவில் தோன்றினுல் பெற்றதாயினும், பெருமகிழ்ச்சி கொள்ளுமல்லவா?

திரு. வேலுசாமி ஒரு பக்தன். உண்மையான பக்தனின் கண்ணுக்கு எல்லாத் தோற்றங்களுமே கடவுளாகத் தோன்றும். காதலன் கண்ணிற்குக் காண்பவை யாவும் காதலியாகவே தோன்றும். உள்ள ஊன்றலின் உருட்டல் அது.

"நோக்குபவை யெல்லாம் அவையே போறல்"

என்பர் தொல்காப்பியர். எனவே, ஓர் உழைப்பாளியின் உயரிய பணிகளை நேரிய வாழ்க்கையை இந்த நூலில் அவர் வடிக்க முனைந்துள்ளார்.

இவர் சிறந்த கல்வியாளர்; தெளிந்த சிந்தனையாளர். தேர்ந்த நல்லறிஞர். கேட்பாரைப் பிணிக்கும் ஆற்றல்மிக்க பேச்சாளர். திறமை சான்ற எழுத்தாளர். இளையோர்க்கும், முதியோர்க்கும், கருத்தாழமிக்க பல நூல்களை வரைந்துள்ளார்.

உழைப்பால் தாம் உயர்ந்ததோடு, நாட்டுமக்களின் உயர் வாழ்வுக்காக, நாளும் நற்றொண்டு புரிந்து வரும் செயல் வீரர் திரு. நெ. து. சு. அவர்களின் வரலாற்றை அழகிய தமிழில், இனிய ஆற்றொழுக்கான நடையில் நிரல்பட எழுதியுள்ள திரு. வேலுசாமி, எம். ஏ., அவர்களின் தமிழ்த் தொண்டு பாராட்டுதற்குரியது.

இளைஞர் திரு. வேலுசாமி அவர்களின் தமிழ்த்தொண்டு நாளும் வளர்க; வாழ்க!

**கா. மீனாட்சிசுந்தரம்,**
முதல்வர்,
சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

திருப்பூர்,
26-11-75.

# இந்த மழலையின் குரல் . . . . . . . . . . .

இருபதாம் நூற்றுண்டுத் தமிழகத்தின் வரலாற்றை வடிக்கும் எந்த வரலாற்று ஆசிரியனும், இந் நூற்றுண்டின் இடைக் காலத்தில் எழுந்த அறிவுப் புரட்சியாகிய கல்வி வளர்ச்சியைப் பற்றிச் சொல்லாமல் மேலே செல்ல முடியாது.

அவ்வாறு சொல்லிச் செல்லும்போது அவ்வளர்ச்சியின் காரணம்—காரியம்—கர்த்தா ஆகிய மூன்றுமாகச் செயல் படுகின்ற வணக்கத்திற்குரிய நெ. து. சு. அவர்களின் பணியை முத்திரைச் சொற்களாகப் பொறிக்காமல் போக முடியாது.

அப்படிப் போனுல், காந்தியடிகளை மறந்து சுதந்திரத்தை நினைப்பதைப்போல, கார்ல் மார்க்சை மறந்து பொதுவுடைமைத் தத்துவத்தை நினைப்பதைப்போல, லிங்கனை மறந்து நீக்ரோ விடுதலையை நினைப்பதைப்போல ஆகும் என்பதை மனத்தில் இருத்த வேண்டும்.

கல்வி உலகின் ஒரு சகாப்தமாக விளங்குகின்ற நெ. து. சு. அவர்களைப் பற்றித்தான் அவருடைய இமாலயப் பணிகளுக்குச் செய்கின்ற வழிபாடாகத்தான்—என் தமிழ் உணர்வினைத் திரட்டி, 'கல்வித் தந்தை' என்று, இலட்சக் கணக்கான தமிழர்களின் பிரதிபலிப்பாகப் பொன் வைக்கும் இடத்தில் ஒரு பூவாக இந் நூலைப் படைத்துள்ளேன்!

"நான் உப்பு விற்ருல் மழை பெய்கிறது; மாவு விற்ருல் காற்றடிக்கிறது" என்ற நிலையில் இருக்கும் எனக்கு, வாழ்க் கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திய அந்தத் தெய்வப் பிறவிக்கு இதைச் செய்தாவது மனத்தை நிறைவு செய்துகொள்ள முயல் வோம் என்ற எண்ணம்தான்!

இந்நூல் எழுதும் அவாவினை முதலில் என் நண்பர் திரு. மா. ரா. அரசு, எம். ஏ., அவர்களிடம் வெளியிட்டேன். மகிழ்ந்து, ஆலோசனைகள் வழங்கினுர். அவருக்கு என் நன்றி.

பின்பு, அமைதியின் இருப்பிடமாகத் திகழும் தமிழ்ச் சான்றோர், நக்கீரர் கழகச் செயலாளர், ஆண்டு தோறும் தமிழ் எம். ஏ., புலவர் மாணவர்களுக்கு இலவசமாகத் தமிழ் கற்பிக்கும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் இயக்குநருமான திரு. சிறுவை மோகனசுந்தரனார் அவர்களிடம் சென்றேன். தனக்கே உரித்தான முறையில் பல நற்கருத்துக்களை வழங்கிய தோடு, நான் எழுதிக் கொடுத்த கையெழுத்துப் பிரதிகளைத் திருத்தி—ஒரு சிற்பியைப் போல் செப்பம் செய்து உதவியதோடு அச்சுப் பிரதிகளையும் திருத்தி உதவினார்.

இந்நூல் அச்சாகும் வேளையில் அவர் நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமானார். அப்போதும் என் 'கல் மனம்' அவரைச் சும்மாவிடவில்லை; அவரால் ஒன்றும் இயலாது என்று அறிந்தும் அவர் படுக்கையருகில் அமர்வேன். ''அம்மா'' என்பார் வலி தாளாமல்; பின் 'இதைக் குறித்துக்கொள்' என்பார் என்னிடம்; இப்படி மாறிமாறி என் வேகத்திற்கும், தம் வேதனைக்கும் ஈடு கொடுத்தார் அந்த மூதறிஞர்.

பின்னர், அவர் பல்கலைக்கழக நூலகர் பெருந்தகை திரு. பி. ஏ. மோகன்ராஜ் எம். ஏ., அவர்களிடம் அழைத்துச் சென்றார். அன்று தொட்டு, இந் நூல் உருவாகும் வரை, பல பணிகளில் ஆழ்ந்திருக்கும் பல்கலைக் கழக நூலகர் அவர்கள் எனக்குச் செய்த உதவிகள்தாம் எத்தனை! நெ. து. சு. நூல்களைக் கொடுத்து உதவிய தோடு, பல நற்கருத்துக்களையும் அறிவுரை களையும் கூறிய அவருக்கு 'நன்றி' என்று கூறி என்னை நிறைவு செய்துகொள்ள முடியவில்லை.

என் முயற்சி, அழகிய நூல்வடிவு பெற்றமைக்கு இவ்விரு சான்றோர்களே காரணம்!

இல்லம் நோக்கிச் சென்ற என்னை, உடல் நிலை சரியில்லாமல் இருந்தும், முகம் சுளிக்காமல் வரவேற்று, நெ. து. சு. அவர்களின் அந்நாள் கல்விப் பணிகளைப் புள்ளி விவரமாகத் தெரிவித்த ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியாக வீற்றிருக்கும் பெருந்தகை திரு. எஸ். வடிவேலுப்பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கம்.

நெ. து. சு. அவர்கள் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு ஆற்றிய பணிகளைக் கேட்டதும், முகம் மலர்ந்து—நிரல்படுத்திக் கூறிய பல்கலைக் கழகத் தமிழ்த் துணைப்பேராசிரியர்

டாக்டர் சி. பாலப்பிரமணியன் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., அவர்களுக்கு என் நெஞ்சம் விம்மும் நன்றி.

கனிவில் கன்னெஞ்சரையும் கனியவைக்கும் தமிழ்ப் பேராசிரியர்-தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சு. ந. சொக்கலிங்கம் எம். ஏ., அவர்கள் என் முயற்சிக்கு அறிமுகம் செய்திருக்கிறார்கள்; அவர்களின் நிழலில் கொஞ்சம் நாள் இருந்தேன்; அந்த உரிமையால் வேண்டினேன்; சிறப்புரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு, யான் ஆற்ற வல்லது யாது!

நான் வணங்குதல் அன்றி-வாழ்த்தல்அறியாத, என் கல்விக்கு ஊன்றுகோலாகவும் தூண்டுகோலாகவும் துணை நின்றவரும், என்னைக் கல்வித் தந்தையிடம் முதன் முதலில் ஆற்றுப் படுத்தி யவருமாகிய என் வணக்கத்திற்குரிய பேராசிரியப் பெருந்தகை யாளர், டாக்டர். கா. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் என் முதல் முயற்சிக்கு வாழ்த்துக் கூறியமை என் பெரும் பேறு!

என் முயற்சிக்கு ஊக்கம் தந்து நல்லாற்றுப் படுத்திய திரு. ஆ. ச. தணிகாசலம் அவர்களை மறப்பேனா!

'இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்தி உதவுங்கள்' என்றதும் அக மகிழ்வோடு ஏற்றுதவிய, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை—திருக்குறளாராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் அருமை நண்பர் திரு. கு. மோகனராசு, எம். ஏ., பி. எசி., (கவிஞர் கு. எழிலரசு) அவர்களை நன்றியுணர்வோடு எண்ணு கின்றேன்!


என்னைப் போலவே, ஐயா அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்ட, அருமைச் சகோதரர் திரு. பி. மனோகரன் எம். எஸ்ஸி., அவர்கள் இந்நூல் வெளிவர உடனிருந்து புரிந்த உதவிகளை மறப்பேனா!

வனமலர் சங்கப் புகைப்படம் கொடுத்து உதவிய மாநிலக் கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் திரு. மெய்கண்டார் அவர்களுக்கும், தந்தை பெரியார் புகைப்படம் தந்து உதவிய திரு. சு. வேலு அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

எங்கள் மனோவேகத்தோடு போட்டியிட்டு அச்சிட்ட அவ்வை அச்சுக்கூடத்தினரை என் இதயம் என்றும் நினைவில் வைத் திருக்கும்!

இறுதியாக நூலைப் பற்றி, நன்றியுணர்வோடு நெ. து. சு. அவர்களைப் பற்றி நூல் எழுதிய 'முதல்வன்' என்ற இடத்தைப் பெற வேண்டும் என்ற 'பேராசை' யையும் கலந்து உருவாகிய இந்நூல் எழுத்துத்துறையில் என் கன்னிமுயற்சி ; ஒரு மழலையின் குரல் போன்றது ! இந்த மழலைக் குரலில் அரும்பொருள் இருக்கிறதா—ஆராய்ச்சி நுட்பம் இருக்கிறதா என்று பார்ப்ப தோடு இனிமை இருக்கிறதா என்று பார்க்கும்படி வேண்டி, இந்நூலில் ஏதேனும் பிழை இருப்பின் அதை எனதாக்கிக் கொண்டு—கருத்து இழைகளை மேற்கூறிய நல்லோர் அனை வர்க்கும் உரிமையாக்கி மகிழ்கிறேன்.

— **ந. வேலுசாமி**



கல்விநெறிக்காவலர், துணைவேந்தராக

# கல்விநெறிக் காவலர்
# நெ. து. சு. அவர்களின் பெருவாழ்வு

## கல்விநெறிக் காவலர்

# நெ. து. சு. அவர்களின் பெருவாழ்வு

"யாருடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் சிந்துகிறதோ அவரை நான் மகாத்மா என்பேன்."

மேற்கூறிய மணிமொழியை ஒரு சராசரி மனிதன் கூறவில்லை. ஆன்மீகத்தையும் கல்வியையும் ஒருங்கே பரப்பி, இப் பாரத தேசத்திற்குப் பெரும் புகழை ஈட்டித் தந்து வழிகாட்டிய பெருந் தகை சுவாமி விவேகானந்தர் அருளிய கருத்துத்தான் அது.

சுவாமிகளின் கருத்திற்கிணங்க இப் புவி தோன்றியது முதல் இன்று வரை நூற்றுண்டுதோறும் புல், பூண்டு முதல் மக்கள் ஈருகத் தோன்றி மறைந்தவண்ணம் இருக்கிருர்கள். இயங்கிக் கொண்டிருக்கும் இருபதாம் நூற்றுண்டிலே, அண்ணல் காந்தி, மார்ட்டின் லூதர்கிங், கென்னடி, லெனின் போன்ற எத்தனையோ மகாத்மாக்கள்!

அப்படிப்பட்ட மகாத்மாக்களில் ஒருவர்—இன்று வாழ்ந்து வருபவர்—பிறர் வாழப் பிறவி எடுத்து—என்னரும் தமிழகத்தில் ஏழைகட்கு எளிய காட்சியினராய் இருப்பவர், தாமரைத் திரு வினர்—கல்விநெறிக் காவலர்—வள்ளுவ நெறியாளர்—சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்—'நெகிழ்ந்துருகித் துயர் துடைக் கும்' சுந்தரவடிவேலு அவர்கள்.

அவர் அரசியலில் இல்லாமல் இருக்கலாம். விளம்பரத்தைத் தேடி ஓடாமல் இருக்கலாம்; புகழ்ப் போதைக்கு அகப்படாமல் இருக்கலாம்; அதனுல் மகாத்மா இல்லை என்று முடிவு கட்ட

முடியுமா? இது தனியொருவன் கணிப்பல்ல; தமிழ்மக்களின் கணிப்பு; தரமான முடிவுங்கூட.

"சுந்தரவடிவேலர் நமது காலத் தமிழகம் ஈன்ற சான்ருேர் வரிசையில் தகுதி வாய்ந்த இடம் பெறும் நல்லார்.

வள்ளுவரைக் கசடறக் கற்று, கற்றபின் அதற்குத் தக நிற்கும் அறப் பண்பினர். தந்தை பெரியார் அவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வாழ்வில் சமூகப் புரட்சியை நடத்திக் காட்டிய ஒழுக்க சீலர்; கல்வித் துறையில் செயற்கரிய பல செய்து ஜனுதிபதியும் மெச்ச ஒளிபரப்பிய உத்தமர்; 'பத்மஸ்ரீ' என்ற பட்டம் சூட்டுதல்பெற உயர்ந்தவர். இலட்சியமே வாழ்வின் உயர் மூச்சாய் வாழும் பெற்றியர்.

"இவர் நாட்டினுக்கோர் அணிகலன்; எளிமைக்கோர் எடுத்துக் காட்டு; பணிவுக்கோர் பண்பாளர்; துணிவுக்கோர் எல்லையாளர்."

இது, பற்றற்ற பற்றினை உடைய பெற்றியினராய் இலங்கும் திரு. நெ. து. சு. அவர்களைப் பற்றி மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினராயிருந்த டாக்டர் பா. நடராஜன் அவர்களின் படப் பிடிப்பாகும். இந்த மகாத்மாவினை இதைவிட எவ்வாறு சுருங்கச் சொல்லி விளங்கவைக்க முடியும்?

இவ்வளவு பெரிய மனிதரின் பிறப்பையும் இளமையையும் அறிந்தால் நமக்குப் புல்லரிக்கிறது! அடிமை விலங்கொடித்த ஆபிரகாம் லிங்கனும் ஒரு தச்சுத்தொழிலாளியின் மகவாகத் தானே பிறந்தார்!

வணக்கத்திற்குரிய நெ. து. சு. அவர்கள் 1912ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் பன்னிரண்டாம் நாள், தமிழக வரலாற்று நகரங்களில் ஒன்ருக விளங்கும் காஞ்சிக்கு அருகில் உள்ள செய்யாற்றங்கரையில் அமைந்திருக்கும் 'நெய்யாடு பாக்கம்' என்ற சிற்றூரில் வழிபாட்டுக்குரிய துரைசாமி என்ற சான்ருேர்க்கும் அன்னை சாரதாம்பாள் அம்மையார் அவர்களுக்கும் அருமை மகனுகத் தோன்றினுர். ஆம்! தோன்றினுர்.

பின்னுளில் ஐந்துகல் தொலைவிற்கு ஓர் உயர்நிலைப் பள்ளி அமைத்து ஏழை எளியோர் குழந்தைகளுக்கெல்லாம் கல்விக்கண் அளிப்பார் என்று திண்ணமாக நம்பித்தான் காஞ்சிபுரத்தில் உள்ள ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளி நெ. து. சு. அவர்களை மாணவனுகப் பெறும் பேற்றைப் பெற்றது போலும்! அங்கேதான் தன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார் இவர்.

காஞ்சியில் பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரிக் கல்வியைத் தொடங்கினார். உலகப் புகழ் பெற்ற தத்துவமேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் போன்ற அறிஞர் பெருமக்களை உருவாக்கிய சென்னை மாநிலக் கல்லூரியில்—நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் பொருளாதாரத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து 'பி. ஏ. (ஆனர்ஸ்)' தேர்ச்சி பெற்றார்.

பின்னர் சில ஆண்டுகளுக்குப் பின்பு ஆசிரியப் பயிற்சிக்குரிய எல். டி. பட்டத்தையும் விரும்பிப் பெற்றார். அன்றே அவரது கல்விப் பணிக்குக் கால்கோள் விழா எடுக்கப் பெற்றது என்று கூறினால் அது மிகையில்லை.

கல்லூரியில் பயின்ற காலைப் பருவத்தில் அவர், 'மாலை நேரக் கல்லூரி' என்று வழங்கப்பெறும் அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும் பொதுக் கூட்டங்களுக்குச் செல்வதைப் பெரும் விருப்பமாகக் கொண்டிருந்தார். 'கற்றலின் கேட்டலே நன்று' என்ற பொருளுரைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் அவர் பின் எவ்வாறு இருக்க முடியும்?

அந்த எழில் கொஞ்சும் இளமைப் பருவத்தில் தான், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், குத்தூசிக் குருசாமி அவர்கள் ஆகியோரின் தொடர்பு ஏற்பட்டது. பையப் பைய வளர்ந்த சந்திப்பு குத்தூசிக் குருசாமி அவர்களின் கெழுதகை நண்பராக்கியது. அந்தத் தொடர்பு காரணமாகக் குத்தூசிக் குருசாமி அவர்களின் இல்லத்திற்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது.

குத்தூசியார் அவர்களின் துணைவியாரின் தங்கை காந்தம் அவர்கள் அப்போது தன் அக்கா வீட்டில் இருந்து வந்தார். அவர்களைக் கண்ட நெ. து. சு. அவர்களின் நெஞ்சத்தில் அன்பு முளைவிடத் தொடங்கியது.

ஒத்த பண்பு—ஒத்த கல்வி—ஒத்த வயதினராய் விளங்கிய இவ்விருவரின் நெஞ்சத்திலும் முகிழ்த்த அன்பு, காதலாக வளர்ந்து மலர்ந்தது. அவர்களையே வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள விழைந்தார் இவர். பின்னர்? கடிமணம் நிகழ்ந்தது.

இவர், பெரியார் தன் சீர்திருத்தப் பீரங்கியை முடுக்கத் தொடங்கிய காலம்; எதிர்ப்புக்கள் எக்காளமிட்ட நேரம்; அந்தக் கால கட்டத்தில்தான்—சாதி பார்க்காமல், குலம் கேட்காமல்,

வரதட்சணை வாங்காமல், திரு. சுப்பிரமணியம் அவர்களின் திரு வளர்செல்வியாரை — தன்னை யொத்த கல்வியறிவு சான்ற நங்கை நல்லாரைத்—தன் தந்தையாரைக் கூடக் கேட்காமல் — மிக எளிய முறையிலே சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக மணம் புரிந்து கொண்டார். கலப்புமணமாகிய அது பதிவுத் திருமணமாக 25—10—40 இல் நடந்தது.

பின்னர், இவர்களின் திருமண விழாவையொட்டி, திரு வாளர்கள் பொன்னம்பலனார், எஸ். வி. லிங்கம் ஆகியோர் முயற்சியால் 27—10—40 இல் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த அவ் விழாவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் வாழ்த்துக் கவிதை மெருகூட்டியது. அந்நாள் இளைய அரசர் அ. முத்தையா செட்டியார் அவர்களும் பிற அறிஞர்களும் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள். பகுத்தறிவுத் தந்தை பெரியார் தலைமை தாங்கிச் சிறப்புரை ஆற்றியது அவ் விழாவிற்கு மேலும் சிறப் பைத் தந்தது.

> " அந்த நாள் வேல்களெல்லாம்
> அழிதொழில் வேல்கள்—எங்கள்
> சுந்தர வடிவேலோ
> சுடரறி வாக்கும் செவ்வேல் "

என்று பகுத்தறிவுக் கவிஞர் டாக்டர் சாலை. இளந்திரையன் கனிந்து கூறும் படியாக இருந்த இவர், வணக்கத்திற்குரிய காந்தம் அம்மையார் அவர்களை மணம் புரிந்து கொண்டவுடன்,

> " கல்விவேல் மட்டுமோ? நற்
> காந்தமும் இணைந்த வேல் "

என்று அதே கவியுள்ளம் வியந்து கூறும் வண்ணம் உயர்ந்து நின்றார்.

வாழ்க்கை வண்டியின் ஒரு சக்கரமாக இருந்து வந்த நெ. து. சு. அவர்களோடு, வணக்கத்திற்குரிய காந்தம் அம்மையார் அவர்கள் இணைந்த பின்னர் அந்த வண்டி மற்றொரு சக்கரமும் பெற்றது. அன்று முதல் இன்று வரை சீரான வேகத்தில் தடம் புரளாமல்—பாதை மாறாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

இயங்கிக் கொண்டிருக்கும் இந்த வரலாற்றுக்குரிய நாயகனின் வாழ்க்கைப் பயணத்தில் எதிர்ப்பட்ட—எதிர்ப்படுகிற



சேலம் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்தபோது
கல்வித் தந்தையும் அவர்களது துணைவியாரும்.

நிகழ்ச்சிகள்தான் எத்தனை! எத்தனை! நவரசங்கள் பொருந்திய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றில் இருக்கத்தான் செய்கின்றன!

இவரைக் கொழுகொம்பாகக் கொண்டு நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் தமிழ்ப் பெருமக்கள் படித்துணர வேண்டிய வரலாற்றுப் பக்கங்கள் அல்லவோ! அவற்றில் எதைத் தொட எதை விட ?

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது தான் நோக்கம். அதாவது, சில சொல்லி பல நினைக்கத் தூண்டுவது. இயல்வதும் அதுவே.

அன்று எளிமையான குடும்பத்தில் பிறந்த இவர், தமிழ் நாட்டின் உயர்கல்வி அதிகாரி ஆனபோதும்—மத்திய அரசின் கல்வி ஆலோசகராக விளங்கியபோதும் — ஏன் இந்தியாவின் மூத்த பல்கலைக்கழகங்களில் ஒன்றுகிய சென்னைப் பல்கலைக் கழகத்தின் மாண்பமை துணைவேந்தராகப் பதவிவகித்த போதும் —அதே எளிமையைக் கடைப்பிடித்து வருவது—வாழ்வது தமிழ் மக்களுக்குத் தரும் படிப்பினை என்றுதான் கொள்ளவேண்டும்!

எளிமையான—அன்றும் இன்றும் அதே 'வள்ளுவன் இல்லம்'. காந்தியடிகள் கூட சபர்மதியில் அன்னை கஸ்தூரிபாவோடு ஒரு ஆசிரமத்தில்தானே வாழ்ந்தார்?

'மனித சமுதாயத்துக்கென நல்லவைகளைச் சாதிக்கத் துடிக்கும் மனிதனுக்குக் களைப்பாற இடமேது?' என்பது அறிஞர் புரூட்டோவின் கருத்து. அகவை அறுபதுக்கு மேலாகியும் இருபது வயது இளைஞனிடம் இல்லாத சுறு சுறுப்பு—செயல்வேகம் இவரிடம் ஒளிர்வதை ஒரு முறை சந்திக்கும் நல்வாய்ப்புப் பெற்றவர்கள் அனைவரும் அறிவர்!

" He is very loveable in nature, very unassuming and easily approachable to every body. He holds very progressive out look on social and cultural problems of our society " *

எவ்வளவு உன்னதமான உண்மைக் கருத்து.

- இவர், தன் சமுதாய சீர்திருத்தத்திற்கு, தன்னுடைய வழி காட்டியாக ஏற்றுக் கொண்ட வைக்கம் வீரர் — தந்தை

* Mr. V. Subbiah—தாமரைத்திரு நெ. து சுந்தரவடிவேலு மணி விழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்—சேலம்.

பெரியார் அவர்கள், நெ. து. சு. அவர்களைப் பற்றி என்ன கருத்து கொண்டிருந்தார் என்பதை அறிந்தால் — நம் கைகள் நம்மை அறியாமல் வணங்கத் தூண்டும்.

"அவரது உத்தியோக சேவையில் எந்த விதமான நேர்மைக் குறைவும் நாணயக் குறைவும் இல்லாமல் மிகமிகப் பரிசுத்தமாக இருந்து வந்திருக்கிறார் என்று உறுதியாகச் சொல்லக்கூடும். அவருக்கு இயற்கையான எதிரிகள்யார்? அவர்களது வசதி—வலிவு எவ்வளவு என்பதை யாவரும் அறிந்ததேயாகும். அப்படிப் பட்ட நிலையில் உத்தியோகத் துறையிலாவது, ஒரு சிறு குறையோ குற்றமோ சொல்லப்படாத தன்மையில் வாழ்ந்து வந்திருக்கிறார். அறிவுத்துறையில் பெரும் பகுத்தறிவுவாதியாகவும், சமுதாயத்துறையில் உண்மையாகவே சமதர்ம வாதியாகவும் இருந்து வருகிறார்"

"ஜாதியில் சைவராக இருந்தும் எந்தத் துறையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும், ஜாதி உணர்ச்சியைக் காட்டினார் என்று சொல்ல முடியாத அளவுக்கு நடந்து வந்திருக்கிறார் என்றும் நான் சொல்லக் கூடும் .." *

முதிர்ந்த அந்த அறிவாளியின் சொற்கள் ஒவ்வொன்றும் தூய்மையான தேனில் ஊறிய பலாச் சுளையன்றோ?

கல்வியாளன் என்பவன், சுயநலமின்றி, தன் இனத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டும். அவன்தான் கல்வியும் பண்பாடும் ஒருங்கே பெற்றவன். ஆம்! அந்த வகையில் தான் இவர் தம் வாழ்க்கையை நடத்தி வருகிறார்.

எல்லா உறுப்புக்களும் நிறைந்திருப்பவன் முழு மனிதன் அல்லன். பின்யார் முழு மனிதன்? இவரே விளக்கம் தருகிறார்:

"However talented able and successful one may be in his profession, he connot claim to be a full man. Unless he contributes some voluntary service for the good of the community."

எனவே, அவர் ஒரு முழு மனிதர் என்பதில் யாருக்கேனும் ஐயம் எழுமோ?

---

* தந்தை பெரியார்—தாமரைத்திரு. நெ. து. சுந்தர வடிவேலு மணிவிழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்—சேலம்.

“பலமுள்ளவர்களுக்குள்ள உரிமைகளை எல்லாம் பல மில்லாதவர்களும் பெற்றிருக்க வேண்டும். அதுதான் உண்மை யான நாடு”—என்பது காந்தியண்ணலின் அமுத வாக்கு. குடியரசு நாடான இந்தியாவில், மகாத்மா கண்ட கனவு இன்று மெல்ல நனவாகி வருகிறது. அதற்குக் காரணம், அரசியலாரின் சட்டதிட்டம் மட்டும் அல்ல; மகாத்மா காந்தியடிகள் மேலே குறிப்பிட்டபடி நெ. து. சு. அவர்கள் போன்ற முழு மனிதர்கள், பணக்காரர் பெறும் வாய்ப்பை ஏழைகளும் இன்று பெற்றுவர கைம்மாறு கருதாது உன்னதத் தொண்டு புரிந்து வருவதால் தான் என்றால் மறுப்பவர் உளரோ?

மேனாட்டறிஞர், சார்லஸ் ஜோன்ஸ் தன்னுடைய, ‘Life is Tremendous’ என்ற நூலில் ஒரு கருத்தை வலியுறுத்துகிறார்:

“work as hard as you can; get as much as you can; give as much as you can”

அதாவது, ‘எவ்வளவு உழைக்க முடியுமோ அவ்வளவு உழைத்து, எவ்வளவு ஊதியம் பெறமுடியுமோ அவ்வளவு பெற்று எவ்வளவு பிறருக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்க வேண்டும்’ என்பது அவர் கூறும் கருத்து. இதில் நடுநாயக மாக அமைந்துள்ள கருத்தில் மட்டும் நெ. து. சு. அவர்கள் வேறு படுகின்றார். எப்படி?

எல்லையின்றி உழைக்கிறார்; எல்லையின்றிப் பிறர்க்கு மனம், மொழி, மெய், பொருள் போன்றவற்றால் உதவுகின்றார். ஆனால் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெறாமல் குறைத்தே பெறுகிறார் என்பதை அறிஞர் உலகம் அறியும்.

இதற்கு என்ன காரணம்? அவர் ஊதியத்திற்காக உழைக்க வில்லை. உலகத்தின் நன்மைக்காக உழைக்கிறார். இதனைக் கூர்மையாகக் கவனித்து வந்தது ஓர் உள்ளம். பின்பு மெய்ம் மறந்து இசைக்கின்றது; ஆம். திருமதி சௌந்தரா கைலசம் அவர்களின் உள்ளம் இசைக்கின்றது:

“அழகு தமிழ்த் தேனவர்க்கு; குறளென்கிற
அறநூல்தான் அமுதவர்க்கு; அன்பு கொண்டு
குழைந்துருகும் மனமவர்க்கு; கொஞ்சம் கூடக்
குலையாத துணிவவர்க்கு; நேசம் பொங்கப்

பழகுவதே நெறியவர்க்கு ; பசியை மாற்றும்
பண்பாடே உயிரவர்க்கு ; கல்வி என்னும்
வழியருளல் தொழிலவர்க்கு என்பதால்தான்
விளைந்தநற் புகழவர்க்கு ; வேறே என்ன ?

என்று அந்த உள்ளம் விடுக்கும் வினாவிற்கு நம்மால் உடன் பாட்டுப் பதிலைத் தவிர வேறு பதிலை நினைத்துத்தான் பார்க்க முடியுமா ?

அறிவும் ஆற்றலும் அனுபவமும் மட்டுமே ஒருவரை மனிதராக அடையாளம் காட்டுவதில்லை. அவற்றோடு அடக்கமும் ஒழுக்கமும் இணைந்தால்தான் அவரை அடையாளம் காணமுடியும். அவ்வாறு அடையாளம் கண்டு கொள்ளப்பட்டவர்தான் நெ. து. சு. அவர்கள்.

"திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் வெறும் வாய்ப் பேச்சு வீரர் அல்லர்; அவருடைய வாழ்க்கையில் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருக்கின்றன. அவர் தீவிர சுயமரியாதை உணர்வு கொண்டவர். கடவுள், மதம், சாதி, புராணங்கள் பெயரால் மனிதர்களை ஏமாற்றும் செய்கையை வீரத்துணிவுடனும், பகிரங்கமாகவும் எதிர்ப்பவர். அவர் அணுகும் ஒவ்வொரு பிரச்சனையிலும் உண்மையின்—நியாயத்தின் பக்கமே அவருடைய தீர்ப்பு இருக்கும்." *

இந்த ஆய்வுரை தமிழ்நாடு அறிந்த உண்மை.

ஐந்து வியாழ வட்டம் கொண்ட ஒரு பொருள் பொதிந்த பெருங்கால வட்டம் முழுவதும்-இளமை தொட்டு உடையாலும் நடையாலும் சொல்லாலும் செயலாலும் கல்வியும் பண்பாடும் வளர்த்துத் தாமும் நிரம்பித் தம் பண்பினைத் தமிழகத்தும் நிரம்பச் செய்து விளங்கும் பண்பாளருக்கு ஒரே ஒரு குறை—இப் புவி வாழ்க்கையில் உண்டென்றால் அது அவரது அருமந்த புதல்வன் திருவள்ளுவனின் அகால மறைவு.

திருவள்ளுவன் என்ற செந்தமிழ்ச் சான்றோன் தமிழகத்தில் வாழ்ந்து, தமிழ் மறை அருளி பூதவுடலை அழித்துக் கொண்டு புகழுடம்பை நிறுவியமையைப் போலவே சுந்தரவடிவேலு—

---

* திரு. சொ. முத்தையா — தாமரைத்திரு. நெ. து. சுந்தர வடிவேலு மணிவிழா மலர், கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர், சேலம்.

காந்தம் அம்மையார் ஆகியோர்க்கு மகவாக அவதரித்த இந்த இருபதாம் நூற்றுண்டுத் திருவள்ளுவனும் தமிழகத்தில் மதிய உணவு, சீருடை, ஞானத் தந்தை ஆகிய திட்டங்கள் தோன்றக் காரணமாக இருந்துவிட்டுப் புகழுடம்பை விட்டுப் பூதவுடம்பை மறைத்துக்கொண்டான். திருமதி சௌந்தரா கைலாசம் கூறுகிறுர். அதைப் பற்றி,

"..... எங்கோ போய் மறைந்தும் மறையாது புகழின்
மீண்ட புத்திரனை வள்ளுவனென்றுர்வம் பொங்க
நாமமிட்டுக் கூப்பிட்ட அறிஞர்"

என்கின்றுர். ஆம். மறைந்த திருவள்ளுவரைத்தான் மீண்டும் இவர் தன் மகனுகப் பெற்றுர்!

நெ. து. சு. அவர்கள் ஒரு அப்பூதியடிகள். அந்தக் கோணத்தில் பார்க்கிறுர் தமிழறிஞர் ந. சுப்புரெட்டியார் அவர்கள். சேக்கிழார் காவியச் சுவையுடன் காட்டும் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் அப்பூதியடிகள். அவர் திருநாவுக்கரசு நாயனுரிடம் பேரன்பு பூண்டு ஒழுகியதோடு, அவர் காட்டிய வழியில் நின்றுர்.

அப்பூதியடிகள், ஆளுடைய அடிகளின் வாழ்க்கையை ஒரு குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்ததைப் போலவே, சுந்தரவடிவேலனுரும் உலகப் பொது மறை அருளிய வள்ளுவப் பெருமான் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது போன்றுள்ள திருக்குறளைக் குறிக்கோள் பொருளாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். வள்ளுவரின் வாழ்க்கை நெறி அவருடைய உள்ளத்தைப் பிணித்து விட்டது. குறள் மணியின் கருத்தைத் தன் சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் கடைப்பிடித்து வருகிறுர். தாம் வாழும் இல்லத்திற்கு 'வள்ளுவன் இல்லம்' என்றும், தமது ஒரே மகனுக்குத் திருவள்ளுவன் என்றும் பெயரிட்டு அப் பெருமான் பால் தமக்குள்ள பேரன்பினைப் புலப்படுத்துவராயினர்.

மொத்தத்தில் நெ. து. சு. அவர்களை ஒரு சொல்லோவியமாகத் தீட்டுகின்றுர் பேராசிரியர் திரு. ந. சுப்பு ரெட்டியார். அவர்கள் தந்த ஓவியம் இதோ:

" நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்
நல்லிளங் கோவுயர் கபிலன்
கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்
குலவிய செந்தமிழ்த் தாயின்

பற்றுறு வயிற்றில் திருவொடு தங்கிப்
பண்பொடு தோன்றிய செல்வர்
கற்றவர்க் கினியர்......"

அம்மட்டோ? சமயச் சிக்கலுக்கும் சாதிச் செருக்கிற்கும், அரசியல் அவலத்திற்கும் இடமின்றி, ஒன்றுகப் படித்து நன்ருக வாழ வழிகாட்டுபவர். எவ்விடத்தில் எதைப் பேச வேண்டும்? எப்படிப் பேச வேண்டும்? எவ்வளவு நேரம் பேச வேண்டும்? என்று உணர்ந்து ஏமமுறப் பேசி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துபவர்.

முன் பின் அறிந்திராத எந்த ஒரு அற்ப மானிடப் பிறவி இவர் திரு இல்லத்திற்குச் சென்ருலும் அறுபதைக் கடந்த அந்த அறிஞர் ஏறு, பதினெட்டு வயது இளைஞன் தன் பள்ளித் தோழர்களைக் கண்டதும் ஓடி வந்து வரவேற்பதைப் போல் வரவேற்பது வியப்பில் ஆழ்த்தும் செய்தியாகும்.

பிச்சிப்பூ மலர்வது போன்ற புன்சிரிப்பு. இதமான வரவேற்பு; கனிவான உபசரிப்பு; காதோடு காது வைத்தல்ல; இதயத்தோடு இதயம் வைத்து மற்றவர்கள் சொல்வதை அனைத்தும் பொறுமையின் சிகரமாகிக் கேட்கும் பண்பும், மற்றவர் சொல்வதில் நியாயம் இருந்தால் ஆவன செய்வதாகத் தெரிவிக்கும் பண்பும், இல்லாவிட்டால் தாம் சொல்வது நீதிக்குப் புறம்பானது என்று சொன்னவர்களே உணருமாறு எடுத்துரைக்கும் தெளிவும் துணிவும் இவரிடம் மிளிரும்.

உண்மைக்கும் உழைப்பிற்கும் வழங்குகின்ற மரியாதை—கொடுமைக்கும் அநீதிக்கும் வளைந்து, கொடிபோல் ஆகாத அஞ்சாமை—ஊழி புரண்டாலும் சொன்ன சொல் புரளாத நேர்மை—வாழ்வின் எல்லாத் துறைகளிலும் எளிமை—அந்த எளிமையிலும் அழகு தோன்றத் துலங்கும் அற்புதம்—இவைகளே நெ. து. சு. அவர்கள் என்ற சான்ருேர்—என்ற பின்பும் மேலும் விளக்கம் தேவையோ?

பணவசதி - அதிகாரம் - பலன் இம் மூன்றையுமே அளவுகோலாக வைத்து அளந்து மற்றவர்களுடன் அளவுக்குத் தக்கபடி பழகும் இந்த மாயா உலகில் நெ. து. சு. அவர்கள் ஒரு நேர்மாறு என்பது புகழுரையோ புனைந்துரையோ அன்று; பொருளுரை.

இவர் தனித்தனியே பலவிதமான மனிதர்களைச் சந்திக்கிருர் நாள்தோறும். அப்பொழுது நீருற்றைச் கண்டறியும் நிபுணன்

போல்—தமிழர்களை இனம் காண்கின்ற நிபுணராக விளங்குகின்றார். 'இவன் நன்றாகப் படித்து முன்னுக்கு வருவான். இவனை நாம் ஊக்குவிக்க வேண்டும்' என்று முயற்சி செய்வதில் மிகத் தேர்ந்தவர்; அவர்தம் கணிப்பும் வீணாகியதில்லை.

'உழைப்பின் மறுவடிவம்' என்று இவரைச் சொன்னால், அதை மிகையென்று கூற முடியுமா?

"He is a great as a man of action and born leader though destined to be an administrator. What is more important is that he has a philosophy of life in the light of which he lives and shapes his life in our independent India."*

"இந்தப் பொருளுரைக்கு இலக்கணம் அன்றோ, இவர்? — A Ship is safe in the harbour, but it is not meant to be so"—என்பதைப் போல் இவர் சுக வாழ்க்கைக்காகப் படைக்கப் பட்டவர் அல்ல; உழைப்பு, கடின உழைப்பு, ஓயாத உழைப்பு இவையே இவரது சித்தாந்தம். அத்துடன் நில்லாத தம்மைச் சேர்ந்தோரையும் அத்தகைய உழைப்பில் ஈடுபடுத்தி வெற்றி பெறச் செய்யும் மந்திரவாதி எனில் மறுப்பார் யார்?

வாழ்விற்கு ஆண்டுகளை இணைப்பவர்கள் நாட்டில் பலர் இருக்க ஆண்டுக்காக வாழ்வைச் சேர்ப்பவர்கள் சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். அவ்வகையில் நம்மிடையே வாழ்ந்து வழிகாட்டும் ஒளி விளக்குத்தான் இவர்.

இவர், Old in age, but young in spirits. இவரை முழுமையாக உணர்ந்த திரு. என். சின்னசாமி நாயுடு என்ற நல்லார் வியப்பால் வெளியிடுகின்றார்:

"A saint of modern time has classified into three categories. Men are mere labourers if they live for themselves only. One might hold a high position but he will be a mere labourer if he cared for himself and his wife and Children only.

---

* Dr. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்—Padmasri. N. D. Sundaravadivelu, 61st Birth day Commemoration, P. S. G. Educational Institutions.

The second category is the worker. There are social workers, Religious workers—Workers in many areas of life. They might think of themselves and their own good; but they have the distinction of thinking of others and carrying for them too and working in their behalf. These workers are superior people for they rise above self.

But the third category is a rare one. People in this group do not think of themselves, their thoughts are for others and their energies are directed to work for others and their geniuses devise movements for the benefit of people at large. N. D. S. does belong to the third category or tribe of rare, enlightened beings for they strive, to pluck the thistle and plant a flower where a flower, would grow." *

இவ்வாறு பிறருக்காக வாழ்ந்து வரும் இந்த நல்லாருக்குச் சில சமயம் அடங்காச் சினம் வரும். எப்போது? தம்மால் மேலும் உதவ முடிய வில்லையே என்ற நிலை வரும்போது !

ஆம். வருவோர்க்கெல்லாம் வள்ளல் போன்று இயன்ற வரை உதவி வரும் இந்தப் பெருந்தகைக்கு மேலும் உதவ முடிய வில்லையே என்றுதான் வருத்தங் கலந்த சினம் பிறக்கும். அந்தச் சினத்தையும், தமது சீரிய வாழ்க்கையில் சம பங்கு வகிக்கும் காந்தம் அம்மையார் அவர்கள் மீதுதான் காட்டுவார்.

எப்படி? அவரின் எளிய இரக்க சிந்தனையையும், அது பிறக்கும் சிந்தையையும் புரிந்துகொண்ட பலர் அவரிடமிருந்து உதவி பெற்றதுடன் நிற்காமல் ஏமாற்றவும் முயலும் போதும்—நல்லமைச்சர் போன்று அருகிருந்து,

"பலபேர் ஏமாத்தருங்க, இந்த நாள்லே தகுதி பார்த்து உதவணும்" என்று அம்மையார் அவர்கள் நினைவூட்டுவார்கள். அந்த அறிவார்ந்த நினைவூட்டலும் ஐயா அவர்களின் இரக்க சிந்தைக்கு வேதனையூட்டுவதாக அமைந்துவிடுகிறதென்றால் இவர்களின் 'உதவ நினைக்கும் பேராசை'யை யாரே அளவிட முடியும் !

இவ்வாறு அவரிடம் சினக்குறிப்பு தோன்றும் போதெல்லாம —இரண்டாம் நூற்றாண்டு வள்ளுவனின் வழியில் வாழ்க்கை

* Padmasri. N. D. Sundaravadivelu 61st Birthday commemoration Volume, P. S. G. Educational Institutions.

நடத்திவரும் சான்ளுேரின் மகனும் இருபதாம் நூற்றுண்டு வள்ளுவன் (அவரின் திரு மகனைத்தான் குறிப்பிடுகின்றேன்) என்ன செய்வானும்,

"இனிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற குறளைச் சொல்வானும். தந்தையோ மகுடி கேட்ட நாகம் போல் அமைதி கொள்வாராம். என்னே! இந்த இரு வள்ளுவப் பெருமக்களையும் ஈன்றெடுத்த பெற்றேர்களையும் இருகரம் கூப்பி வணங்கத் தோன்றுகிறதன்ருே! கடமை கண் போன்றது என்போம். ஆனுல், கடமை கண் போன்றது மட்டுமல்ல, இதயம் போன்றது மட்டுமல்ல; தன் ஒரே மகன்—அறிவார்ந்த மகன் வள்ளுவன் போன்றது மட்டுமல்ல; அந்த ஆசை வள்ளுவனைவிட உயர்ந்த ஒன்று என்று வாழ்ந்து காட்டியவர் யார்?

வள்ளுவனுக்குப் பத்து வயது இருக்கும்; அனல் பறக்கும் காய்ச்சலின் உச்சக் கட்டத்தில் படுத்திருக்கிருன் அச்சமயத்தில் கூடத் தன் அருமைச் செல்வன் அருகில் இருக்கவில்லை தந்தை. உத்திரமேரூருக்கு அருகில் உள்ள களியாம்பூண்டி என்ற ஊரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிக்குச் சென்று விட்டார்.

சரி. அடுத்த நாள்—வள்ளுவனுக்கு மேலும் காய்ச்சல் வளர்ந்து; தணியவில்லை, அன்ருவது உடனிருக்கக் கூடாதா! அதுதான் இல்லை. கோட்டையில் நடந்த ஒரு மாநாட்டிற்காகச் சென்றிருந்தார்.

அன்னை காந்தம் அம்மையார் அவர்கள்தான் மிகுந்த துயரத்தோடும் தாளாத பாசத்தோடும் அருமை வள்ளுவனை ஒரு நர்ஸிங்ஹோமில் சேர்க்கப் புறப்பட்டார். அப்பொழுதுதான் அருகில் வந்தார் தந்தை. வந்து என்ன செய்ய?

இடையில் ஒரு மணிநேரம், இறைவனுக்கும், சுந்தரவடிவேலு காந்தம் அம்மையார் தம்பதிகளுக்கும் போராட்டம் நடந்தது. அறிவின் சிகரமாம் இந்தப் பிள்ளை உங்களுக்கா எனக்கா என்பதே இறைவன் நடத்திய போராட்டம். இறுதியில் இறைவன் வென்று விட்டான். ஆம், வள்ளுவன் இறைவனிடம் சேர்ந்துவிட்டான்!

பின்னர் இந்த இருவர் இதயத்திலும் ஒரு சுவடு—வள்ளுவன் வந்த சுவடுதான் பதிந்திருக்கிறது, அப்புனிதச் சுவடுதான்

இவர்களை வாழ வைக்கிறது. இவர்களால் பலர் வாழ்வும் பெறுகிருர்கள்!

இவ்வளவும் ஏன்? கடமை உழைப்பு என்று வரும்போது தன் மனைவி—மக்கள் என்பதை யெல்லாம் மறந்து, தமிழகம் கல்வி நிலையில் உயர்நிலை அடையவேண்டும் என்று பணியாற்றி வந்தார். இன்றும் ஆற்றி வருகின்ருர் என்பதை விளக்கத்தான்!

"எந்த மனிதனது இதயத்தை வேண்டுமானுலும் அலசிப் பாருங்கள். பிறரிடமிருந்து தனித்து நிற்கக் கூடிய ஒரு பகுதி அங்கே ஒளிந்திருக்கும்"—என்று கூறியிருக்கிருர்அறிஞர் இப்சன்.

கல்விநெறிக் காவலர் அவர்களின் இதயத்தையும், வணக்கத்திற்குரிய அம்மையார் அவர்களின் இதயத்தையும் அலசிப் பார்த்தால் வள்ளுவனின் வளமான நினைவுதான் புதைந்திருக்கிறது என்பதை அறியலாம்.

ஒருகால் இவர்களை மனத்தில் வைத்துத்தான் இப்சன் இக் கருத்தை உதிர்த்தாரோ?

இன்று நாட்டில் பெரியவர்கள் என்று சொல்லப்படுவோரெல்லாம் 'ஊருக்கு உபதேசம்; அது தனக்கில்லை' என்று வாழ்ந்துவரும் பெரியவர்கள். ஆனுல் துணைவேந்தர் நெ. து. சு. பெருந்தகை பிறருக்குக் கூற நினைப்பதை தான் முதலில் நினைந்து பார்த்து அதனை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடிகிறதா? என்று உற்று நோக்கி, முடிகிறது—அதனுல் நன்மை ஏற்படுகிறது—முன்னேற வாய்ப்பிருக்கிறது என்று அறிந்ததை மட்டும்தன் பட்டறிவுக்குப்பின் கனிவோடும் துணிவோடும்-சொல்கின்ருர் ...

நாட்டில் பேச்சாளர் என்று போற்றப்படுவோரிடம் எல்லாம் ஏதேனும் ஒருவகைச் சிறப்பைத்தான் காண்கின்ரேம். அதாவது அவர்கள் பேச்சில் கனிவிருக்கும்; இல்லையேல் கருத்திருக்கும்; இல்லையேல் தெளிவிருக்கும்; இம்மூன்றும் சேர்ந்து சிலரிடம்தான் அமைந்திருக்கும். அந்தச் சிலரில் தலையாயவர் நம் துணைவேந்தர் அவர்கள்.

இவர்களது பேச்சில் கனிவு, தெளிவு, கருத்து மூன்றும் இருப்பதோடு ஓசைநயம் கலந்த எடுப்பான குரலும் இருக்கிறது. எனவே, கேட்பவர் நெஞ்சம் பசுமரமாக இல்லாவிட்டலும் இவர்களது கருத்துக்கள் ஆணிபோல் ஆழப் பதிந்து விடுகின்றன.

சமய ஆய்வு மாநாடு அமெரிக்காவில் உள்ள சிகாக்கோ மாநகரில் தொடங்கியபோது முற்றும் துறந்த பல நாட்டுப் பெரியவர்கள், செல்வம்—செல்வாக்கு ஆகியவற்றை மறவாமல் 'Ladies and gentlemen' என்று விளித்துத் தத்தம் உரையைத் தொடங்கிய போது, இந்தியத் திருநாட்டின் தெய்வச்சுடர் சுவாமி விவேகானந்தர் மட்டும், "சகோதரர்களே . சகோதரிகளே!..." என்று தம் சொற்பொழிவைத் தொடங்கினர்.

அவையில் கூடியிருந்தோர் அனைவரும் துறவு நெறியில் தூய மனிதராக நின்ற சுவாமிகளைப் போற்றினர். சுவாமிகள் "சகோதரர்களே....சகோதரிகளே !" என்று விளித்ததும் மின்னலில் தாக்குண்டவர்கள்போல் ஒரு கணம் மருட்சி அடைந்தனர். பற்றற்ருன் பற்றுடன் சொன்ன அந்தச் சொல்லுக்கு —அன்பின் ஊற்றாக வெளிப்பட்ட அந்தச் சுவையான சொல்லுக்கு அவ்வளவு வலிமை இருந்தது!

அதைப்போலத்தான் கல்விநெறிக் காவலர் அவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் "தம்பிகளே...தங்கைகளே!" என்று விளித்து அவர்களின் கவனத்தை ஈர்த்த பின்பே தன் கருத்து மழையைப் பெய்வார். அந்தச் சொற்களில் அவ்வளவு உடன் பிறப்புப் பாசத்தைக் குழைத்துச் சொல்லுவார். மாணவராயினும் பெரியவர்களாயினும் தேனில் விழுந்த ஈக்களைப்போல் திளைத்திருப்பார். அன்பெனும் வலைக்குட்பட்டுத் தத்தளிப்பார்.

இன்று, எண்ணற்றவர்க்கு வாழ்வளித்துவரும் இவர்களின் வாயினின்றும் மூதன் முதலில் வெளிப்படும் சொற்களை நோக்குங்கள் !

"நீங்கள் வாழப் பிறந்தவர்கள். உங்கள் வாழ்க்கை வாழ்வதற்கே தம்பிகளே! தங்கைகளே! நீங்களும் நானும் மொழியால் தமிழர்; நாட்டால் இந்தியர்; இனத்தால் மக்கள்; இதுவே முழு உண்மை; இதைச் 'சிக்' கெனப் பிடியுங்கள்; செம்மையாக வாழுங்கள்."

இவற்றில் ஏதேனும் பொருளற்ற சொற்களைக் காண முடியுமா? வள்ளுவர்தம் இரண்டடிக் குறளில் ஏழு சீர்களில், அவற்றில் உள்ள ஒவ்வொரு அசையும் பொருள் உள்ளதைப் போல், வள்ளுவர்வழி நிற்கும் துணைவேந்தர் நெ. து. சு. அவர்களின் சொற்கள் ஒவ்வொன்றும் பொருளோடு நிற்பதைக் காண நமக்கு வியப்புத் தோன்றவில்லை, மகிழ்ச்சியால் உள்ளம் துள்ளுகிறது.

அவரது உதவியால் பல இளைஞர் வாழ்க்கை பெற்றிருப்பது நாடறிந்த உண்மை. அவரது உரையால் ஊக்கம் பெற்றவர் பலர். 'நமக்கு வாழ்வும் ஒரு கேடா' என்று விரக்தி அடைந்து தற்கொலை முயற்சி வரை சென்று நின்றவர்களைக் கூடத் தடுத்து நிறுத்தியது இந்தச் செம்மலின் சீருரைகள் என்றால் மிகையில்லை.

'எல்லோரும் வாழ்வோம்' என்று இளைஞர்கட்கென்றே ஒரு இனிய நூல் எழுதியுள்ளாரே!

"உன்னை நீ நம்பு! வாழ்க்கையின் உயிர்நாடி நம்பிக்கை. உன்னிடம் அறிவு உண்டு, ஆற்றல் உண்டு, மக்கட் பண்புண்டு இவை உன்னில் நீறுபூத்த நெருப்புப்போல் இருகின்றன என்று நம்பு. தன்னம்பிக்கை இல்லாதவன் எதையும் செய்ய முடியாது. சிறந்தது எதையும் பெற முடியாது. ஆகவே, உள்ளத்தனையது உயர்வு என்பதை மறவாமல் நம்பிக்கையோடு பாடுபடு."

சரி மேற்கூறியவற்றில் ஒரு இளைஞன் நெஞ்சில் நம்பிக்கை பதிந்து விடுகிறது. நம்பிக்கை மட்டும் வாழ்வாகி விடுமா? முடியாதே! கூட உழைப்பும் வேண்டுமன்றோ! எனவே, மீண்டும் கூறுகின்றார்.

"பகலவனை உன் விழிப்பிற்காகக் காத்துக்கொண்டிருக்கச் செய்யாதே? நீ அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கப் பழகிக்கொள். அதாவது விடியற்காலையில் எழுந்திருக்கக் கற்றுக்கொள். எந்நாளும் இந்தப் பழக்கத்தைக் கைவிடாதே. இதனால் விளையும் நன்மை அளவிடற் கரியது. இதைக் காலம் காட்டும் பட்டறிவால் சொல்கிறேன் என்பதையும் உணர்வாய், தம்பி!"

எனவே, ஓய்ந்திருந்த இளைஞன் உழைக்க ஆரம்பிக்கிறான். ஊதியம் பெறுகிறான்; வாழ்கிறான். அவன் தன் உள்ளம் போகும் படி எல்லாம் வாழலாமா? வாழமுடியுமா என்றால், அதற்கும் வழி கூறுகிறார்:

"எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்பது இலக்கியத்தோடு உறைந்து விட்டால் மட்டும் போதாது, மேடையோடு நின்று விட்டால் மட்டும் போதாது. அது வாழ்க்கையில் பூப்பதற்கு எழுத்தோடு குந்திவிட்டால் மட்டும் போதாது—நடைமுறையில் வாழ்ந்து காட்ட வேண்டும்."

அம்மட்டோ? "வரும் இளைய பாரதத்திற்கு நாம் தாயாக வேண்டும். நல்ல பாரதத்தை உருவாக்கும் பொறுப்பை நாமே

சுமக்க வேண்டும். யாரோ சுமப்பார்கள் என்று ஏமாந்து விடாதே. யாரோ சுமந்து பெற்ருல், யாருக்கோ சொந்தமாகி விடும். வறுமையற்ற பாரதத்தை, வளம் நிறைந்த பாரதத்தை உருவாக்க இத் தலைமுறையே தாயாகிப் பத்தியம் காக்க வேண்டும். கடும் பத்தியமும் காக்க வேண்டும். எத்தனை நேர்ந்தாலும் அத்தனைக்கும் ஊடே அடிவயிற்றிலே வைத்துப் பத்திரமாகப் பொறுப்பைக் காக்கும் போக்கைத் தேடிக் கொள்வோம், ஒளி படைத்த கண்ணினேரே !''

இவ்வாறு இவரது 'விளிசங்கு' இளைஞர் ஊடே பாய்ந்திருந்த அச்சத்தைப் போக்கி ஆண்மையைப் புலரச் செய்தது.

"மனிதன் வாழ—பட்டம் பதவி அதிகாரம் மட்டும் போதா. மனிதத்தன்மை மக்கட்பண்பு தேவை''—ஆம், வாழ்ந்து காட்டிக் கொண்டு வருபவர் வேறு எப்படிக் கூற முடியும்?

"மனம் உடையவன் மனிதன்; மனம் உறுதியுடையது மட்டு மன்று, ஆழமுடையது மட்டு மன்று, ஈரமுடையது, உருகும் தன்மையுடையது. துன்பத்தைக் கண்டு துடிக்கக் கூடியது. அன்பைப் பொழியக் கூடியது. அருளை வழங்கக்கூடியது. பிறிதின் நோய் தந்நோய் போல் நோக்கக் கூடியது. இத்தன்மைகளைச் சரியானபடி வளர்ப்பாயாக. அப்போது முழுமனிதன் ஆவாய்.''

அந்த இளைஞன் படிப்படியாக அவர்தம் எழுச்சி உரையை மேற்கொண்டு இப்போது முழு மனிதனுகிக்கொண்டு வருகிருன். இவ்வாறு ஒவ்வோர் இளைஞனையும் கன்னியரையும் வாழ அழைக்கிருர்; ஏன் மக்கள் இனத்தையே அழைக்கிருர்.

"மக்களினத்தோரே, வாரீர்! தொண்டு செய்ய வாரீர்! சாதிச்சேறு போக்க வாரீர். சமயவெறிக் காய்ச்சல் தணிக்க வாரீர்! மொழி வலிப்பை நிறுத்த வாரீர்! ஓர் நிலையாக வாழ வாரீர்! பகுத்துண்ண வாரீர்! சேர்ந்து வாழவாரீர்! அணில்களாக இருந்து நிலைக்கேற்ப சமதைத் தொண்டு புரிவோம் வாரீர்! மானிட மலர்களே !'' என்பது நல்வாழ்க்கையை விரும்பும் மக்களினத்திற்கே விடுத்த அன்பழைப்பு. இது போன்ற அழைப்பு இன்று வரை எந்த அறிஞரும் அரசரும் விடுக்காத அழைப்பு!

வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தித் தந்ததோடு, உழைக்க வழியையும் ஊக்கத்தையும் தந்துவிட்ட பின்னரும் சிலர் முனகுகிருர்கள். என்னவென்று?

"நான் உழைக்கத்தான் நினைக்கிறேன் எனக்கிருக்கும் பிரச்சினையில் திட்டமிட்டுச் செயல்பட நேரம் இல்லையே!"

இந்த முனகலைக் கேட்ட பின்னர் துணைவேந்தர் பெருந்தகை அடித்துச் சொல்கிறார். "உங்களுக்கு நிறைய நேரம் உண்டு. இல்லை என்று நீங்கள் சொன்னால் உங்கள் நேரத்தை ஒழுங்கு படுத்திக் கொள்ளவில்லை என்றுதான் சொல்வேன்."

உண்மைதானே! வாழ்க்கையில் வெற்றிபெறத் திட்டமிட்டு முன்னேறுவதைவிட்டு—கண நேர இன்ப உணர்வுக்கு ஆளாகும் பல்வேறு திக்குகளில் நேரத்தைச் செலவிட்ட பின்னாலே உழைப்பதற்கு எங்கிருந்து நேரம் வரும்? இவ்வாறு அவர் செயலுக்கு மட்டும் வழி சொல்லவில்லை; சிந்தனைக்கும் வழி சொல்கிறார்.

"காலம் இல்லை என்பவன் கணக்குத் தெரியாதவன்"—உண்மை!

"நேரம் இல்லை என்பவன் நேர்மை இல்லாதவன்"—முற்றிலும் உண்மை!

"ஓய்வு இல்லை என்பவன் ஒழுங்கு தெரியாதவன்"—தேர்ந்தெடுத்த உண்மை!

இவ்வாறு கணக்கிட்டுக் கணம், கணம் முன்னேறினால் வறுமையை வருத்தலாம் என்கிறார், அப்படி வாழ்ந்து காட்டுபவர்!

வறுமை ஒரு சமூக நோய் அதிலிருந்து தனி மனிதன் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தனி மனிதனால் அதை ஒழிக்க முடியாது. மக்களின் கூட்டு முயற்சியால் மட்டுமே வறுமையை அகராதிச் சொல்லாக்கலாம் என்று அறைகூவல் விடுக்கிறார். இவரது சிந்தனை இரு நோக்குடையது. 1. கல்வியை எப்படிப் பரப்பலாம். 2. வறுமையை எப்படி விரட்டலாம்.

இந்த இரண்டிற்குத் தானே இன்று உலகெங்கிலும் உள்ள அறிவியலாரும், அரசியலாரும் பாடுபடுகின்றனர். இவற்றைத் தமிழ் நாட்டில் தன்னந் தனியாக நின்று, தனக்கேற்ற முறையில் விளம்பர வலைக்குள் சிக்காமல் இயன்றவரை இடைவிடாது நாள் தோறும் செய்து வருகிறார் ஒருவர்—அந்தத் தனி மனிதர் நமது துணைவேந்தராம் கல்விநெறிக் காவலரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

ஒரு நாடாளும் வேந்தன் முடிக்க வேண்டிய இல்லாமைப் பணியை ஒரு பல்கலைக்கழகத்தை ஆளும் துணைவேந்தர் முடிக்க முனைகிறார் என்றால், எந்த ஒரு செல்வந்தனும் நினைத்துத்தான் பார்க்க முடியுமா?

எப்படி நம்மால் இவ்வளவு துணிவாக முடிவெடுக்க முடிகிறது? இவரது அலுவலக வேலைப் பளுவுடன்—உதவி கேட்டு வரும் அன்புத் தொல்லைப் பளுவும் சேர்ந்து நெருக்கும்போது இவரது இதயம் படும் பாட்டினை இவரது கைவிரல்கள் எழுத்துக்களாக வடிக்கின்றன.

"மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் என்றுமில்லாத—எதிர்பாராத நிம்மதியான நாள். காலை மணி பத்தாகியும் அன்பர்கள் யாரும் வரவில்லை! இதுவே நன்னாள்! வாழ்வில் ஒரு நாள் என்று உள்ளூர மகிழ்ந்து கொண்டிருந்தேன்—"

மேற்காணும் வரிகளை உற்று நோக்கி உணர்ந்து படியுங்கள்! அன்று மட்டும் பத்து மணி வரை யாரும் வரவில்லை, ஆனால் அதற்கு முன் எத்தனை பேர்கள் எப்படியெப்படி வந்து கிட்டுயிட்டு நெருக்கி அவரைத் தர்ம சங்கடப் படுத்தியிருப்பார்கள்! என்பதை அந்த மூன்று மணி நேர ஓய்வை அனுபவித்த இந்த உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் பொங்குவதில் இருந்தே நம்மால் உய்த்துணர முடிகின்றதன்றோ?

எந்த நேரத்திலும் காண வருவோரை—அவர்கள் யாராயினும் வெறுப்புடன் நோக்காது, 'அன்பர்கள்' என்று அழைப்பதை எண்ணின், மனித இனத்திற்காக அந்த 'தெய்வ மனிதன்' கொண்டிருக்கும் அன்புணர்ச்சிக்கு இஃது ஒரு சான்று அன்றோ?

ஆம்! பொறுப்புச் சுமந்தும் சிரிப்புப் போகாத அவரின் அன்பின் ஆழத்தை அளக்க முடியாமல்—பின்னும் முயற்சி செய்வது, கடலில் ஆழத்தை அளக்க முயற்சி செய்வது போலத்தான்.

"இருப்பது வேறு; வாழ்வது வேறு; இருப்பது உயிரோடிருப்பவர்கள் எல்லோரும் செய்வது, வாழ்வது அவர்களிலே ஒரு சிலரே செய்வது. மற்றுமுள்ள பலரோ கட்டை வண்டிக்கு முன் பளு, பின் பளு."

இது, வாழ்க்கைக்கு அவர் வகுத்த விளக்கம். விளக்கம் தந்த இவர் தன் வாழ்க்கையைக் கட்டை வண்டிக்கு முன் பளு, பின் பளுவாக அமைத்துக் கொள்ளாமல், அவர்கள் தரும்

பளுவை ஏற்றுக் கொண்டிருக்கும் கட்டை வண்டியாக இன்று இருக்கின்றார்.

நாகரிக மோகத்தில் ஈடுபட்டு புலியைப் பார்த்துச் சூடு போட்டுக் கொண்ட பூனைகளாக அலைந்து திரியும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு எழுத்து மூலமாகவும் நடைமுறை எடுத்துக் காட்டு மூலமாகவும் வாழ்க்கையை விளக்கிக் கொண்டிருப்பது, இக் கால கட்டத்தில் வாழ்வோர்க்கும், வருங்காலச் சமுதாயத்தினருக்கும் ஒரு வரப் பிரசாதம் அன்றோ!

"எளிதில் கிடைக்கும் பாலை விடுத்து, காசைக் கரைக்கும் காப்பியில் மூழ்குவதும், உயிர் ஊக்கம் பெறுவதற்குப் பதில் புகை ஊக்கம் தேடுவதும், பண்பாடி மகிழாமல் கண் நோகப் படம் பார்த்து ஏங்குவதும், உடலை மறைக்கும் உடையை விட்டு ஆளைக்காட்டும் ஆடைக்கு அலைவதும் வாழ்க்கைத் தர உயர்வு என்று எல்லோரும் எண்ணியிருந்தால் இந்த நேரம் என்ன ஆகியிருக்கும்? இயற்கைத் தேவைகளை நிறைவு படுத்துவதா? ஆடம்பரப் பழக்க வழக்கங்களை வளர்ப்பதா? எது வாழ்க்கைத் தர உயர்வு?"

ஏழை எளியோர் வாழ்க்கையில் ஈடுபாடும் அக்கறையும் கொண்ட ஒரு ஈகையாளர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார். நாம் என்ன பதில் கூறுவோம்? தெளிவற்ற சிந்தனையினால் ஏற்கனவே இருக்கும் வறுமையை மேலும் விரிவு படுத்துகிறோம். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்கிறோம் என்பதே அவர்கள் நம்மைப் பார்த்து வீசும் குற்றச் சாட்டு!

நாகரிக மோகத்திற்கு அடுத்து, சீரான வாழ்வில் ஒரு ஆட்டத்தை உண்டு பண்ணும் நிகழ்ச்சி—மனிதன், தானே கற்பித்துக் கொண்ட நிகழ்ச்சி—விழாக்கள்! இது எப்படி இருக்கிறதென்றால், ஒரு மனிதன் ஒன்றுமே இல்லாத போது புகை பிடிக்கக் கற்றுக்கொண்டு, பிறகு புகை பிடிக்கவே குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியது போன்றிருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட விழாக்களும் மனித சமுதாயத்திற்குச் செம்மையைச் சேர்க்காமல் சிறுமையைச் சேர்க்கிறது என்பது அந்தச் சான்றோரின் நிதரிசன உண்மை வாதம்.

'விழாக்கள் வீட்டோடு நின்றனவா? தெருவெல்லாம் விழாக்கள்; ஊரெல்லாம் விழாக்கள்; நாடெங்கும் விழாக்கள்; எதற்கு விழா? இதற்கு விழா—அதற்கு விழா எதற்கும் விழா!

அவற்றிற்காக எத்தனை கோடிப் பொருட் செலவு? எவ்வளவு காலச் செலவு? எவ்வளவு உழைப்புச் செலவு? எவ்வளவு கவனச் சிதைவு? இவ்வளவு செலவும் செய்து விட்டு இல்லை என்று ஏங்கினால், எப்படியிருக்கும்? எவ்வளவுதான் வரும்... எங்கிருந்து வரும்?'

"உப்பின்றி உணவு உண்டா? கடும்பத்தியம் சிலவற்றிற் குத்தான் உப்புச் சேர்ப்பதில்லை. மற்ற உணவுக்கு உப்புத் தேவை. ஆனால் உப்பே உணவாகி விடுமா? உப்பு வேண்டுமே என்று யாரும் ஆள் உணவில் பிடி உப்பை அள்ளிப் போடுவதில்லை. உணவிற்கு உப்புப் போல் வாழ்க்கைக்கு விழா. விழாவே வாழ்க்கை ஆகி விடுமா? உப்பு விஞ்சிய உணவு உண்பதற் குரியதா? உமிழ்தற்குரியதா? உண்டால் மேலும் மேலும் நீர் வேட்கை உண்டாகு மன்றோ? விழா மிகுந்த வாழ்க்கையும் அப்படியே."

இந்த நடைமுறை நல் வாதத்தை யாரும் ஒப்புக்கொள் வார்கள். ஆனால் நடைமுறையாக்கத்தான் தயங்குவார்கள். காரணம், பழகிப் போன மனிதப் பலவீனம்! ஆனால் நெ. து. சு. அவர்களோ பலவீனத்தை எல்லாம் கடந்து நிற்பவர். ஏழை வாழ்வுக்குப் பாலமாகி வருபவர்.

> "ஆகாறு அளவிட்டித் தாயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை" (குறள். 478)

என்ற மணிமொழியின் வழியே வாழ்ந்து வரும் இந்த ஈர நெஞ்சில் இக் கருத்துக்கள் தோன்றியதில் வியப்பில்லை!

நாகரிக வேகத்திலும், விழாக்களின் வேகத்திலும் கடமையை மறந்து உரிமைக்கு மட்டும் உரத்த குரல் எழுப்புவது இன்றைய உலகின் தனிப்போக்கு. இது வெற்று ஆரவாரத்தில் முடியுமே யன்றிப் பலன் இருக்காது என்பதை உணர்ந்து கடமையை நினைவூட்ட ஒரு கருத்தைக் கூறுகிறார் இந்தக் கர்மவீரர்!

"பெருக்கெடுத்தோடும் காவிரி காட்சியளிக்கிறது. இரு கரையும் புரள ஓடுகிறது. வழியில்—படியில் பல்லாயிரம் பேர் நின்று தடுத்தும் நில்லாது பாய்ந்து ஓடுகிறது. மனிதன் தன் கடமையை மறந்தாலும், நான் என் கடமையை மறவேன். தடுத்து நிறுத்தினால் பொறுத்துப் பாய்வேன். அடுத்து மூழ்கினால் அணைத்துவிட்டு ஓடுவேன். ஏன் இந்த ஓட்டம் என்று கேட் கிறீர்கள்? கடமையைச் செய்யச் செல்லத்தான். வாழ்வளிக்

கப் பாய வேண்டாமா? பிறந்த இடத்திற்கு வாழ்வளித்தால் போதுமா? பல இடத்திற்கும் வாழ்வளிக்க வேண்டாமா? உள்ளூர் உறவினர் என்று தயங்கி நிற்கலாமா? இன்னூர் இனியர் என்று மயங்கி நிற்கலாமா? ஆகவே 'வேறுபாடின்றிப் பொதுமையில் சென்று உயிரூட்டுவேன். எத்தனை அழுக்கை அத்தனை பேரும் கரைத்து விட்டாலும் சிந்தனை கலங்காது சென்றிடுவேன்' என்று செந்நிறப் பொன்னி பெருமிதத்தோடு பாய்கிறது. இவ்வளவு வெள்ளப் பெருக்கு, பாலாற்றுப் பண்பாட்டில் வளர்ந்த என்னை மலைக்கச் செய்தது..."

கடமையின் வேறு பெயராம் நெ. து. சு. அவர்களே காவிரி ஓட்டத்தைக் கண்டு வியந்தார் என்றால், கடமையைச் சொல்லள விலும், எழுத்தளவிலும் அறிந்த இளைஞர் கூட்டம் எவ்வளவு உணர்ந்து எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் கற்பனை செய்தாவது கைக்கொள்ள வேண்டுமன்றோ?

இவ்வாறாகக் கடமையைச் செய்து ஊதியம் பெற்று நிலைக்குத் தக்க ஈடுபாடு கொண்டு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஊதியத்தை ஊதாரித்தனமாக்கக் கூடாது என்பது இன்னொரு போதனை.

கடமையோடு வற்புறுத்தும் மற்றொரு தலைமையான கருத்து ஒழுக்கம். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பிய இந்தச் சீலர், அதை மற்றவர்களிடமும் குடிகொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன வியப்பு?

இவருக்கு நிகரான மனிதர் இல்லை. எனவே, அவருக்கு ஏற்ற பகைவன் இல்லை. அவ்வாறு பகைவன் உண்டு என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் அப்பகைவனுக்கு ஒரு மகன் பிறந்து அவனிடம் ஒழுக்கம் விழுமியிருப்பதைக் கண்டால் மனதாரப் பாராட்டும் பண்பினர்.

இன்றைய இளைஞர்களிடம் அதுதானே இல்லை என்று ஏங்காத நாளில்லை. இதனை இவரால் கல்விக் கண் திறக்கப் பெற்ற இளைய சமுதாயம், பிற்படுத்தப்பட்ட இளைய சமுதாயம், தாழ்த்தப்பட்ட இளைய சமுதாயம் என்று உணருகிறதோ, அன்று தான் தமிழகத்திற்கு நன்னாள். நெ. து. சு. அவர்களுக்குப் பொன்னாள்.

ஒழுக்கத்தின் முதிர்ச்சி சமத்துவம். அந்தச் சமத்துவத்தைக் கைக்கொண்டால் சகோதரத்துவம் வளரும்; பின்பு, உலகம் ஒரு

குடும்பம் என்ற நிலை மலரும் என்கிறார் இவர். எனவே, கூறு கிறார்!

"நோக்கிலே சமதை வந்த பின் போக்கிலும் சமதை வேண் டும். எல்லோரையும் சமமாக மதி. அறையிலும் சமமாக மதி. அம்பலத்திலும் சமமாக மதி. சமமாக மதிப்பது போல் நடிக் காதே. அந்த நோய் பெரியவர்களோடு நின்று விடட்டும். நீயும் நானும் உண்மையாகவே எல்லோரையும் மனிதர்களாக மதிக்கக் கற்றுக் கொள்வோம். உனக்கும் எனக்கும் பட்டம் இருக்கலாம். அதனால் அது இல்லாதவர்களை இழிவுபடுத்தக் கூடாது. அறிவு என்பது பட்டத்தில் இல்லை தம்பீ! பட்டம் ஏதும் இல்லா வள்ளு வன் முன்னே நீயும் நானும் எம்மாத்திரம்?"

ஒரே கல்லில் இரண்டு மாங்காய். சமத்துவத்தைப் பேண வேண்டும்; படித்தோம் என்ற அகங்காரத்தை அகற்ற வேண்டும். ஊதாரித்தன்மை ஒழிய வேண்டும். இதுதானே அவர் விழைவு?

சிறு சிறு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பெரும்பொருளைச் செல வழித்து விட்டு ஏங்குவது நம் சமுதாயம். திருவிழாவென்றும் சடங்கென்றும் உள்ளதை எல்லாம் விட்டுவிட்டுக் கையைப் பிசை வது நம் சமுதாயம்.

"சிக்கனமாக—வீண் விரயமின்றி வாழ்வீர்! கொண்டாட்டச் செலவுகள் குறையட்டும். திண்டாட்ட நிலைகள் மாறட்டும்; பூட்டி வைப்பது மாறட்டும்; சுமந்து திரிவது குறையட்டும்; வங்கியிலே போட்டு வைப்பது வளரட்டும்."

வாழத் துடிக்கும் வாலிபர்களுக்கு இதைவிட வேறு எப்படி வழி வகைகள் காட்ட முடியும்? அறிவுப் புரட்சியை ஊட்ட முடியும்? தனக்காக ஒரு வாழ்க்கை; பிறருக்காக ஒரு வாழ்க்கை என்ற இரட்டை மனிதர்களின் அறிவுரையை வேண்டுமானால் தள்ளலாம். ஆனால், கல்லூரிப் பரிசோதனைக் கூடத்தில்—ஆசிரியர் குறிப்பிட்ட பரிசோதனையைச் செய்து காட்டிய பின்பு, "இதைப் போலவே நீங்களும் செய்யுங்கள்" என்று சொல்வதைப் போல, வாழ்ந்து காட்டி 'இப்படி வாழுங்கள்' என்று ஒரு மகான் சொன்னால், அதைப் பின்பற்றாமல் இளைஞர்களால் இருக்க முடியுமா? உலகோர்தான் அதை ஒதுக்கித் தள்ளமுடியுமா?

இவ்வாறு, சொல்லாலும் செயலாலும் சிந்தனையாலும் வளரும் சமுதாயத்திற்கு இன்பத்தை நல்கும் துணைவேந்தர் அவர் களை எப்படி அழைத்து மகிழலாம் என்றால், தக்க சமயத்தில்,

தக்க சொற்கள் கிடைக்க மறுத்து விடுகின்றன. இருப்பினும் கூறுவோம். அவர்,

> "கனியினும், கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும், தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியவன்..."

என்று கூறி, நிறைவடைவதுதான் நாம் செய்யக் கூடியது. ஆம். கனியைவிட அதனினும் இனிமையான கரும்பைவிட, அங்கம் முழுவதும் இனிக்கும் மங்கையைவிட—ஆணையிட்டு ஆராய்ந்து பேரின்பம் பெற வாய்ப்பிருக்கும் அரசனையும் விட இந்தக் கல்வி நெறிக்காவலர் இனியவர்தான்!

இப்படி எல்லாம் ஏன் போற்றுகின்றோம்? இவர் எந்த நிலையில் இருந்த போதினும் கொடுத்த பொறுப்பை அது பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும் திறம்பட ஆற்றியிருக்கின்றார். ஆற்றி வருகின்றார், அதனால்! பாரசீகக் கவிஞன் ஒருவன் பா இசைக்கிறான் :

> " Keep steadfast with head erect
> So that before God and man you
> May be judged accordingly " *

இது நம் தாமரைச் செல்வருக்குப் பாடிய பாடலோ!

Thiru Sundaravadivelu's life is an open book. It Symbolises the ideal that the poet has set forth.**

உள்ளங்கை நெல்லிக்கனியான இக் கருத்தை மறுப்பவரும் மறைப்பவரும் உளரோ?

உலக இன்பத்தையே தனக்கு உற்ற இன்பமாகக் கருதுவோர் யார்? அவர்களால் உலகு பெறும் பயன் என்ன? என்பதற்குப் புறநானூற்றுப் புலவன் ஒருவன் விடை கூறுகிறான்.

---

* S. A. W. Bukhari — தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர், கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

** S. A. W. Bukhari — தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழாக மலர், கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

இவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள். இந்திர உலக அமிழ்தம் கிடைப்பதாயினும் தனித்து உண்ணமாட்டார்கள். யாரையும் சினவார், பிறர் அஞ்சுவது அஞ்சுவர். சோம்பல் அடையார். புகழுக்காகத் தம் உயிரையும் கொடுப்பர். பழியெனின் உலகம் முழுவதும் ஆளும் உரிமை வரினும் விரும்பார். மனக் கவலை கொள்ள மாட்டார். அதாவது,

"தமக்கென முயலா நோன்றுள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே
...... ........... .......... .
உண்டாலம்ம இவ்வுலகம்" (புறம். 182)

இப்பொழுது தெரிகிறதல்லவா? இவர் போன்றோரால் என்ன பயன் என்று இந்தப் பூவுலகம் இன்னும் இருப்பதே இவர்களைப் போன்ற மகாத்மாக்கள் ஒரு நூற்றுண்டிற்குச் சிலராவது வாழ்வதினுல்தான் என்று எவ்வளவு துல்லியமாக எடையிட்டுக் கூறிவிட்டார், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற புலவர்! அவர் மாய்ந்தாலும் அவர் பாடற் கருத்து மாயாமல் இருக்கிறதே—இந்தக் கருத்து நம் கெ. து. சு. பெருந்தகைக்கு எவ்வளவு சரியாகப் பொருந்துகிறது! என்பதை அறியும்போது, நம் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறதன்றோ!

இன்று அறிஞர் உலகும் வறிஞர் உலகும் ஒரு சேரத் துணை வேந்தர் அவர்களைக் கைகூப்பி வணங்கி ஆனந்தக் கண்ணீர் மல்கத் தத்தம் இதயத் துடிப்புக்களை வார்த்தைகளில் வடித்துச் சொல்கிறுர்கள்

"We esteem in you the finest genious, we admire you dedication and service, we love your hard work and humility, we respect and share your high ideals"*

'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்ற பொன்மொழியைப் போற்றுபவர்கள் கெ. து. சு. அவர்கள். ஏனெனில் மரகதத் திற்கும் கூழாங் கல்லுக் கும் வேறுபாடு தெரியாமற் போய்விடு மன்றோ!

"இதனை இதனுல் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள். 517)

---

* தாமரைத்திரு. கெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர்— கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

என்ற குறள் வழி தான் உதவும்போது ஒருவருக்கு, அவர் முடிப்பாரா, மாட்டாரா என ஆய்ந்து—பின் உதவுவார்கள். இல்லேயேல், நாட்டில் ஆயிரக்கணக்கான மல்லிகை—ரோஜாக் கொடிகள் இருக்க, இறுதியில் விழலுக்கிறைத்த நீராகிவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம்தான் காரணம்! குறள் நெறிக் காவலர் பின் எவ்வாறு வாழ்ந்து காட்ட முடியும்?

அம்மட்டோ? சிலர் உதவி பெறுவர், அந்த உதவி, உதவி செய்தவர்க்குத் தீங்காய் முடிவதோடு அந்த உதவி பெற்றவன் பெற்ருேர்க்கும் பயன் படுவதில்லே. அதனுல்தான் நுணுகி நுணிகி அறம் உரைத்த வள்ளுவரும், “நன்ருற்றலுள்ளும் தவறுண்டு” என்று கூறிப் போந்தான்போலும்! ரோஜாவை எந்தப் பெயரிட்டழைத்தாலும் மலரும் மணமும் மாருதிருப்ப தைப் போலவே எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் ஐயா அவர்கள் குறள்வழிதான் நடக்கிருர் என்று நம்மால் உறுதியாகக் கூற முடியும்.

‘கல்வியின் இதயம்’ என்று மதிக்கப் பெறும் மாண்பு பெற்ற வர்கள் ஆசிரியர்கள். அவர்களிடம் இந்தக் கல்விநெறிக் காவலருக்கு நிறைந்த அன்பும் பரிவும் ஏற்படுவதுண்டு. ஆசிரியர் ஒருவர் பரிந்துரைக்கோ, உதவிக்கோ நெ. து. சு. அவர்களே நாடிச் சென்ருல், நிச்சயம் அவர் வெறுங்கையோடு திரும்பமாட் டார்; வெறுக்கை (செல்வம்) யோடுதான் திரும்புவார்; அல்லது வெற்றிக்கையோடுதான் திரும்புவார். அந்த அளவுக்கு ஆசிரியர் சமுதாயத்தின் மீது, அவர்கள் பற்றும் பாசமும் கொண்டிருக் கிருர்கள். நெ. து. சு. அவர்களின் வெற்றியின் இரகசியம், வேறு எந்த மந்திர மாயங்களும் இல்லே, அது இதுதான்.

“நேர்மை—திறமை—விரைவு”

இந்த மூன்று சொற்களில் அடங்காத வழிகள் என்ன இருக்க முடியும்?

‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?’ என்பது அவர் களின் இன்னெரு ஊக்கமொழி—இளேஞர்களுக்கான ஆக்கவழி.

எந்த ஒரு முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களேக் கண்டாலும் புதிய ஆக்கம் ஒன்றைக் கண்ட மன நிறைவோடு இருப்பார். அந்த முயற்சிக்கு ஊக்கம் கொடுப்பார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (குறள். 666)

என்ற பொய்யா மொழியை இணைத்து அவனை வாழ்த்துவார். தேவையானால் அவனது முயற்சிக்குத் தூண்டுகோலாகவும் ஊன்றுகோலாகவும் துணைநிற்பார்கள்.

'நம்மைவிட வளர்ந்துவிடக் கூடாது' என்று ஒரு முயற்சியை முளையிலேயே கிள்ளியெறியும் இந்த இழிந்த சமுதாயத்தில் — முயற்சிகள் எங்கெங்கே முகிழ்க்கின்றனவோ — அங்கெல்லாம் சென்றுதவும் பண்பாளர் நெ. து. சு. அவர்கள்.

அம்மட்டோ? இந்தக் குணக்குன்றின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்வொரு தத்துவமும் போதனையும் போட்டி போட்டுக்கொண்டு ஒளிவிடும் அழகைக் கண்டு சிந்திக் கலாம்.

விருந்து கொடுப்போரின் வேண்டிக் கொள்ளல் காரணமாக, விருந்துண்ண உட்காருகிறார் என்றால் அவர் குறிப்பிடும் அளவு உணவைத்தான் பரிமாறுவோர் படைக்க வேண்டும். உபசரிப் போர், ஒரு எண்ணத்தில் அதிகமாகப் படைத்து விட்டால் எப்படியும் உண்டுதானே ஆகவேண்டும் என்று அளவுக்கு மீறி இலையில் நிரப்பி விட்டால் அவர் முகத்தில் கணத்தில் சினத்தின் கதிர் தோன்றி மறையும்.

ஏன்? இலையில் மீதி இருந்துவிடும். ஒரு கவளம் உணவுக் காக வீதிகளில் ஓலமிட்டபடிச்சென்று கொண்டிருக்கும் வறுமை யின் சொந்தக்காரர்கள் மத்தியில் இலையில் மீதம் வைத்து அதைத் தூக்கி எறிவதற்கு இந்தக் கருணை உள்ளம் உடன் படாததே அதற்குக் காரணம். அது மட்டுமல்ல, அளவுக்கு மீறி இலையில் விழுந்து விட்டது; உண்ண முடியவில்லை: உண்ணாமல் வீணாக்கவும் மனமில்லை, என்ன செய்வது என்று குழம்பியவாறே மீதத்தை உண்டால் உடல் ஏற்றுக்கொள்ளாது. பிணி தோன்றும்; அதனால் பணி பல கெடும்!

இப்படிப்பட்ட சூழ்நிலைகளை வெல்வதற்காகவே அவர் உணவு உட்கொள்வதில் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து வருகிறார்கள்.

இந்த இடத்திலும் அவர்தம் உடம்பு கெடுமே என்று வருந்து வதைவிட, இலையில் மிச்சமிருந்தால் அவ்வுணவு ஒன்றுக்கும் ஆகாமல் குப்பையில் அல்லவா சேர்ந்து விடும் என்ற கவலைதான் பெரியதாக இருக்கிறது.

அடுத்து, பிச்சைக்காரர்கள். ஒருநாட்டின் முன்னேற்றத்தை—விஞ்ஞானிகளையும், பிச்சைக்காரர்களையும் கொண்டு மதிப்பிட்டு விடலாம். நம் புண்ணிய பாரதத்தில் பிச்சைக்காரர் இருக்க வேண்டிய தொகையில் விஞ்ஞானிகளும், விஞ்ஞானிகள் இருக்க வேண்டிய தொகையில் பிச்சைக்காரர்களும் இருப்பது நமது தீவினை ஆகும்.

இவ்வாறு—அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி—தடுக்கி விழுந்தால் நிச்சயம் நிலத்தின் மேல் விழாமல், ஒரு பிச்சைக்காரன் மேல்தான் விழுவோம் என்றநிலையில் இன்று நாம் இருக்கின்றோம். இந்த நேரத்திலும்,

"ஐயா! சாமி பத்து பைசா தர்மம் பண்ணுங்க, சாமி!" என்று குறிப்பிட்ட அளவைச் சொல்லிப் பிச்சை கேட்கும் இந்த நாளிலும், பிச்சைக்காரன் வந்தால் இருப்பதை அவனுக்கு அளிப்பார்கள்.

இன்று, பிச்சைபோடுவோரைவிட போடாதவர்கள் பிச்சைக் காரர்களைக் கண்டதும் முகச் சுளிப்போடு மட்டுமல்லாமல், அவர்களைப் பற்றிப் பலவிதமான திறனாய்வுகளைச் செய்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் 'வேறு வேலை ஏதாவது செய்து பிழைக்கக் கூடாதா?' என்று கேட்பதுமுண்டு. அவர்களைப் பார்த்து ஐயா அவர்கள் கேட்கிறார்கள் :

"அவனுக்கு வேறு வேலை எதுவும் கிடைக்காத காரணத்தால் தான் இந்த வேலையை இறுதியாகப் பிடித்திருக்கிறான். அது தெரியாமல் கேட்பது சரியன்று. அப்படி இல்லை என்றால், நீயாவது ஒரு வேலை பார்த்துக்கொடு. முடியுமா?" என்று தன் மனசாட்சியோடு கேட்டுக் கொண்ட கேள்வியை அந்தப் பிச்சைக் கார எதிர்ப்பாளரிடம் கேட்கிறார். இறுதியாகச் சொல்லுகிறார் : "உன்னால் முடிந்தால் போடு, இல்லையேல் இல்லை என்று சொல்லிவிடு."

உண்மைதானே! இந்த இடத்தில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, அவர் பிச்சைக்காரத் கூட்டத்தை ஊக்கு விக்கிறார் என்று பொருள் அல்ல. அந்த நேரத்தில் எவ்வாறு மனிதத் தன்மையை வெளிப்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



*25—4—1965*-ல் S. K. D. J. பள்ளிக்கூடத்தைத் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும், திருமதி காந்தம்மாள் அவர்களும் திறந்து வைக்கும் காட்சி.



உயர்திரு தாமரைச் செல்வர் நெ. து. சு. அவர்கள் தம் துணைவியாருடன்
மணி விழாவிற்கு வருகை தருதல்

நெ. து. சு. திருமணத்தில் அவரை வாழ்த்திய அன்னி பெசன்ட்
அம்மையார் மணி விழாவிலும் வாழ்த்துவதாக அமைகிறது
கோக்கலே மண்டபத்தில் இக் காட்சி

மணி விழாவினைத் தொடங்கி வைக்கும் மாண்புமிகு நீதிபதி
பு. ரா. கோகுலகிருஷ்ணன் உடன் வருகிறார்

இவ்வாருக, மிகச் சாதாரண நிகழ்ச்சிகளிலும், இவர்கள் வெளிப்படுத்துகின்ற பண்பாடு காண்போரை மெய்சிலிர்க்கச் செய்யும்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவன், ஒரு தந்தையின் கடமை என்ன என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிருன்.

'தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்' (குறள். 67)

ஆம்! அன்று நெய்யாடுபாக்கம் வணக்கத்திற்குரிய துரைசாமி அவர்கள் பல்வேறு சமுதாயச் சிக்கல்களுக்கிடையே தன் அருந் தவப் புதல்வனுக்கு கல்வி கொடுத்து அவையத்து முந்தியிருக்கும் நிலையைக் கொடுத்தார்—தந்தை தன் மகனுக்கு ஆற்றவேண்டிய சீரிய கடமையைச் செய்து விட்டார்!

இனி, மகன் தம் தந்தைக்கு ஆற்றும் உதவியையும் செய்துவிட்டார்கள். அது என்ன?

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்ருன் கொல்எனும் சொல்" (குறள். 70)

இப்படிப்பட்ட இம் மகனை ஈன்றெடுக்க இவருடைய தந்தை எப்படிப்பட்ட நோன்பை மேற்கொண்டாரோ என்று தமிழகமே வியக்கும் அளவுக்குத் தம் உதவியை இன்று துணைவேந்தர் பெருந்தகை அவர்கள் தம் தந்தையாருக்குச் செய்து விட்டார்கள். அதன் பலனை நாளும் நாளும், விண்ணுலகில் இருக்கும் இவர்களது தந்தையார் கண்டு கேட்டு உவந்து வருகிருர்கள்!

இங்ஙனம் துணைவேந்தர் அவர்களின் வாழ்க்கையை—பொன்னேடுகளில் பதிந்த அந்த வரலாற்றை—எந்தப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தாலும், இனி வாழக்கூடியவர்களுக்கு ஒரு வழி காட்டியாக அமைந்திருக்கும் வைரம் பதித்த வரிகளையே நாம் காண்கிரும்.

சென்னை நக்கீரர் கழகத்தார் 7—5—72 -அன்று நடத்திய நெ. து. சு. அவர்களின் மணிவிழாவில், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் துணைவேந்தர் அவர்களைப் பாராட்டி நிகழ்த்திய வாழ்த்துரையின் ஒரு பகுதியை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும்.

"....இப்பொழுது அவர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருக்கிறார். நான் அங்கே சிண்டிகேட் உறுப்பினராக இருக்கிறேன், இப்படி ஏதோ ஒரு தொடர்பு அவரைப் பின்பற்றியே செல்லும் படியாக என்னை வைத்திருக்கிறது. நான்தான் அவரைப் பின் பற்றியிருக்கிறேனே யொழிய, அவர் என்னைப் பின்பற்றவில்லை. போனஇடம் எல்லாம் அவரைப் பினபற்றி நான் போய்க்கொண் டிருக்கிறேன். நல்வினை என்பார்களே அது என்னையும் அவரை யும் ஒரே பாதையிலே முன்னும் பின்னுமாகச் செல்லத் தூண்டி யிருக்கிறது. அதிலே, பெருமகிழ்ச்சி எனக்கு. அவர் கற்ற கல்வி காரணமாக அந்த இடங்களுக்கெல்லாம் அவர் சென்றது சரி ; கல்வி ஏதும் இல்லாதவனாகிய நான், எப்படியோ கிடைத்த இடத்தைப் பிடித்துக் கொண்டு, அவர் பின்னாலேயே சென்றிருக் கிறேன் என்றால், இந்தப் பெருமை வேறு யாருக்குக் கிடைக்கும். அந்த நல்வினைதான் இங்கே தலைமை தாங்க வைத்திருக்கிறது ; வேறு ஒன்றுமில்லை. இதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

"....நல்லார் இணக்கத்திலே நல்லாரோடு சேர்வதிலே ஏற் படுகிற நல்வாழ்வு. நான் இன்று மணிவிழா நாயகரையும், நாயகியையும் வாழ்த்துகிறேன். அவர்கள் இன்னும் ஆரோக்கிய மாக வாழ்ந்து, அவர்கள் இணைந்து வாழ்கின்ற அந்த இதயங் கலந்த வாழ்க்கை நீடித்து, தமிழ் மொழி வளர, தமிழர் இனம் வாழ, தமிழ்நாடு தழைக்க, அவற்றின் மூலம் பாரதப் பெருநாடு நல்வாழ்வு வாழ, உலகமெலாம் ஓங்கி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ் நெறி தழைத்திட வாழுமாறு வாழ்த்து கிறேன்."


மற்றும், சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த ஐயா அவர்களின் மணிவிழாவின்போது தவத்திரு. குன்றக்குடி அடி களார் உள்ளம் உருகிக் கூறிய உறுதி மொழியை ஈண்டு மேலும் நம்மால் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை :

"பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்அவர்கள் பல்லாண்டுகள் வளர்வார்கள் ; வாழ்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனவே, நான் வாழ்த்த வேண்டிய அவசியம் இல்லை. காரணம், நோக்கமும் இலட்சியமும் உள்ளவர்கள் அவற்றை முடிக்கிற

*—'கல்விநெறிக் காவலர்'—நக்கீரர் கழக வெளியீடு--தமிழக மேலவைத் துணைத்தலைவர் மாண்பு மிகு, தாமரைத் திரு. ம. பொ. சி. அவர்களின் வாழ்த்துரை.

வரையில் வாழ்வார்கள். எமன் வந்தால்கூட "கொஞ்ச நேரம் இரு; வேலையை முடித்துவிட்டு வருகிறேன்" என்று சொல்வார்கள்."

ஆம்! தமிழன் பிற மாநிலத்தவர்களுக்கிடையே தலைநிமிர்ந்து வாழக் கல்விநெறியில் தமிழகத்தை முந்தியிருக்கச் செய்ய, இளைஞர்போல் பீடு நடைபோட்டு, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணாய், ஆற்றவேண்டிய பணிகளில் ஈடுபட்டு, சில பணிகள் சிறப்பாக முடித்து மேலும் பல பணிகளை அறுவடை செய்து கொண்டு இருக்கும் தருணத்தில், தவத்திரு. அடிகளார் கூறியதில் வியப்பில்லையன்றோ!



பொதுக் கல்வி இயக்குநர் திரு. நெ. து. சு. அவர்கள்



பகுத்தறிவுத் தந்தையுடன் கல்வித் தந்தை

# கல்விநெறிக் காவலரும்
# கல்வி உலகமும்

# கல்விநெறிக் காவலரும் கல்வி உலகமும்

ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, உயர்ந்த ஆராய்ச்சிக் கல்வி—இறுதியாக முதியோர் கல்வி—இப்படி பல வகைக் கல்வி நிலைகளைக் 'கல்வி உலகம்' என்கிறோம். இவ்வாறு கல்வி நிலைகளின் தொடக்க நிலையிலிருந்து இறுதி நிலை வரை, நமது கல்விநெறிக் காவலர் அவர்களின் சிந்தனை, மேற்கூறிய அனைத்துத் துறைகளிலும் ஆல் போல் கிளைத்திருக்கின்ற காரணத்தால், தமிழகக் கல்வி உலகின் ஒரே வேந்தராகவும் ஒப்பற்ற தனிவேந்தராகவும் காட்சியளிக்கிறார்கள்.

ஆம்! கல்வி உலகில் இந்த முடிசூடா மன்னர் உடலில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் 'கல்வி, கல்வி' என்றே ஒலி செய்து கொண்டிருக்கின்றது.

முத்தமிழ் வள்ளல் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும், தனிப்பெரும் கல்விக் கொடை வள்ளல் பச்சையப்ப முதலியாரும் பொருட்செல்வத்தை வழங்கிக் கல்விக் கோயில்களைக் கட்டினார்கள்.

ஆனால், இந்தக் கல்விப் பெருவள்ளலோ பொருட் செல்வத்தையும் கொடுத்து தன் அறிவுச் செல்வத்தையும் அளித்து உழைப்புச் செல்வத்தையும் ஈந்து வருகிறார்கள். சுருங்கக் கூறின் நெ. து. சு. அவர்கள் தமிழர்களின் நல்வாழ்வுக்காகவே - அதுவும் சமூகத்தின் பின் தங்கிய மக்களின் கல்வி நெறிக் கென்றே இறைவனால் படைத்து அனுப்பப்பட்டவர் என்று கூறினால் அது தவறாக இருக்கவே முடியாது.

"மக்கள் இனம் மானத்தோடு வாழ, அச்சமற்றிருக்க, உரிமையோடு உலவ, கல்வி வேண்டும். தூறல் கல்வி அல்ல; கொட்டு கொட்டென்று கொட்டும் பெருமழைக் கல்வி வேண்டும். அதுவும் எல்லோருக்கும் வேண்டும். எல்லாவயதினருக்கும் வேண்டும்."

கல்வி சாதி — மதம் — இனம் எனப் பாகுபாடற்ற சமரச நெறியில் அமைந்ததாய் இருக்க வேண்டும் என்பது நெ. து. சு. அவர்களின் உள்ளக் கிடக்கை.

தாம் எப்படிப்பட்ட கல்விப்பணி ஆற்ற வேண்டும் என்று தனக்குத்தானே ஒரு விதி அமைத்துக் கொண்டு தொண்டாற்றிய இப் பெருந்தகையின் முத்திரை பதிந்த சொற்கள்தாம் மேலே காண்பவை!

> "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்(கு)
> எழுமையும் ஏமாப் புடைத்து". (குறள். 398)

என்று, அன்றே கூறிவைத்தானே வள்ளுவச் சான்றோன்—அந்தத் திருக்குறட் கருத்தை இன்று செயல் வடிவாக்குகின்றான் (சுந்தர) வடிவேலுச் சான்றோன்!

இனி, நெஞ்சையள்ளும் வண்ணம் தான் கற்கத் தொடங்கியது முதல் இன்று வரை அந்தக் கல்வி நெறிக்காவலனின் கல்விப் பணியினை, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சில பருக்கைகளைப் பதம் பார்ப்பதைப் போல—சிலவற்றை அறிந்து, நம்மைநாம் நிறைவு செய்துகொள்ளலாம்.

முழுவதையும் அறிய முயற்சி செய்வது, அணில் தன் உடம்பில் மணலெடுத்துக் கடலில் பாலம் கட்ட நினைப்பது போல்தான் என்பதை நாம் அறிவோம்.

திரு. நெ. து. சு. அவர்கள், தம் கல்லூரிக் கல்வியை (பி. ஏ. ஹானர்ஸ்) முடித்ததும், பழம்பெரும் நாட்டுப் பற்றாளர் டாக்டர் பி. வரதராசலு நாயுடு அவர்கள் நடத்தி வந்த 'தமிழ்நாடு' நாளிதழின் துணையாசிரியராக முப்பத்தைந்து ரூபாய் ஊதியத்தில் சில நாள்கள் சீரிய பணியாற்றி வந்தார்கள்.

பின்னர், அப்பணியை விடுத்து உதவிப் பஞ்சாயத்து அதிகாரியாக ஆனார்கள். அப் பதவியில் சில காலம் இருந்து பார்த்தார்கள். மனம் ஒன்றை நினைத்திருக்கக் கரம் ஒன்றைச் செய்வது என்பதை ஊதியம் இருந்தால் போதும் என்போர் ஏற்றுக்

கொள்ளலாம். இலட்சிய வாதிகளுக்கு அப் பணியில் விருப்பம் இருக்காது. துறக்கவே விரும்புவர்.

கொள்கைத் தங்கமாம் நம் நெ. து. சு. அவர்கள் மாதம் எழுபத்தைந்து ரூபாய் தரும் அப் பணியை விட்டு விலகினார்கள். இரும்பைக் காந்தம் இழுப்பதைப் போல அவர் உள்ளம் ஆகிய இரும்பைக் கல்வித் துறையாம் காந்தம் இழுத்தது. எனவே, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து, எல். டி. பட்டம் (Licentiate in Teaching) பெற்றார்கள். அப் பயிற்சிக்குப் பின்னர் மாதம் ஐம்பது ரூபாய் ஊதியத்தில் 'இளநிலைத் துணைக் கல்வி ஆய்வாளர்' பணியை மன நிறைவோடு ஏற்றுக்கொண்டார்கள்.

அதன் பின்னர்—1942ஆம் ஆண்டில் நேரடித் தேர்வின் மூலம் மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பொறுப்பேற்றார்கள். சிலகாலம் சென்னை மாநகராட்சிக் கல்வி அதிகாரியாகவும் பணி யாற்றினார்கள். அதன் பின்னரே, துணைக் கல்வி இயக்குநர் பதவியை ஏற்றார்கள்.

தொடக்கப் பள்ளித் துணை இயக்குநராகச் சென்றவர் பிறகு உயர்நிலைப் பள்ளிக் கல்வி — கல்லூரிக் கல்வி ஆகியவற்றிற்குப் பொறுப்பான கல்வி இயக்குநராக ஆனார்கள்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பட வேண்டும். அதாவது நெ. து. சு. அவர்கள் கல்வித் துறையின் துணைக் கல்வி இயக்குந ராகப் பதவி ஏற்ற அந்த நாளே தமிழகத்தின் 'கல்வியுலகப் பொற்காலம்' தொடங்கி விட்டது என்பதுதான் அது!

முகம்மது நபி, மெக்காவிலிருந்து மெதினாவுக்குச் சென்ற காலக் கட்டத்தை இஸ்லாமியப் பெருமக்கள் 'ஹிஜ்ரா' சகாப்தம் என்று கூறுகிறார்களே அதைப் போல!

திரு. கு. காமராசர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சுப் பொறுப்பை ஏற்று அரசை இயக்கி வந்த அந்த நேரத்தில்தான்— அதாவது 1954ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில்—வர லாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க நன்னாள் ஒன்றில்—கல்வித்துறை இயக்குநராகப் பதவி ஏற்றார்கள்!

பின்னர் 1965ஆம் ஆண்டு முதல் கல்லூரிக் கல்வி—நூல் நிலையங்கள் ஆகியவற்றின் இயக்குநராகப் பணி ஆற்றினார்கள். 1966ஆம் ஆண்டுமுதல் 1968ஆம் ஆண்டு வரை நடுவண் அரசின் கூட்டுக் கல்வி ஆலோசகராகப் பணி புரிந்தார்கள். பின்னர்,

1968ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணு அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வீற்றிருந்தபோது அண்ணு அவர்கள் நேரில் அழைத்தமைக்கு இணங்க, டெல்லியிலிருந்து திரும்பிவந்து தமிழ் நாடு அரசின் தலைமைக் கல்வி ஆலோசகராகவும், கல்வித் துறையின் கூடுதல் செயலாளராகவும், கல்லூரிக் கல்வி—நூல் நிலையம் ஆகிய பல்துறைகளின் இயக்குநராகவும் அங்கங்கே தம் முத்திரை பதியும் வண்ணம் நற்ருண்டுகள் ஆற்றி வந்தார்கள்.

1969 ! - இவ்வாண்டு தமிழ் மக்களால் மறக்க முடியாத ஆண்டாகியது. இவ்வாண்டில்தான், தமிழகத்தின் தனிப்பெருந் தமிழ்த் தலைவன் தமிழ்வேள் டாக்டர் கலைஞர் அவர்களைத் தமிழக அரசின் அரியணை அழைத்து அணைத்துக்கொண்டது.

அந்த 1969ஆம் ஆண்டில் ஆகஸ்டுத் திங்களில், டாக்டர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால், தங்கப் பட்டயத்தில் வைரம் பதிக்கப் பெற்றது. ஆம். நெ. து. சு. அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்ருர்கள்.

மேற்கூறியவாறு நெ. து. சு. அவர்கள் வகித்த பதவிகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டலாம். இனி. இப் பதவிகளை ஒரு கருவியாகக் கொண்டு அவர்கள் ஆற்றிய பணிகளை —அப்பணி களின் இமாலய வெற்றிகளை சற்று எண்ணிப் பார்தோமாளுல், சிலர் மயங்குவர்; சிலர் மலைப்பர்; சிலர் வியப்பர்; பலர், இவ்வளவு உயர்ந்த மனிதர், என்னைப் போன்ற மிகச் சாதாரண மாணவர்களோடு நாளும் பழகி அவரவர் குறைகளை நீக்கு கின்ருரே? என்று விம்மிப் பெருமூச்சி விட்டுப்—பேச்சற்று வியந்து நிற்பர்!

இது நூற்றுக்கு நூறு உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

கல்விநெறிக் காவலர் அவர்கள் இந்தப் பதவிகளை வகித்து வந்த காலக் கட்டங்களில் எல்லாம் கல்வித்துறையின் புதுமை—பொலிவு—பிடிப்பு ஆகியவற்றை நன்றிக்குரியவர்களாகிய நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

நெ. து. சு. அவர்கள் கல்வித்துறை இயக்குநராகப் பதவி ஏற்ற அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தவை பதினறு ஆயிரம் தொடக்கப் பள்ளிகளே ஆகும். அவற்றை முப்பத்தொரு ஆயிரம் பள்ளிகளாகப் பெருக்கிஞர் நெ. து சு. அவர்கள்!

பத்துப் பதினைந்து குடிசைகள் காட்சியளித்தாலும் அங்கும் ஒரு தொடக்கப் பள்ளித் திறப்பு விழா! நேரமிருந்தால் நெ. து. சு. அவர்களே அதைத் தொடங்கி வைப்பார்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் தன் முதல் கவிதையில்,

"எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழு கடல் அவள் வண்ணமடா"

என்று பாடியதைப் போல எங்கெங்கு காணினும் பள்ளிகள்!

இளஞ்சிறுர்கள், தொடக்க படிப்பை முடித்ததும் அடங்கி விடாமல் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் அடைய வேண்டும் என விரும்பி, சுமார் ஐந்து கல் தொலைவு இடைவெளிக்குள் ஓர் உயர்நிலைப் பள்ளியை அமைக்க ஆணையிட்டார்கள். அதிகத் தொலைவு நடந்து படித்தால், அந்த மாணவனுக்கு இறுதியில் சோர்வுதான் மிஞ்சும், அறிவு மிஞ்சாது என்று அறிந்து உயர்நிலைப் பள்ளிகளை அருகருகே தோன்றச் செய்தார்கள், இந்த உளவியல் அறிஞர் அவர்கள்!

வளமையான கல்வி வளர்ச்சிக்கு கால்கோளிட்ட சிற்றூர்களில் ஒன்று நெல்லை மாவட்டத்தில் உள்ள 'கன்னி வேலம்பட்டி'. அங்கே வாழும் மக்களை அணுகி, "உங்கள் ஊர்க் கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்; என்ன உதவி வேண்டும்; எப்படி அமைக்கலாம் என்பது பற்றி உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்" என்று ஒவ்வொரு பகுதியாகச் சென்று கேட்டறிந்து, அவற்றிற் கேற்ப அனுமதி தந்தார்கள். அந்த வகையில் மக்களோடு இரண்டறக் கலந்தவர், அன்றோ !

இன்று மட்டும்தான் ஏழைகளின் குறைகளை—பொதுமக்களின் கருத்துக்களைக் காது கொடுத்து கேட்பது மட்டுமல்லாது—இதயம் கொடுத்தும் கேட்கிறார் என்று சிலர் நினைக்கக் கூடும். உண்மை அது வல்ல. இவர்கள் கல்வித்துறைக்கு வந்த நாள் முதல், மக்களை நேரில் கண்டு, அவர்கள் வாழும் வட்டச் சூழ்நிலைகளையும் நேரில் உற்று நோக்கிச் செயல்பட்டு வந்தார்கள். அதனால்தான் இவர்கள் கால் பட்ட இடங்களில் உள்ள பள்ளிகள் எல்லாம், 'கல்விநெறிக் காவலர் மதிய உணவுத் தந்தை, சீருடையின் சிற்பி வாழ்க!' வாழ்க! என வாழ்த்தொலிகள் எழுப்பிய வண்ணம் இருக்கின்றன !

இவ்வாறு, அவர்கள் வழுவழுப்பான இடத்தில், பம்பரம் நர்த்தனம் ஆடுவதைப் போல் சுறுசுறுப்பின் எடுத்துக் காட்டாகப்

பணியாற்றி வரும் வேலையில் தான், ஒரு காலத்தில் ஒன்றாக இருந்த—தற்போது நமது அண்டை மாநிலமாக விளங்குகின்ற கேரளத்தில் 'பெரிந்தல்மன்னா' என்ற இடத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியின் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார்கள்.

நிகழ்ச்சி நிகழ்ந்துகொண்டிருந்தது. முதல் வரிசையில் இருந்த இரு பள்ளிக் குழந்தைகள் மயங்கிவிழுந்தனர். வேறு அதிகாரியாக இருந்தால் ஏன் என்றும் கேட்டுஅறிந்திருக்க மாட்டார்; கண்டும் காணாதவர் போல் தம் பதவிக்கு ஏற்ற வண்ணம் நடந்து கொண்டிருப்பார். ஆனால் ஐயா அவர்கள் சாதாரண மனிதர் நிலையில் உள்ளவர்கள் அல்ல!

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்!"

என்று உள்ளம் உருகி அழுத இராமலிங்க அடிகளார் வழி வந்தவர்கள் சும்மா இருப்பார்களா? திடுக்கிட்டார்; துடிதுடித்தார்; என்னவென்று கேட்டுப் பதறினார். அருகே இருந்தவர்கள் பதில் சொன்னார்கள் :

"ஒன்றுமில்லை. அவர்களுக்குப் பசி. அதனால்தான் மயங்கி விழுகிறார்கள்."

'குழந்தைப் பசி கொள்ளைப்பசி என்பார்கள். அப்படிப்பட்ட பிஞ்சுகளின் பசியை எவ்வளவு சாதாரணமாகப் பேசுகிறார்களே!' என மனிதனின் விநோதப் போக்கைக் கண்டு சிந்தித்தவண்ணம் நிகழ்ச்சியிலிருந்து மீண்டார்கள்; அதிகாரியாக அல்ல—மாபெரும் ஆக்க பூர்வமான சிந்தனையாளராக!

ஆம்! அன்று நெ. து. சு. அவர்களின் அருள் நெஞ்சத்திலே ஒரு எண்ணம் கருக்கொண்டது. குழந்தையிடம் வலிமை இருந்தால்தானே ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைச் சேகரிக்க, அல்லது திரும்ப எண்ணியாவது பார்க்க முடியும்? அந்த வலிமை இல்லாவிட்டால் என்ன செய்யும்? அந்த வலிமைக்கு ஊட்டம் அளிக்க வேண்டாமா? இரவிலும் காலையிலும் வீட்டில் பெற்றோர் உணவு கொடுத்து விடுகிறார்கள். நண்பகலில்—கல்லும் கரையும் அந்த வெயில் வேளையில், வசதி இருப்போர்—வீடு அண்மையில் இருப்போர் மட்டுமே உண்ண முடியும். தொலைவிலிருந்து வருவோர், மதிய உணவுக்கு வழியற்றோர் என்ன செய்வார்கள்? பட்டினிதான் இருக்க முடியும். இந்தப் பட்டினியைப் போக்கப் புத்தர் பெருமான்போல் ஆக்க

பூர்வமாகச் சிந்தித்தார்கள். சிந்தனையினின்றும் தெளிந்ததாகத் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் திட்டம் ஒன்றை உருவாக்க முயன்றது, இவர்களது நெஞ்சம்!

"பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்"
"உண்டி முதற்றே உலகு"
"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று இலக்கியங்கள் சொல்வதை மட்டும் படித்துவிட்டு இவர்கள் செயல்படவில்லை; படித்தறிந்ததை உணர்ந்து செயல் பட்டார்கள்.

பசி! அதைப் பற்றி நன்ருகத் தெரிந்து வைத்திருந்தார்கள். முதலில் இதைக் களைந்து விட்டுப் பிறகு அடுத்த கட்டத்திற்குச் செல்வோம் என்று எண்ணினர். எப்படியும் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்தே ஆகவேண்டும். இல்லாவிட்டால் கல்வி விழலுக்கிரைத்த நீராகிவிடும் என்று முடிந்த முடிவாகக் கருதினர்கள்.

நெ. து. சு. அவர்கள் மேற்கொண்ட பள்ளிக் குழந்தைகட்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தைக் கேள்விப்பட்ட அறிஞர் பலரும் இது நடைமுறைக்கு ஒத்து வரும் திட்டமா? என்று கேள்விக் குறியிட்டுத் திறனய்வு செய்தார்கள். அப்படிச் செய்தவர்கள் அறியாமையால் செய்திருந்தால் கூட அதைப் பற்றி நெ. து. சு. அவர்கள் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனல் அறிந்த பெருமக்களே, அறியாதவர்களாகிவிட்ட கொடுமை தான் அப்போது அவர்கள் மனத்தை அரித்தது.

உடலுறுப்புக்கள் ஒழுங்காக இருப்பவனைப் பார்த்துப் பத்துப்பேர்கள் பத்துமுறை ஊனமுற்றவன் என்ருல் ஊன மில்லாதவன் கூட ஒருமுறை தன்னைத்தானே உற்றுப் பார்த்துக் கொள்ள நேரிடுகிறது. அதைப் போலத்தான் நெ.து.சு. அவர்களின் அன்றையநிலை. ஏழைக் குழந்தைகட்காக இவர்களது உள்ளம், பெற்ற தாயினும் சாலப் பரிந்து ஏங்கியது!

'ஒருக்கால், அவர்கள் சொல்வதைப் போலவே திட்டம் தோல்வியடைந்து விடுமோ?' என்று கூட ஒரு விநாடி மருட்சி வ்லைப்பட்டார்கள்.

அந்த நேரத்தில்தான் வள்ளுவச் செம்மல் கூறினன்—ஆம்! அவர்களின் அருமைப் பிள்ளை வள்ளுவனைத்தான் நாம் இங்கு

குறிப்பிடுகிறோம்—அந்த அறிவுக் கொழுந்து, அன்பின் திருவுருவம் ஆகிய அவன் சொன்னான்—குழம்பிக் கொண்டிருந்த தன் அருமைத் தந்தையைப் பார்த்து:

" அப்பா ! கவலைப்படாதீர்களப்பா! இங்கு நல்லது செய்யவும் மாட்டார்கள் ; செய்கிறவர்களைச் சும்மாவிடவும் மாட்டார்கள் ; இதற்கெல்லாம் வலைப்படாதீர்கள் ; நீங்கள் செய்யவேண்டியதைச் செய்யுங்கள்."

ஆகா ! திருக்குறள் தந்த திருவள்ளுவர் அறிவும், திருவருட்பா ஈந்த இராமலிங்கர் அன்பும் கலந்து உருவாகிய ஒரு மகனல்லவா வள்ளுவன் ! அவன் ஊக்கமூட்டினான் தன் தந்தைக்கு ! தந்தையைப் போலவே, அத் தனயனும் ஏழையர்பால் கொண்டிருந்த ஈடுபாடு அளவிடற்கரியது ! ' தாயைப் போலப் பிள்ளை ' என்ற பழமொழியை மாற்றித் ' தந்தையைப் போல பிள்ளை ' என்ற புதுமொழி தோன்றத் தோன்றியவன் அல்லவா வள்ளுவன் !

எனவே, தன் மகன் வள்ளுவன் கொடுத்த ஊக்கக் குரலைத் தெய்வக் குரலாக ஏற்றுக்கொண்டு, இனி எத்தனைபேர் தடை சொன்னாலும் சரி என்று முடிவெடுத்து இத் திட்டத்தைக் கைவிடுவதில்லை என உறுதி பூண்டார்கள்.

" தமிழ்நாட்டின் அரைத்த மாவுப் பேச்சாளர்கள் சிலர், பகலுணவுத் திட்டத்தை அரசியல் கண்ணோட்டத்தோடு ' பஞ்சர் ' செய்ய முயன்றபோது அவன் எனக்குக் கொடுத்த ஊக்க ஒலி இது " — என்று பின்னாளில் நெ.து.சு. அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வாறு, பல சோதனைகளுக்கிடையே பிறந்த சாதனைதான் மதிய உணவுத் திட்டம்.

இந்த நேரத்தில், நல்ல சமுதாயத்தை உருவாக்கச் சில தன்னலமற்ற செம்மல்கள் பணியாற்றும்போது, வேதனைகளும் சோதனைகளும் எங்கெங்கிருந்து எப்படி எப்படி வரும், அவற்றையும் அவர்கள் தாங்கிக்கொண்டு எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிடும் ஓர் உவமையை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தம் :

" வெடித்து கிடக்கும் வயல், படர்ந்துபோகும் நிலையில் உள்ள விளக்கு, பட்டுக்கொண்டே வரும் நிலையில் உள்ள மரம், உலர்ந்து

கொண்டே வரும் கொடி, வற்றிக்கொண்டிருக்கும் குளம்—இவை போல, சமுதாயத்தின் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகி விடும்போது, இந்த அவல நிலையைப் போக்கியாக வேண்டும் என்ற ஆர்வமும், போக்க முடியும் என்ற நம்பிக்கையும், போக்கக் கூடிய அறிவாற்றலும் கொண்டு ஒரு சிலர் முன்வருகிறார்கள், அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற

அவர்களை நாடு வரவேற்பதில்லை, நையாண்டிச் செய்யும்; மதிப்பளிப்பதில்லை, மாச்சரியத்தை வாரி வீசும்; துணைபுரிவ தில்லை, தொல்லைத் தரும். எனினும், அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து சலிப்பு - கோபம் - வெறுப்பு - பகை எனும் உணர்ச்சி களுக்குப் பலியாகிவிடாமல், புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து—பட்ட மரம் துளிர்விடும் வரை படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு வெற்றி கண்டு மறுமலர்ச்சி உண்டாக்கி வைக்கிறார்கள்.''

காஞ்சிக் கரிபால்டியாம் நம் அண்ணா அவர்களின் இந்த அழகுமொழி—அர்த்தமுள்ள செம்மைமொழி—வணக்கத்திற்குரிய நெ.து.சு. அவர்களுக்கென்றே பிறந்த மொழியோ என்று நம்மை வியக்கச் செய்கின்றதன்றோ?

ஏற்கெனவே மக்களைப் பல்லாற்றானும் சந்தித்து வந்த நெ.து.சு. அவர்கள் இத் திட்டம் முழு வெற்றி பெற பொது மக்களின் ஒத்துழைப்பை மிகவும் வேண்டினார்கள். அன்று முதல் பகலுணவுத் திட்டம் வெற்றி நடைபோட்டு பல பேரக் குழந்தைகளை எல்லாம் இன்று ஈன்றெடுத்து வருகிறது.

அடுத்து, பள்ளிச் சீரமைப்பு! இத் திட்டத்திலும் மக்களையே மிகவும் நம்பினார் ஐயா! அரசு தனி, அதிகாரிகள் தனி, மக்கள் தனி என்றிருந்த ஒற்றுமையற்ற வர்க்கத்தன்மையை — பூர்சுவா மனப்பான்மையை அடியோடு ஒழித்தார்.

குடியரசில், எந்த ஒரு திட்டமும் மக்கள் அடிப்படையில்தான் நடக்கவேண்டும். அவர்கள் இல்லாமல் எதையும் சாதித்து வெற்றி பெறலாம் என்பது சுவரின்றிச் சித்திரம் எழுதலாம் என்ற அசட்டுத் துணிவைப் போன்றது என்று திண்ணமாக எண்ணினார். ஒரு கையில் மக்களையும், மறு கையில் அதிகாரி களையும் அணைத்து ஒருமுகப்படுத்தி தம் பணிகளில் வெற்றி நடைப் போட்டார்கள்.

எவ்வளவுதான் பொருளைச் செலவழித்துத் திட்டமிடினும், மக்களது ஒத்துழைப்பு இல்லையேல், அது வெற்றி பெறாதது

மட்டுமல்ல, அத் திட்டத்தில் மக்களுக்கு ஒருவிதப் பிடிப்புமில்லாமல் போகும் எனக் கண்டு முழுக்க முழுக்க மக்களைக் கொண்டே பள்ளிகளை ஏற்படுத்தி இன்றியமையாத உதவிகளை மட்டும் அரசினிடம் இருந்து பெற வழிநடத்தி இத் திட்டத்தை உருவாக்கினர். எனவே, இது 'மக்கள் ஈடுபாட்டு இயக்க' மாகவே (People's imvoluement scheme) மலர்ச்சி எய்தி நடைபெறலாயிற்று.

அடுத்து, சீருடை! ஒரு மனிதனின் கையில் உள்ள ஐந்து விரல்களே ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும்போது இப் பரந்த நிலவுலகில் உள்ள மக்களின் மனமும் உடலும், உடையும் எவ்வளவு வேறுபட்டிருக்கும்!

கற்கும் இடம் ஒன்றுதான். அதில் கற்க வரும் பிள்ளைகளில் எத்தனை விதம்! செல்வந்தர் வீட்டுக் குழந்தையும் வருகிறன்; குடிசை வாழ்வோனின் குழந்தையும் வருகிறன். செல்வந்தரின் மகன் பட்டுச் சட்டையும், குடிசை வாழ்வோனின் மகன் கந்தலும் அணிந்து வருகிறார்கள். படிக்கும்போதும், பாடும்போதும், உணவை உண்ணும்போதும், ஒன்றுக விளையாடும்போதும் இந்த வேறுபாடு நன்கு வெளிப்படுகிறது.

செல்வந்தர் கட்சி—அங்கே ஆணவம் தலையெடுக்கிறது!

குடிசை வாசியின் கட்சி—அங்கே அழுக்காறு உருவெடுக்கிறது!

மொத்தத்தில், கற்க வந்த இடத்தில் இச் சிக்கல் தோன்றி விடுகிறது; கல்வி பாழாகிறது. இந்த வேறுபாட்டுணர்வைத் தூண்டும் உடையில் ஓர் சீரான நிலைமை வேண்டும்! தான் அமைச்சனின் பிள்ளை - தான் ஆண்டியின் பிள்ளை என்ற எண்ணம் அவர்களிடையே வளரக்கூடாது. எனவே, அவை தோன்றுமலிருக்க அனைவருக்கும் ஒரே வகையான, ஏன், ஒரே நிறமுள்ள ஆடையையே உடுத்தச் செய்யவேண்டும் என்று உளவியல் நோக்கத்தோடு செயல்படுத்தினர்கள். அதுதான் 'சீருடைத் திட்டம்.'

அன்று தொள்ளாயிரத்து ஐம்பது உயர்நிலைப் பள்ளிகளே தமிழ்நாட்டில் இருந்தன. அந்த நிலையை மாற்றி, இரண்டாயிரத்து முந்நூறு பள்ளிகளாக விரிவுபடுத்தினர் ஐயா அவர்கள்!

முப்பதாயிரம் ஆரம்பப் பள்ளிகளில், சுமார் பதினறு இலட்சம் மாணவர்கள், மாணவியர்களை மதிய உணவு பெறச் செய்தார்கள்!

கட்டடங்கள். தளவாடங்கள், துணைக் கருவிகள், நூல்கள், இவ்வாறு சுமார் ரூபாய் பத்துக்கோடி அளவில் பொதுமக்களிட மிருந்து திரட்டிப் பள்ளிகளைச் சீர்படுத்தினர்கள்.

1954 ஆண்டு அக்டோபர் திங்கள் உயர்கல்வி இயக்குநராகப் பொறுப்பேற்றார்கள். அப்போதைய முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களைக் கண்டு நன்றி கூறச் சென்றார்கள். அப்போது முதலமைச்சர், இயக்குநராம் நெ.து.சு. அவர்களிடம், "ஜாதி பாராமல், வருவாய் பாராமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்கவேண்டும். ஆழ்ந்து சிந்தித்து, அதற்கான ஒரு திட்டம் தீட்டிக்கொடுங்கள். அத் திட்டத்தை ஒரே எட்டில் (முயற்சியில்) செய்துவிட முடியாது. இரண்டு மூன்று எட்டுகளில் முழுமையாகும்படி திட்டம் போட்டுக் கொடுங்கள்" என்று கூறினர். அதன்படி நெ.து.சு. அவர்கள் திட்டம் வகுத்துக் கொடுத்தார்கள். படிப்படியாக இலவசக் கல்வி விரிவுபடுத்தப் பட்டது. 1964-65ஆம் கல்வியாண்டிலிருந்தது எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்கும் ஆணையை அரசிடம் இருந்து பெற்று, நிறைவேற்றிக் காட்டினர்கள்.

இலவசக் கல்வித் திட்டம் முழுமையான வெற்றி பெற்ற போது முதலமைச்சராக வீற்றிருந்தவர், திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் ஆவர்.

இதுதான் இலவசக் கல்வியின் வரலாறு!

இனி, ஞானத் தந்தைத் திட்டம்! உயர்நிலைப் பள்ளிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளும், தொடக்கப் பள்ளிகளும் ஒன்றுக் கொன்று உதவிபுரிந்துகொண்டு இணைந்து கல்வி வளர்ச்சி மேம்பாட்டிற்கு அடிகோலும் என்ற உயர்ந்த நோக்கத்தை மைய மாக வைத்து நெ.து.சு. அவர்கள் உருவாக்கிய திட்டம்தான் ஞானத் தந்தைத் திட்டம் (God father scheme).

இத் திட்டங்களுக் கெல்லாம் அரசையும்விட—மக்களையே—அனைத்திற்கும் அடிப்படையான பொதுமக்களையே நம்பினர்கள். பள்ளி வளர்ச்சி பற்றிய மாநாடுகளை (School improvement Conferences) ஆங்காங்கே நடத்தினர்கள்.

காந்தியடிகளின் உயிர்க்கொள்கையான 'சுயதேவைப் பூர்த்தி'யை—மக்களைக் கொண்டு மக்களே பூர்த்தி செய்து கொள்ளும் வழியை ஏற்படுத்தினார்கள்; மக்களை நெறிப் படுத்தினார்கள். அவ்வளவுதான்! பின்பு எல்லாம் தானாக விரைந்து செயல்படத் தொடங்கின.

இவ்வாறு, பல கல்வித் திட்டங்களை ஈன்ற தந்தையாகி—நாடெல்லாம் கல்வி நீரோடை அல்ல, கல்விப் பேராறு பெருக் கெடுத்தோடச் செய்தார்கள் எனின் மிகையாகாது.

நெ. து. சு. அவர்களின் திட்டங்களை எல்லாம் கண்ட அரசியல் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும் மனமாரப் பாராட்டி மகிழ்ந்தனர்!

இவர்களில், குறிப்பிடத்தக்கவர்கள் இந்தியக் குடியரசின் முதல் மக்கள் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத், ஆளுநராக இருந்த திரு. விஷ்ணுராம் மேதி, நடுவண் அரசின் முன்னாள் கல்வியமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் மற்றும் பலர் ஆவர்!

வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் ஒரு பள்ளிச் சீரமைப்பு மாநாட்டிற்கு குடியரசுத் தலைவர், மாண்பமை திரு. இராஜன் பாபு அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். அப்பொழுது குடியரசுத் தலைவர் தம் உரையில்,

''நானும் மகாத்மா காந்தியும் பீகார் மாநிலக் கிராமங்களில் ஏற்படுத்த முயன்ற மக்கள் ஈடுபாட்டு இயக்கம் தமிழ்நாட்டுக் கல்வித் துறையில் வெற்றிகரமாகச் செயல்படுவது கண்டு பாராட்டுகிறேன்" என்று உளம் நெகிழ்ந்து குறிப்பிட்டார்கள்.

மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த முன்னாள் பாரதப் பிரதமர், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்த மக்கள் ஈடுபாட்டு இயக்கத்தைக் கண்டு பாராட்டி, இதே முறையைக் கையாளும்படி பிற மாநில அரசுகளையும் வேண்டிக்கொண் டார்கள்.

ஆகவே, நமது கல்விநெறிக் காவலர் அவர்கள் வகுத்த சிறப்பு வாய்ந்த கல்வித் திட்டங்கள் தமிழக அளவில் மட்டு மல்லாமல் அனைத்திந்திய அளவிலும் வெற்றி பெற்றன; பயனுற் றனர் மக்கள். 'நெ. து. சு; நெ. து. சு' என்ற இழுமெனும் இசை யோசை எங்கணும் கேட்டது!



ஆதெக்கூர் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் பிரதமர் நேரு அவர்களை வரவேற்று மடல் அளிக்கிறார் கல்வித் தந்தை நெ. து. சு. அவர்கள்



இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களுடன்
கல்வித் தந்தையின் செல்வன் திருவள்ளுவன்

பாரதியின் பின்தோன்றலாம் பாவேந்தர், தமிழகக் கல்வி நிலை மிகவும் பின்னடைந்து இருக்கிறதே என்று வருந்தி தன் ஏக்கத்தைப் பின்வருமாறு இலக்கியம் ஆக்கினார் :

"என்னருந் தமிழ் நாட்டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமய மாமலை போல
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?"

அவரால் இவ்வளவுதான் செய்ய முடிந்தது. அந்த ஏக்கத்தையும் தீர்த்து அதற்குமேலும் ஆக்கத்தை உருவாக்கிய பெருமை நெ. து. சு. அவர்களையே சாரும்.

புண்ணிய பாரதம் விடுதலை பெற்ற பின்னும் அறிவில் முழுமையான விடுதலை பெறவில்லை. தீட்டிய திட்டங்கள் அனைத்தும் ஏட்டளவில் நின்றன. நெஞ்சுறுதியோடு செயல்படுவோர் இல்லாத முகத்தான் முடம்பட்டு நின்றது. கல்விவளர்ச்சித் திட்டங்களால் காய்த்துக் கனிந்து, குலுங்கி நிற்கவேண்டிய கல்விக்கொடி, பல பூக்களைப் பூத்துப் பூத்துக் கருகி விழும் பரங்கிக்கொடியைப் போன்றிருந்தது.

ஆம்! அரசியலில் முழுமையான விடுதலையை 1947ஆம் ஆண்டில் பெற்ற நமக்கு 1954ஆம் ஆண்டுவரையில் அறியாமையிலிருந்து முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. நெ. து. சு. அவர்கள் பதவிக்கு வந்தபின்னர்தான்—காந்தியடிகள் வெள்ளையர்களோடு அறப்போர் நடத்திப் பையப்பைய வெற்றி கண்டு இறுதியில் விடுதலைத்தாயை அடைந்தது போலத்தான்—நெ.து.சு. அவர்களும் அறியாமையோடு அறப்போர் நடத்தி நடத்தி, மெல்ல மெல்ல ஆக்கப் பணிகளைச் செயல்படுத்தி அறியாமை இருளை அகற்றினார்கள்!

" வயிற்றுக்கும் சோறிடவேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்சிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்"

என்ற பாரதியின் வாழ்க்கை விருப்பத்தைத் தன் நோக்கமாகக் கொண்டு நெ.து.சு. அவர்கள் செயல்பட்டு வந்தார்கள். நெ.து.சு.

அவர்கள் தம் அரும்பணியால் பெற்ற வெற்றி அவர்களுடைய வெற்றி மட்டும் அல்ல ; நாட்டிற்கே கிடைத்த பெரும் வெற்றி !

நெ.து. சு. அவர்கள் திட்டங்கள் தீட்டிச் செயல் வீரராகத் திகழ்ந்த காலத்தில், மதிய உணவுத் திட்டம் மாபெரும் திட்டமாகி வளர்ச்சி பெற்ற நேரத்தில், அவரைக் காணாத மக்களும் (சிலர் இருக்கக்கூடும்) நெஞ்சம் நிறைந்த நன்றியோடு வணங்கினர். எங்கெங்கு நல்லிதயம் படைத்த மனிதர்கள் வாழ்ந்தார்களோ, அவர்கள் எல்லாம் பாராட்டிப் போற்றினார்கள். இதனால் நெ.து.சு. அவர்களுக்கு 1961ஆம் ஆண்டு "பத்மஸ்ரீ" (தாமரைத் திரு.) விருது வழங்கித் தனக்குப் பெருமை தேடிக் கொண்டது இந்திய அரசு !

இதை, நெ.து.சு. அவர்களையொத்த கல்வி அறிஞர் திரு. ஜே. பி. நாயக் அவர்கள் மெய்ச்சிலிர்ப்போடு கூறியிருக்கிறார். ஆங்கிலத்தில் உள்ள அப் பகுதியை மொழிபெயர்க்காமல் அப்படியே அறிந்தால்தான், அந்த உள்ளத்தின் உணர்வுத் தோய்வை முழுமையாக அறியமுடியும். அவர் குறிப்பிடுகின்றார் :

" When he came to Delhi long ago, I invited him (N. D. S.) for dinner. We both went to a South Indian restaurant and had a good meal. When I called for the bill, the manager came, thanked me and said, "I will not accept any payment from you. I deem it a great honour that the 'Father of the mid-day meals' scheme in Tamil Nadu has came to my shop for his meals." He stood by his ground in spite of all that I could say. This has become an unforgetable incident for me; and it shows what a tremendus service he did to the cause of education in Tamil Nadu and how the people love him for it."*

இப்படி முடிக்கிறார் அந்தக் கல்விப் பெருந்தகை. நெ. து. சு. அவர்களைப் பற்றிய அவர் உள்ளத்தில் எழுந்த உணர்வை அப்படியே கூறியமைக்கு நாம் அவரைப் போற்றக் கடமைப் பட்டிருக்கிறோம்.

---

* J. P. Naik - Adviser, ministry of Education & S. W. India, New Delhi—தாமரைத் திரு. நெ. து. சுந்தர வடிவேலு மணிவிழா மலர் — கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

அந்த உணவு விடுதியின் மேலாளரின் குழந்தையோ, அவர் உறவினர் குழந்தையோ மதிய உணவுத் திட்டத்தால் பலனடைந் தார்களோ என்னவோ, அறியோம். இருப்பினும், மதிய உணவுத் திட்டத்தின் தந்தையாம் நெ. து. சு. அவர்களைத் தன் நெஞ்சத்தில் உயர்வான இடத்தில் வைத்துப் போற்றியிருக்கிறார் என்பதை அறிய நமக்கு மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது. அதன் எதிரொலி யாக கண்களிலே ஆனந்தக் கண்ணீர் முட்டி நிற்கின்றது!

"சுந்தர வடிவேல் என்றோர்
சுறுசுறுப் பெழுந்ததாலே
இந் நாடெல்லாம் கல்வி
இயக்கமானது பார்!"

என்று பாடிய பகுத்தறிவுக் கவிஞன் பாட்டு அடிகளும் ஈண்டு நோக்கத் தக்கன.

நெ. து. சு. அவர்களின் வாழ்க்கையில் பெரும் பங்கு கொண்ட ஈரோட்டுச் சிங்கம் தந்தை பெரியார் அவர்கள் குறிப் பிட்ட கருத்தினை ஈண்டு நினைத்துப் பார்த்தல் பொருத்தமாகும்.

" 1900இல் நம் நாட்டில் கல்வி விகிதம் 100-க்கு 5 சத விகிதம் பேரே கற்றவர்களாக இருந்தார்கள். 1940லும் கூட மக்கள் 100-க்குச் சுமார் 10 அல்லது 12 பேர்கள் வீதம்தான் கற்றவர் களாக இருந்தார்கள். அந்தக் காலத்தில் கல்விக்குச் செலவிடப் பட்ட தொகை ஆண்டொன்றுக்குச் சுமார் 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்பதாகத்தான் இருந்தது. இன்றைய தினம், நம் தமிழ்நாடு கல்வி நிலையில் ஆரம்பப் பள்ளி 32,000-த்தையும், உயர் நிலைப் பள்ளி 2,700-யும், கல்லூரிகள் 175-யும் கொண்டிருப்ப தோடு இவற்றில் கல்வி பெறும் மாணவர்கள் ஆரம்பப் பள்ளி களில் 64,00,000 பேரும், உயர்நிலைப் பள்ளிகளில் 6,70,000 பேரும், கல்லூரிகளில் 1,60,667 பேரும் ஆகும்.

கல்விக்காகச் செலவிடப்படும் தொகை சுமார் 85 கோடி என்பதாகவும் இருந்து வருகிறது. இந்தப் பெருமையான நிலைக்குப் பெரும் பங்கு நமது பெருமைக்குரிய நெ. து. சுந்தர வடிவேலு அவர்களுக்கு உரியது ஆகும்."*

---

* தந்தை பெரியார் அவர்கள் —'தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர் — கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

இது, தந்தை பெரியார் அவர்கள் 1972இல் கோடிட்டுக் காட்டும் கருத்து. சில ஆண்டுகளுக்குமுன் இருந்த கணக்கு. 1975ஆம் ஆண்டான இன்று கல்வித் தருவில் மேலும் பல புதிய கனிகள் கனிந்திருப்பதைக் கண்கூடாகக் கண்டு, தமிழகம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறது.

'முளையாக இருந்ததை மரமாக வளர்த்த பெருமை நெ. து. சு. அவர்களுக்குத்தான் உண்டு' — என்ற கருத்தைப் பெரியார் அவர்கள் வலியுறுத்தியிருப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

நெ. து. சு. அவர்கள் கல்வித்துறை இயக்குநராக இருந்த போதுதான் எண்ணற்ற பணிகளை மேற்கொண்டு தோல்வி என்பதனையே காணாது வெற்றிபெற்று வந்தார்கள். பின்னர், துணைவேந்தராக ஆட்சிக்கு வந்த பின்பும் பணிகள் குறைந்ததோ எனின், குறையவில்லை. குறையாத பணிகளோடு பொறுப்புக்கள் மேலும் பெருகின. இமயமலையன்ன பணிகள் அவர்களை எதிர் நோக்கி நின்றன.

பல்கலைக் கழகக் கல்வி வல்லுநர் குழுவோ, ஆட்சிக் குழுவோ, நிர்வாகக் குழுவோ தீட்டும் கல்விக் கொள்கைகளை அல்லது அரசு பரிந்துரை செய்யும் கல்விக் கொள்கைகளை ஏற்பதற்குமுன் தன் நுண்ணறிவால் ஆராய முற்படுகிறார். முதல் வகுப்பு மாணவன் முதல் பட்ட மேற்படிப்புப் படிக்கும் மாணவன் வரை மாணவர் பலரையும், அதில் பலவகைப் பிரிவினரையும், பல மாநிலத்தவரையும் நேரில் கண்டு அவர்களின் மனப்போக்குகளை எல்லாம் தெளிவாகக் கண்டவர்கள் ஆதலால், அரசின் கொள்கைகளையும், ஆட்சிக்குழுக் கொள்கைகளையும் தம்முடைய சிந்தனைகளையும் ஒருமுகப்படுத்தி, ஒப்பிட்டு, உற்றுநோக்கி, எல்லோரும் விரும்பும் வண்ணம், தமது எதிர்காலச் சந்ததியினர் சிறப்போடு வாழவல்ல அறிவுத்துறையில் தமிழ் மகன் முன்னோடியாக இருக்கும் வகையில் நல்லவிதமான கல்விக் கொள்கையை உருவாக்குகிறார்கள்!

மற்றவர்கள் கொடுப்பது ஒரு ஓவியத்தில் கோட்டுப் படம் (Out-line Drawing) என்றால், நெ. து. சு. அவர்கள்தான் அதை முழுமையாக்கி வண்ணம், வடிவம் கொடுத்து மறக்கமுடியாத ஓவியமாக்குகிறார் என்றால், அது உண்மை!

" Shri Sundaravadivelu has shaped and moulded the educational policies of Tamil Nadu for more than three decades before

he became the vice-Chancellor of Madras University. He consolidated the educational structure of the state and should rare understanding of the problems of educational planning in Under-developed countries. He'has played, a significant role in making Tamil Nadu as one of the educationally advanced states of the Indian Union.

In fact, he has left an indelible impression at all levels of the education from the primary to the university stage.

As long as our education remains in the hands of men like Shri Sundaravadivelu I can confidently say that the future of the country is safe."*

*இவ்வாறு, இக் கல்வித் தந்தை அவர்களையே முழுமையாக நம்பி நிறைவடைந்து கொண்டிருக்கும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள் இன்று நாட்டில் பலர்.*

"His auspicious hands and thoughts have brought much success to our students through the decade"

*என்று நெகிழ்ந்து கூறும் உள்ளங்கள் பலப் பல. ஐயா அவர்களை எண்ணும்போதெல்லாம் கற்றுத் துறைபோகிய அறிஞர்களுக்குத் தோன்றும் எண்ணம் ஒன்றே ஒன்றுதான். அது,* "Never before was so much achieved in the field of Higher Education in so short a time."

*உண்மைதானே!*

*பல்கலைக் கழகங்களின் பொதுவான நோக்கம், உயர் கல்வியை அளித்து, பல துறைகளுக்கும் நாட்டுத் தலைவர்களை உருவாக்குதலும். ஆராய்ச்சித் துறையை ஊக்குவித்து உயர் மட்டக் கல்வியின் தரத்தை உயர்த்துதலும் ஆகும். எனினும் தொழில் நோக்குக் கல்வியை நுழைப்பதிலும் சென்னைப் பல்கலைக் கழகம் முன்னோடியாக விளங்குகிறது. அந்த அளவுக்குத் தம் ஆற்றலால் பாடதிட்டங்களை உருவாக்கி வளர்த்த பெருமை நெ.து.சு. அவர்களையே சாரும்.*

---

* Thiru. Suraj Bhan, vice-chancellor, Panjab University—*தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.*

முதல் இந்திய விடுதலைப்போர் நடந்த 1857ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் அன்றுமுதல் இன்றுவரை அயராது அரும்பணியாற்றி வருகின்றது!

"நான் கல்லூரி மாணவனாக இருந்தகாலத்தில், கல்வி என்பது மேட்டுக்குடி மக்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே எட்டுவதாக இருந்து வந்தது. இந்திய விடுதலைக்குப் பிறகு தொடர்ந்து எடுத்து வரும் முற்போக்கு முயற்சி, இலவசக்கல்வி, உதவித் தொகை, எண்ணிக்கை வளர்ச்சி, நிறையக் கல்லூரிகள் திறத்தல் இவற்றின் விளைவாக, இன்று கல்லூரிகளில் படிப்பவர்களில் 100-க்கு 60 பேர் தாழ்த்தப்பட்ட பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வருகின்றவர்கள் ஆவர்.

இது அமைதியாக நடக்கும் சமுதாயப் புரட்சி. மாணவ—மாணவிகள் இதனை உணர்ந்து, கல்விக் கருமமே கண்ணாயிருந்தால் எளிதில் சமத்துவம் மலரும்; ஏற்றத் தாழ்வுணர்ச்சிகள் மறைந்து விடும்."*

மேற்காண்பவை நெ. து. சு. அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள். என்னே அவர்களின் உள்ள விழைவு! படிப்பவர்களும், படிக்க ஊக்குவிப்பவர்களும் தத்தம் பட்டங்களுக்கேற்ற பதவி தேடுவதோடு கடமை முடிந்துவிட்டது—வாழ்க்கை நிறைந்துவிட்டது என எண்ணிடும் ஒரு காலகட்டத்தில், சமத்துவம் ஏற்படவே 'உயர் கல்வி' என்ற உன்னத இலட்சியத்தை மனதில் வைத்து அவர்கள் பணிபுரிகிறார்கள்! அற்ப ஆசையோடு கற்போரையும் தட்டி எழுப்பித் தம் இலட்சியத்தை நோக்கி இழுத்துச் செல்கிறார்கள்!

1969ஆம் ஆண்டுக்கு முன்னர் துணைவேந்தராக வீற்றிருந்தவர் மூதறிஞர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள். சுமார் இருபத்தேழாண்டுகள் ஆட்சியில் இருந்தவர். நெ.து.சு. அவர்களாலேயே, 'கட்டிக்காத்த கால்நூற்றாண்டு' என்று அவர் பதவியிலிருந்த காலகட்டம் மதிக்கப் பெற்றது. அப்படிப்பட்ட மூதறிவாளர் முதலியார் அவர்கள், நம் ஐயா அவர்கள் பதவி ஏற்ற பின்னர், நம் ஐயா அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்:

---

* 'தமிழரசு'—இதழ் 1—4—1975; சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பேட்டி.

" As vice-chancellor, he has played an active role in organising many new schemes and the revision of the curricula of studies to meet modern requirements."*

என்று, பழையன கழிக்காமல் புதியன புகுத்திய நெ. து. சு. அவர்களை மனந்திறந்து பாராட்டியிருக்கின்றார்.

ஐயா அவர்கள் பொறுப்பிலிருக்கின்ற இன்று, அனைத்தையும் சேர்த்து இப்போது சுமார் 112 விதமான பாடத் திட்டங்கள் இருக்கின்றன.

" ...... again a number of new courses have been introduced in the faculties of Medicine and Engineering. The institution of the course in Master of Management Science, merits special mention. It is a great boon to the students of the Southern Region who had to migrate to calcutta or Ahamadabad to study Managenent science.

Mr. Sundaravadivelu is a distinguised educationist, an able administrator, a great planner and a towering personality. His wide knowledge, nature, wisdom and dynamism are great assets to the Madras University."*

என்றவாறு கல்வி உலகங்கள் எல்லாம் தத்தம் கருத்துக் களைத் தெரிவித்து மகிழ்கின்றன.

ஒருவனைப் பண்பாளனுக்குதவற்கு முதற்படி கல்வி என்கிறார் விவேகானந்தர். 'கேடு இல் விழுச் செல்வம்' என்கிறார் வள்ளுவர். 'சிற்றுயிர்க்கு உற்ற துணை' என்கிறார் குமர குருபரர். 'கற்றல் கேட்டலுடையார் பெரியார்' என்கிறார் திருஞானசம்பந்தர்— இத்தகு சான்றோர்கள் எல்லாம் போற்றுகின்ற இக் கல்வியை ஐயா அவர்கள் முன்பு வளர்த்து வந்தார். இன்றைநாளில், வளர்ந்து வந்த அதை வளப்படுத்துகிறார்.

---

* Sir. A. L. Mudaliar—M.D., LLD., D.Sc., D. C. L.,— தாமரைத் திரு. நெ.து. சுந்தரவடிவேலு மணி விழா மலர் —கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

* Thiru. K. Rajagopalan, M. A., L. T., தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர் — கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

"His rich experince and dedicated Service to the field of education for the past three decades has enriched the state in many respects. He is one person who expresses his view points at official public and private meetings in such a clean manner that there cannot be any Mis-understanding of his Mind. He has been most considerate to the students and the teachers are his contributions to their cause in Tamil Nadu and at all India level are invaluable."*

*ஆம்! மேற்கூறிய அறிஞரின் ஆய்வுரைக் கிணங்க இவருக்குப் பட்டதை அஞ்சாமல் சொல்லுவார்கள்; செய்வார்கள். அது அவர் நன்மைக்காக இராது; கல்வித் துறை நன்மைக்காகவே இருக்கும்.*

*நாட்டிற்கு நலம் பயக்கும் கல்வித் திட்டங்களை வகுத்து வகுத்து, இவர்கள் ஒரு கல்விச் சிந்தனைச் சிற்பியாக உருமாறி யிருக்கிறார்கள், 1960இல் தீட்டப்பெற்ற திட்டம்தான் 'கராச்சிக் கல்வித் திட்டம்.' அத் திட்டத்தை உருவாக்கிய அறிஞர் பெருமக்களுள், நெ. து. சு. அவர்களும் ஒருவர். அத் திட்டம் ஆசியக் கல்வித் திட்டம்; அது 1966இல் சமர்பிக்கப்பட்ட கோத்தாரிக் குழுவில் இடம் பெற்றது.*

"No wonder his counsels are valued and his words respected wherever and whenever, people meet to think and plan about perplexing problems of education."*

*மேற்கூறியவாறு, கல்வித்துறையில் எந்தவிதச் சிக்கலுக்கும் இடமில்லாத வகையில்—அப்படி இருந்தால் தம் தெளிவான சிந்தனையின் மூலம் அவற்றைத் தகர்த்து, அதில் பலனைக் காணச் செய்து வெற்றி பெறுவதில் நிகர் நெ. து. சு. அவர்களேதான்.*

*தந்தை பெரியார் அவர்களின் சமுதாய சீர்திருத்தப் பணி யினைப் பற்றிக் குறிப்பிடும்போது, "இரண்டு நூற்றாண்டுகளில்*

---

* Dr. G. Rangaswami — vice-chancellor, Tamil Nadu Agricultural university—*தாமரைத் திரு. நெ. து. சுந்தர வடிவேலு மணிவிழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.*

* S. P. Adinarayan—vice-chancellor, Annamalai university —*தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.*

செய்து முடிக்கவேண்டிய பணியை இருபது முப்பது ஆண்டுகளில் தன் ஓயா உழைப்பால் செய்து முடித்தார். 'putting centuries into capsules' என்று அவரைப் பற்றிக் குறிப்பிடலாம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதை நாம், இங்கே பொருத்திப் பார்த்து மகிழ வேண்டிய நிலையில் இருக்கிறோம். கொளுஞ்சியும் தும்பையுங்கூட முளைக்காத பாழ்நிலத்தில் செந்நெல் பயிர் வேண்டும் என்றால் ஒரு விவசாயி எவ்வளவு நாள் எவ்வளவு தொல்லைகளை ஏற்று உழைக்க வேண்டும்?

அப்படித்தான்—பாழ்நிலத்தில் நெற்பயிரிட்டது போலத் தான் - கல்வி மணம் அற்றிருந்த தமிழகத்தில் கல்விப் பயிர் நன்கு செழித்தோங்கச் செய்து அதன் மணத்தை எங்கும் பரவச் செய்தார்கள் இத் தாமரைச் செல்வர் அவர்கள்.

குறைந்தது ஒரு நூற்றாண்டு, அல்லது ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் முடியக்கூடிய பணிகளைக் கடந்த முப்பதாண்டு கால நற்பணிகள் மூலம் முடித்திருக்கிறார்கள் என்றால், அண்ணா அவர்கள் சொன்ன putting centuries into capsules என்ற தொடரைப் பெரியார் அவர்களுக்குச் சூட்டி மகிழ்ந்ததைப் போலவே, அவர் வழி நிற்கும் இவர்களுக்கும் சூட்டி மகிழலாம் அன்றோ!

அனைவருக்கும் கடமை ஒன்றும், ஓய்வு நேரத்தில் 'பொழுது போக்கு' என்ற ஒன்றும் நிச்சயம் உண்டு. ஆனால் நம் நெ. து. சு. அவர்களுக்கு, இரண்டும் தனித்தனி இல்லை. ஆம். இவர்களுடைய பொழுதுபோக்கும் கடமையாகத்தான் இருக்கிறது.

இவர்களுக்கு ஓய்வு ஏது? 'எனக்கு ஓய்வு வேண்டாம்' என்று உறுதி எடுத்துக்கொண்டவராயிற்றே! அப்படி ஏதாவ தொன்றிருந்தால், நூல்களைத்தான் படிப்பார். உணவில்கூட ருசி பார்த்து உண்ணும் வழக்கம் இல்லையே! அந்த மனத்தில் எப்போதும் கல்வி பற்றிய சிந்தனையே கருத்தரித்துக் கொண் டிருக்கும்!

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வீற்றிருந்த, நெ.து.சு. அவர்கள் எப்படி பலவற்றிலும் புலமை பெற்றவர் ஆனார்கள்? படித்தார்கள்...படித்தார்கள்...மேலும் மேலும் படித்து புலமை பெற்றவர் ஆனார்கள்! சார்லஸ் இ. ஜோன்ஸ் அவர்களின் "Leaders are Readers" என்ற கருத்திற் கிணங்க விளங்கி வருகிறார்கள் என்பது கண்கூடு.

ஆம்! பட்டம் பெற்றவர்கள் எல்லாம் பல்கலைக்கழகத் தலைவர்கள் ஆவதில்லை. வாழ்நாள் முழுவதும் படிப்பவர்கள்தான் —படித்துக்கொண்டிருப்பவர்கள்தான் கல்வித் தலைவர்களாக முடியும் என்பதைச் சுருங்கக் கூறி விளங்க வைத்த அறிஞர் ஜோன்ஸைப் பாராட்டத்தான் வேண்டும்.

தமிழ்நாட்டில், கல்வி வளர்ச்சி குறித்து நெ. து. சு. அவர்கள் கண்ட மாநாடுகள் எண்ணிறந்தன. இந்தியத் துணைக்கண்ட அளவிலே, அவர் கலந்துகொண்ட கல்வி வளர்ச்சி மாநாடுகள் பல. ஆசியக் கண்டத்தின் மொத்தத்திற்கும் ஏற்ற கல்வித் துறைகளை ஆராய்ந்த மாநாடுகள் சிலவாகும்.

உலக நாடுகளில் எல்லாம் நம் தாயகக் கல்வி வளர்ச்சி குறித்துக் கலந்துகொண்ட மாநாடுகள் பல. அவற்றை எல்லாம் கணக்கெடுத்தால், அவற்றின் பட்டியலுக்கே ஒரு தனி நூல் ஆக்க நேரிடும்.

இங்கே, மிகமிக இன்றியமையாத ஒன்றை நாம் தெளி வாக்கி கொள்ளவேண்டும். திரு. நெ. து. சு. அவர்கள், நம் கல்வி வளர்ச்சிக்காக நீரும் உரமுமாக அமையக் கூடிய வகையில் அமைந்திருந்த மேனாட்டுக் கல்விமுறைகள் சிலவற்றை எல்லாம் நேரில் கண்டறிந்து, அறிந்ததோடு மட்டுமல்லாமல், அவர்களோடு அவை குறித்து விவாதித்து—பல தெளிந்த சிந்தனைகளை இங்கே புகுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்க்ள் மேல்நாடு களில் மேற்கொண்ட சுற்றுப்பயணங்கள் நமக்குத்தான் பயனு டையதாய் விளங்கியது எனக் கூறல் தகும்.

சோவியத்து ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன், பிலிப் பைன்ஸ், பிரான்ஸ், கிழக்கு ஜெர்மனி, மலேசியா, ஜப்பான் ஆகியவை நெ. து. சு. அவர்கள் சென்ற நாடுகள் ஆகும். அங்கே எல்லாம் சென்ற தாமரைச் செல்வர் அவர்கள் பல கருத்துச் செல்வங்களை இயன்ற அளவுக்கு எடுத்துக்கொண்டு வந்திருக் கிறார்கள். அவற்றில் சிலவற்றைத் தமிழருக்காகப் படைத்ததை இங்கே காண்போம்.

'அறிவு என்ற பெரும்பரப்பை, நம்பிக்கை, முயற்சி என்ற இரு கால்களோடு சுற்றி வந்து வென்று வாழ்வோம்' என்று அவர்கள் கூறியமைக் கிணங்க, உலக நாடுகளில் உள்ள அறிவுச் செல்வங்களை எல்லாம் திரட்டும் முகத்தான், நெ து. சு. அவர்களே முதற்கண் நம்பிக்கை, முயற்சி ஆகியவற்றால், அவற்

றை அடைந்துவிட்டுத்தான் மற்றவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், நம்நாடு சுதந்திர வேட்கை பெற, பாலகங்காதர திலகர் 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என முழங்கினார். பின்னரே அனைவருக்கும் உணர்வு வந்தது. அதுபோலவே நெ. து. சு. அவர்கள், மக்கள் அறியாமையிலிருந்து விடுதலை பெறக் "கல்வி மக்களுடைய பிறப்புரிமை" என்று முரசு கொட்டி முழங்கி வந்தார்கள் என்றால், அவர்களின் திண்ணிய—நுண்ணிய உணர்வை என்னென்பது!

கல்விநெறிக் காவலர் அவர்கள், கிழக்கு ஜெர்மனி நாட்டிற்குச் சென்றார்கள். அங்கே தாம் கண்ட கல்வி நெறிகளைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்:

"கல்வியும் அதனால் ஏற்படவேண்டிய சமுதாய முன்னேற்றமும் பற்றிய சிந்தனையிலேயே வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டுள்ள எனக்கு, வெளிநாட்டுப் பயணங்கள் விழியைத் திறந்தன. வழியைக் காட்டின. ஆர்வத்தை ஊட்டின....!" என்று தொடங்கியிருப்பது அந்த அறிஞர் இன்னும் அறியவேண்டும் என்று தன்னுள் கொண்டிருந்த வேட்கையையே காட்டுகிறது.

"புதிய ஜெர்மனியில், கல்வி, பணம் போட்டு வாங்க வேண்டிய பொருள் அல்ல; எல்லோரும் பெறும் உரிமை" என்று பெருமிதத்தோடு கிழக்கு ஜெர்மனியார் கூறியபோது, கல்லூரி இடங்களை விற்க உரிமை கொண்டாடும் என் தாய்த்திரு நாட்டையும் அதன் தலைவர்களையும் எண்ணி, நாணித் தலை கவிழ்ந்தேன்."

எந்த இலட்சியத்திற்காக வாழ்கிறார்களோ, அந்த இலட்சியம் வெற்றி பெறும்போது—அதற்கு ஊறு செய்தால் உந்த உள்ளம் எப்படித் துடிக்கும்? அந்தத் துடிப்பைத்தான் மேற்கண்ட வரிகளில் கேட்கிறோம்!

புதிய ஜெர்மனியில் கல்வி சில பேருக்குக் கிடைக்கும் பரிசுப் பொருள் அல்ல; எல்லோருக்கும் கிடைக்கும் பொதுச் செல்வம். கையில் பணம் இல்லாததால் படிப்புத் தடைபட்டது இல்லை. கல்வி பெறுவதற்கு யாருடைய தயவுக்கும் காத்துக் கிடக்க வேண்டியதில்லை—என்றால் இங்கும் அந்தநிலை இப்போதல்லவா படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது!

"எல்லாக் கல்விக்கூடங்களும் அரசுடைமை; தனியார் சார்பிலும், சமயச் சார்பிலும் கல்விக்கூடங்கள் இல்லை. எனவே,

செல்வர்களுக்குச் சிறப்பான கல்வி, ஏழைகளுக்குக் கஞ்சித் தண்ணீர் கல்வி என்ற நிலை இல்லை.''

இங்கே, தேசிய உடமை என்று சொல்லிக்கொண்டு என்ன என்னவோ நடக்கின்றன. தேசிய உடமைப் பொருள் என்பன போன்றவை எல்லாம்—இங்கே கவர்ச்சியான முழக்கங்களாகவும், மக்கள் முன்பு விரிக்கும் திரைகளாகவும் இருக்க, நெ. து. சு. அவர்கள் அங்கே பெயருக்கேற்ப நடைமுறைகளைக் கண்டதனால் வியந்து கூறுகிறார்கள்.

புதிய ஜெர்மனியில் இருக்கும் கல்வி முறையே தனி.

''பொதுக் கல்வியோடு வேலைப் பயிற்சியும் கலந்த கல்வி முறையே எங்கள் கல்வித் திட்டத்தின் சிறப்பு. 'இதுவே தொழில் வளர்ச்சிக்குத் துணை' என்று கூறியதும் அண்ணல் காந்தியை எண்ணினேன். அவரது செயல்வழிக் கல்வித் திட்டத்தை எண்ணினேன். அக்கொள்கைக்கு நவீன உருவம் கொடுக்காமல், அதைச் சமாதியில் வைத்துவிட்ட தீங்கை உணர்ந்தேன். அதை உணராத என் தாய்த்திரு நாட்டின் அவலத்தை நினைத்துக் கண் கலங்கினேன்.''

பயண வரலாற்று நூல் எழுத அவர்கள் எழுதவில்லை, இப்படி! அப்படி எழுத விரும்பியிருந்தால் மேற்போக்காகச் சொல்லியிருப்பார்கள். ஆனால், நாட்டு நலத்தில் அக்கறை கொண்ட ஒரு சமுதாயச் சிற்பியின் வேதனைக் குரலாக இது ஒலித்திருப்பதை நாம் உணரவேண்டும்; உற்றுநோக்கிச் சிந்திக்க வேண்டும்.

இராமபிரான் இந்நிலவுலகத்தில் தோன்றிய பின்னர்தான் இராமாயணம் தோன்றியது. அதுபோல நெ. து. சு. அவர்கள் தோன்றி, தொடக்கப் பள்ளி - உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்கச் செய்து அவற்றில் பெரும் பங்கைப் பொதுமக்களுக்கு அளித்ததன் மூலம்தான் People's Involvement Conference தோன்றியது.

அதிலிருந்துதான் இன்று தொடக்கப்பள்ளி முதல், கல்லூரி வரை ஒவ்வொரு நிலையிலும், பெற்றோர் சங்கம் போன்றவைகள் எல்லாம் நடந்து வருகின்றன. இதற்கு மூல காரணம் நெ. து. சு. அவர்கள் அன்று ஊன்றிய வித்து என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இத் திட்டத்தை அவர்கள் புதிய ஜெர்மனியில் கண்டார்கள்.

'பொதுமக்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நெருக்கமான நல்லுறவுண்டு. ஒவ்வொரு பள்ளிக்கும், 'பெற்ருர் ஆலோசனைக் குழு' உண்டு. அப் பள்ளி மாணவ மாணவியர், பெற்ருேர்கள் அனைவரும் கூடி—ஆலோசனைக் குழுவைத் தேர்ந்தெடுப்பார்கள். அக் குழு இரண்டாண்டிற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும். அதன் தலைவர், பள்ளியின் கல்விக் குழு உறுப்பினராவர். அவர் ஆலோசனையைக் கல்விக் குழுவினர் ஏற்பர்.

நெ. து. சு. அவர்களின் நோக்கமும் அதுதான். அதனுல் தான் மக்களை ஈடுபடுத்தினுர்கள். ஆனுல், ஒழுங்காகச் செயல் பட்டால்தானே? பொறுப்பை உணர்ந்து செயல்படுகிருர்களா? என்று அவர்களை அவர்களே கண்காணித்துக் கொள்ளவேண்டும். இன்னும் தீவிரமான முறையில் தங்கள் செல்வர்களைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பும் பெற்ருேர்கள், நல்ல நட்புறவைக் கல்வியாளர்களோடு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். கல்வியாளர்களும் அவர்கள் உணர்வுக்கு மதிப்பளித்து நெருங்கி வர வேண்டும். இதைத் தவிர, அவர்களுக்கு வேறு எண்ணமே இல்லை.

உலக வல்லரசுகளில் ஒன்ருன சோவியத்துப் பெரு நாட்டிற்கும் சென்றிருந்தார்கள். அங்குள்ள மக்களின் அறிவுத் தாகத்தைக் கண்டு வியந்து கூறுகிருர்கள்.

" தாய் மொழியையும் படி, அறிவு எங்கிருந்தாலும் அதைத் தேடிக் கொண்டுவா என்று சொல்வதோடு நில்லாமல் அவ் வழி வளர்கின்ற சாந்துணையும் கற்கின்ற சோவியத்து மக்களுக்கா, நமக்கா, யாருக்குச் சொந்தம் குறள்? யார் காக்கிருர் குறள் நெறியை?"

திருவள்ளுவருக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாம், அவர் கூறிய குறள்களில் ஒன்றின் படியாவது நிரந்தரமாக நடக்க முடிகிறதா என்ருல், இல்லை. ஆயிரத்தெட்டுக் காரணங்கள் கற்பிக்கின்ருேம். ஆனுல் சோவியத்து மக்கள், குறளுக்குச் சொந்தக்காரர் அல்லர். நம்மிடம் பெற்றவர். இருப்பினும், அவர்கள்தான் குறள் நெறியைக் காக்கிருர்கள் என்பதை, நெ. து. சு. அவர்கள் காண்கின்ருர்கள். தமக்குச் சொந்தமான இத் தமிழ்க் குடும்பத்தின் மீது, பற்று மிக்க அவர்களுக்கு எரிச்சல் வருவதில் வியப்பில்லையே?

ரஷ்யக் காரோட்டி, விஞ்ஞானப் புத்தகம்—அதுவும் தன் உழைப்பிற்கிடையில் படித்துக் கொண்டிருக்கிறன் என்றல், அந்த நாடு முன்னேறமல் பின்னேறவா செய்யும்?

"படி! படி! மேலும் மேலும் படி!"

மாவீரர் லெனினின் இச் சொற்களைச் சோவியத்து ஒன்றியப் பெருமக்கள் தாரக மந்திரமாகக் கொண்டிருக்கிறர்கள் என்பதை நேரில் கண்டார்கள்.

'மாணவர்கள் மாணவர்களாகவே இருக்க வேண்டும்' என்று கவலைகொள்ளும் பெரியார்களில் ஐயா அவர்கள் தலைமை தாங்கும் தகுதி பெற்றவர்கள்.

இவர்களது கல்விச் சிந்தனைகள் படிப்போர் நெஞ்சில் புதிய தெளிவையும் தெம்பையும் விதைப்பன; நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பன.

நெ. து. சு. அவர்களது கல்விச் சிந்தனைகள், அவர்களாக்கிய பனுவல்களில் எல்லாம் பரந்து, படிப்போர் அறிவுக்கு விருந்தாகு மாறு இருக்கின்றன.

'எல்லோருக்கும் தன்னபிக்கை தேவை. மற்றவர்களுக்குத் தன்னம்பிக்கை இல்லாவிட்டால், அவர்கள் வரையில் துன்பம்; குடும்பத்திற்கு நஷ்டம். ஆசிரியர் தன்னம்பிக்கை இழந்து விட்டாலோ, பல நூறு பேர்களுடைய வாழ்க்கைக்குக் கேடு. எப்படி? அரசன் எவ்வழி? குடிகள் அவ்வழி! ஆசிரியர் எவ்வழி? மாணவர் அவ்வழி! ஆசிரியர் தெம்பு—மாணவர் தெம்பு! ஆசிரியர் சோர்வு—மாணவர் சோர்வு! ஆசிரியர் ஏங்கிஞல், மாணவர் ஏங்குவர்; இன்று மாணவர் ஏங்கிஞல், நாளை நாடு ஏங்கும்'

* * *

கல்வியின் தரத்தை உயர்த்துவன பொருத்தமான கட்டடமும், திருத்தமான தளவாடங்களும், கருவிகளும் மட்டுமல்ல; ஆழமான அறிவுபெற்ற ஆசிரியர்களும் ஆகும்.

* * *

காசு போட்டு வாங்கி விற்கும் காரை மாதத்திற்கு ஒருமுறை 'செர்வீஸ்' செய்கிறேம். காசு போட்டு வாங்க முடியாத

மக்களினத்தை உருவாக்கும் நல்ல ஆசிரியர்களுக்கு ஒருமுறை யாவது 'செர்வீஸ்' தேவையில்லையா ?

* * *

பல சொல்லுவானேன்! கல்வியின் தரம் உயர ஆசிரியரை மதியுங்கள்; போற்றுங்கள் ; அல்லற் படுத்தாதீர்கள் ; ஊக்கப் படுத்துங்கள். படிக்கக்கொடுங்கள் ; தொடர்ந்து படிக்கக் கொடுங்கள்; மறுபயிற்சி கொடுங்கள். மலைமேல் பெய்த மழையால் வயல் வளம் பெறுவதுபோல் கல்வியின் தரம் வளரக் காண்போம்!

இக் கருத்துக்கள், ஆசிரியர்களைப் பற்றி நெ. து. சு. அவர்களுக்கு எவ்வளவு உயர்ந்த கருத்துக்கள் இருக்கின்றன, எவ்வளவு அன்பும் பற்றும் இருக்கின்றன என்பதைக் காட்டு கின்றனவன்றோ ?

* * *

கல்விக்குத் தனியார் கல்விக் கூடங்களையே நம்பியிருப்பது, எதிர் வீட்டுக் கதவை நம் வீட்டுக்குக் காவலுக்கு நம்பியிருப்பது போன்றது. அத்தோடு, கல்விமுறை மாற்றம் காலத்தோடு விளையாட்டு. அது வினையாக, தீவினையாக மாருதிருக்கவேண்டு மென்ருல் கல்விச் சோதனையும் தேவை. அதே சமயத்தில் அது குறுகிய அளவிற்குட்பட்ட சோதனையாகவும் இருக்க வேண்டும். கட்டுக்கு உட்பட்ட முன்னேற்றமே கல்வி மாற்றத்திற்கு வழி என்று உங்கள் நெஞ்சும் கூறுகிறதா?

கல்வியாளர்களுக்குப் புலமை மட்டும் போதாது; பயிற்சி மட்டும் போதாது ; திறமை மட்டும் போதாது; மனிதத் தன்மையும் வேண்டும். தோளுக்கு மிஞ்சினுல் தோழன் என்ற உணர்வு வேண்டும். நசுக்காமல்—குத்தி மகிழாமல், ஊக்கி உதவுபவரே—வளர உரமிடுவோரே கல்வியாளர்கள்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்" (குறள். 997)

என்ற குறள் வழிவாழும் இந்தக் குணக்குன்று தன் சிந்தனையை இவ்வாறுதானே கூறமுடியும் ?

கற்க வேண்டுபவை உங்கள் பாடப் புத்தகங்களோடு முடிந்துவிட்டனவாக எண்ணாதீர்கள். கற்க வேண்டியவைகளை அறிமுகப் படுத்துபவைகளே அவைகள்.

கல்விக் கூடத்தின் முதல் வேலை ஆக்குதல். அளக்கும் வேலை அதற்குத் துணையே. வளர்த்தலே அங்கு நடக்க வேண்டிய முதல் முயற்சி. நிறுத்துப் பார்த்தல் அதற்குத் துணை. துணைவேலையை முதன்மையாகக் கொண்டதால் வந்தது தீவினை.

மதிப்பெண்களையே கடவுளாக்கிவிட்ட நாம், பட்டத்தின்மேல் பட்டத்தை அடுக்கும் சொல் விஞ்ஞானிகளையே பெறுகிறோம்.

* * *

குறைகூற, அடக்கியாள அதிகாரிகள் வேண்டாம். ஊக்கத்தைப் பெருக்க, உள்ளத்தை உயர்த்த, நல்லதைத் தூவ, புதியதைக் காண, சிறந்ததைப் பரப்ப—இவ் வேலைகளுக்கே கல்வியாளர்கள் தேவை.

உடன்பிறந்தோரே! மதிநுட்பம் என்பது, பிறவிக் கூறின் ஒருபங்கு—முயற்சியின் விளைவு தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பங்கு என்பது வாக்குக்காக, ஊக்கமூட்டும் அரசியல் வாதியின் ஒலியல்ல; விஞ்ஞான மேதையின் முடிவு. சென்ற நூற்றாண்டில் சோவியத் விஞ்ஞானி 'செசினோவ்' ஆழ்ந்து கண்ட முடிவு.

இத்தகைய ஆக்கபூர்வமான சிந்தனைகளை நாள்தோறும் வழங்கி ஊக்கமூட்டிவரும் தாமரைச் செல்வர் அவர்கள், இளைஞர் கல்விக்கு மட்டும் நற்றொண்டாற்றி வருகிறார் என்று கொள்ளக் கூடாது. பெரியவர்களும் படிக்கலாம்; வயதிற்கும் கல்விக்கும் தொடர்பில்லை; முயற்சிக்கும் கல்விக்குமே தொடர்பு என்பதை ஊரறிய முழங்கி, கோடிக்கணக்கான பணிகள் தம் எதிரே மலை போல் குவிந்து கிடந்தாலும், ஒரு குக்கிராமத்தில் முதியோர் கல்வித் திட்டத்தின் தொடக்க விழாவிற்குச் சென்று, தொடங்கி வைக்கும் பாங்கை இன்றும் கண்கொள்ளா காட்சியாகவன்றோ கண்டு வருகிறோம்.

அந்த அளவுக்கு முதியோர் கல்வியில் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. அதன் வெற்றியிலும் நம்பிக்கை உண்டு. அது குறித்து

ஐயா அவர்களின் கருத்தைப் பார்ப்பது, முக்கனிச் சாறுடன் தேனும் பாலும், சர்க்கரையும் கலந்தினிக்கும் சுவை போன்றது!

*　　　　*　　　　*

படித்தவர்கள் எல்லாம் அறிவாளிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இல்லை; இல்லை. படிக்காதவர்களிலும் அறிவாளிகள் உண்டு.

அவர்களுக்குக் 'கல்வி' என்ற முத்திரைக் குத்தி, வெளிக் கொணர வேண்டும் என்பது அவர்களின் தணியாத ஆர்வம்.

*　　　　*

கல்வி காட்டு முள் அல்ல; தானே வளரும் தாவரமும் அல்ல; அது வளர்க்கப்படும் நுட்பப் பயிர்; முதியோர் கல்வியோ மிக நுட்பமானப் பயிர்.

Chennai-30

*　　　　*

முதலாவது, முதியோர் இலக்கியப் பண்ணையின் நிறைவு விழா 13-12-55 அன்று நடந்தபோது, கண்காட்சியைத் திறந்து வைத்து ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

"முதியோர் கல்வியில் முன்னணியில் நிற்பதாக, ஸ்காண்டிநேவியன் நாடுகளைத்தான் கூறுவார்கள். இவற்றில்தான் 'மக்கள் பள்ளி' (Folk High School) என்று சொல்லுகிற பெரியோர்கள் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளை யார் ஆரம்பித்தார்கள், அரசியலார் எவ்வளவு செலவு செய்தார்கள் என்பவைகளைப் பற்றிய அறிக்கைகளைக் கொண்டு பார்த்தால், ஒன்று தோன்றும்.

ஏதோ சில வெறியர்—முதியோர் கல்வி பரவவேண்டும் என்ற உணர்ச்சியுடையவர்கள்—தம்மோடு பிறந்த எவரும் படிக்காமல் இருக்கக்கூடாது என்ற உணர்ச்சியுடையவர்கள்—தாங்கள் சாவதற்கு முன்பே எல்லோரும் படித்துவிடவேண்டும் என்று எண்ணியவர்கள் — இவர்களது முயற்சியால்தான் அவைகள் உருவாயின."

மேற்கூறிய செய்திகளில் வரிக்குவரி உண்மையும் நல்லுணர்வும் வெளிப்படுகிறதன்றோ?

"கல்வியின் நோக்கம்—நல்ல மக்களை—சான்றோர்களை—நல்ல தொண்டர்களை ஆக்குவதே யொழிய, வெறும் அறிவாளிகளை மட்டும் உருவாக்குவதன்று. திறமைகளை மட்டும் உருவாக்குவதன்று. படித்தவன் யார்? கற்றவன் யார்? மெய்யான அறிவு உடையவன் யார்? என்றால், எவன் பிறருக்காகப் பாடுபடுகிறானோ, அவன்தான் மெய்யாகப் படித்தவன்."

"படித்த இளைஞன் ஒருவன், அல்லது ஒரு கற்ற கன்னி, தான் கற்றதுடன் நிற்காது, தன் அண்ணன் தம்பி—அக்காள் தங்கை கற்றதோடு மட்டும் நின்றுவிடாமல், தங்கள் சிற்றப்பா, பெரியப்பா, பெரியம்மா, தேவையானால் பாட்டன், பாட்டி போன்றோரும் கல்வி பெற, அவர்களைப் போன்ற அனைவரும் படிப்பறிவு பெற, அந்த இளைஞர் ஊதியம் கருதாது, ஓய்வு கருதாது, அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க முன்வரவேண்டும்."

"பிறக்கும்போது எழுத்தறிவு இல்லாத நிலையில் பிறந்தவர்கள் இறக்கும்போதாவது படித்தோம்! இந்த நிறைவோடு போய்ச் சேரட்டும் என்ற உன்னத நிலைக்கு உட்படுத்துவதுதான் முதியோர் கல்வித் திட்டம்."

"கோடை விடுமுறையில் முதியோர்களுக்குக் கற்றுத் தருவது பெரும்பணி; நற்பணி. இதன் தொடக்கம் அடக்கமாக இருக்கட்டும். விளம்பரத்துக்காக எவரையும் தேடியலைய வேண்டாம். பேராலமரம் இரைச்சலிட்டுக்கொண்டு முளைப்பதில்லையே" என்று முதியோர் கல்விக்காக அல்லும் பகலும் அயராது அரும் பணியாற்றி வருகிறார்கள்; இன்றும்.

இப்படி எல்லாம் உழைத்துவரும் நெ. து. சு. அவர்கள் கல்வித் துறையின் வலதுகரமாக விளங்குகின்ற—அல்லது கல்வித்துறையின் இணைகோடு என்று சொல்லத்தக்க துறையான—நூலகத் துறையையும் நன்கு வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மை!

கல்வித்துறை இயக்குநராகப் பணியாற்றியதோடு, நூலகத் துறைக்கு இயக்குநராகிப் பணிபுரிந்த பாங்கை என்னென்பது!

நம் அருந்தமிழ்நாட்டில் நூலக வளர்ச்சி ஆரவாரம் இன்றி வேர்கொள்ளச் செய்த பெருமையும் புகழும் இத் தாமரைச் செல்வர் அவர்களையே சாரும்! வெறும் புகழ்ச்சி இல்லை, உண்மை!

ஐயா அவர்கள், நூலகக் கல்விப் பற்றிக் கூறுகிறார்கள் :

" வறுமை பொருளுக்கு மட்டு மன்று ;

இரத்தல் பொருளை மட்டு மன்று ;

அறிவிற்கும் வறுமை உண்டு ;

அதையும் இரத்தல் உண்டு."

எனவே, நூலகம் சென்று தேடிப் படி என்கிறார்கள். ஐயா அவர்கள் நூலகக் கல்வியையும், கற்பிக்கும் கல்வியையும் இணைத்து ஒருமணியான கருத்தை அருளியிருக்கிறார்கள். அதை ஈண்டுக் குறிப்பிடுதல், பட்டுக் கயிற்றில் முத்துக் கோத்தது போன்று பெருமை கொண்டதாகும்.

" அறிவுத் தேரின் ஒரு பக்கத்துச் சக்கரம் கல்விக்கூடம். மறு பக்கத்துச் சக்கரம் நூல்நிலையம். இரண்டும் ஒன்றாகப் பொருந்துவதாக. மாந்தர் எல்லாம் அறிவுத்தேர் ஏறி, ஒழுக்க நெறியுந்த, அன்பெனும் நெடுஞ்சாலை சென்று, அருட்புரியை அடைந்து, நல்வாழ்வு வாழ்வார்களாக."

நூலகத்தைப் பற்றிப் பாமரர்களுக்கும் இதைவிடச் சுருக்கமாக—தெளிவாக, அதே சமயத்தில் உள்ளம் கவரும் வகையில் இன்று விளங்க வைப்போர் யாருளர் !

பாடப் புத்தகங்களைப் படித்துவிட்டு, பட்டமும் பெற்று, படிப்பை முடித்துவிட்டோம் என்று இறுமாந்து திரியும் இளைஞர் உலகிற்கு நூல்நிலையம் சென்றதும், அறிவு நூல்களை எடுத்துப் பயிலாமல், கண்ணையும் கருத்தையும் கெடுக்கும் அற்ப ஆயுள் கொண்ட கிழமை, வார, மாத இதழ்களைப் புரட்டியதோடு 'நூலகத்தைப் பயன்படுத்திவிட்டோம்' என்று வெளிவரும் படிப்பாளிகளுக்கு நெ. து. சு. அவர்கள் கூறுகின்றார்கள் :

" நம்முடைய நூல் நிலையங்களில் உள்ள நூல்களில் பல கற்புள்ள நூல்களாகவே இருக்கின்றன. அவற்றால், யாருக்குப் பயன்? கற்பில்லாத நூல்களை—கற்பிழந்த நூல்களைக் காணவே ஆசைப்படுகிறேன்."-என்ற வேதனையை நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார்கள். அதாவது, பிறர் கைதொட்டும் அறியாத நூல்களைக் 'கற்புள்ள நூல்கள்' என்றும், எடுத்துப் படிக்கப்பெற்ற நூல்களைக் கற்பிழந்த நூல்கள் என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

நெ. து சு. அவர்கள் நூல்களில் கற்பில்லாதவற்றை விரும்பு கின்றார் என்றால், அவற்றை அனைவரும் எடுத்துப் பயின்று அறிவு பெறவேண்டும் என்பதே அவர்களின் உள்ளக்கிடக்கை—வேட்கை ஆகும் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

அவர்களின் மாபெரும் பணிகளில் ஒன்றாக, அவர்களது பெருமுயற்சியாலே சென்னை அண்ணாசாலையில் மாவட்ட நூலகத் திற்கு எழிலான மாளிகைக் கட்டடம் ஒன்று உருவானதைக் குறிப் பிட வேண்டும்.

ஐயா அவர்களின் வரலாற்றுப் புகழ் வாய்ந்த சேவைகளுக் கெல்லாம் செலுத்தும் ஒரு சிறு காணிக்கை ஆக, 1972ஆம் ஆண்டில் நல்லவர்கள்—நன்றி மறவாதவர்கள் எல்லாம் சேர்ந்து, தமிழகத் தலைநகராம் சிங்காரச் சென்னைப் பெருநகரில் உள்ள கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்தார்கள்.

அந்த மணிவிழாவில், நன்றி தெரிவிக்கும் உரையில் குறிப் பிட்ட கருத்துக்கள் பல. நெ. து. சு. அவர்கள் குறிப்பிட்ட அவற்றில் ஒன்று—நம் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அஃது, இதோ :

"மாணவ, மாணவிகளை எல்லாம், தங்கள் தங்கள் விவகாரங் களுக்கு—ஊர் விவகாரங்களுக்கு, நாட்டு விவகாரங்களுக்கு இழுக்கிற மரபு குபேர நாட்டிற்குச் சரியாக இருக்கலாம். பரம் பரை பரம்பரையாகக் கோடீஸ்வரராக இருக்கிறவர் வேண்டு மானால் ரேஸ் கோர்சுக்குப் போய் பந்தயம் ஆடிப் பார்க்கலாம். நாம் தலையெடுக்க நினைக்கிறவர்கள். இப்போதுதான் தலைதூக்கி வருகிறவர்கள். ரேஸ் கோர்சுக்குப் போனால் என்ன ஆகுமென்று நமக்கு தெரியும். ஆகவே, நாம் தலைதூக்குகிற ஜாதி; நாம் நம்முடைய மாணவர்களை எல்லாம் விதை நெல்லாகக் காப் பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கெல்லாம் துணை நிற்க வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்."

தாழ்ந்து கிடக்கும் சமுதாயத்தை மயக்கமுற்றிருக்கும் ஒரு வரை நீர்கொடுத்து மயக்கம் நீக்கி-கொஞ்சம் கொஞ்சமாகச் சுய உணர்வுக்குத் திருப்பும் முயற்சியைப் போல-கொஞ்சம் கொஞ்ச மாகத்தான் கல்வி உழைப்பின் மூலம் உயிரூட்டிக்கொண் டிருக்கிறார், கல்வி நெறிக் காவலர் அவர்கள். இவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சமுதாயம் நடந்து கொண்டால், தனி மனிதனுக்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது.



துணைவேந்தர் அலுவல் பார்க்கும் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்

மாணவன் மாணவனுகவே இருக்க வேண்டும். ஆம்! அது தான் நல்லவர்களின் ஆசை!

நெ. து. சு. அவர்களின் ஆட்சிக் காலத்தில் (1969 ஜூலை முதல் 1975 ஜூலை வரை) எழுந்த கல்லூரிகளும் மலர்ந்த பாடத்திட்டங் களையும் அறிய வியப்புக் கலந்த உவகையன்றோ எழுகிறது!

நெ. து. சு. அவர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆனதும் ஆற்றிய முதற்பணி, இருபது ஆண்டுகளுக்கு மேலாக மாற்றப் படாமல் தேங்கிக்கிடந்த சென்னைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களைத் திருத்தியமைத்ததேயாகும். அதற்காக நெ. து. சு. அவர்கள் பல ஊர்களுக்குச் சென்று கல்லூரி ஆசிரியர்களின் கூட்டங்களைக் கூட்டிக் கலந்து பேசி அவர்களின் ஆலோசனைப்படி யும் ஆதரவுடனும் மாற்றியமைத்தார்கள்.

உள்ளவற்றை உயர்த்துவதுடன் நிற்காமல் காலத்திற்கேற்ற புதிய பாடத்திட்டங்களையும் கொண்டுவந்து நடைமுறைப் படுத்தினுர்கள்.

அவர்கள் புதியனவாகக் கொண்டுவந்த பாடத்திட்டங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை; அவற்றில் கிட்டத்தட்ட இருபது மருத்துவக் கல்வியின் உயர்நிலைப் பாடங்கள் ஆகும்; பொறியியல் கல்வியின் உயர்நிலைப் படிப்புக்கோ பதினைந் திற்கும் மேற்பட்டவை.

கால்நடை மருத்துவக் கல்வியில் கூட மூன்று புதிய எம். எஸ்ஸி. பாடங்களைக் கொண்டுவந்து நடைமுறைப் படுத்திய பின்பே, கால்நடை மருத்துவக் கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினிடம் ஒப்படைத்தார்கள்.

பி. ஏ. (கூட்டுறவு), பி. ஏ. (மக்கள் தொடர்பு), பி. ஏ. (கம் பெனிச் செயலாளர்), பி. ஏ. (சுற்றுலாத் துறை), பி. ஏ. (நூல் வெளியீட்டுத் துறை), பேச்சுலர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் ஆகிய வேலைவாய்ப்பு மிக்க புதிய பாடத்திட்டங்களைக் கொண்டு வந்த பெரிய பெருமையும் ஐயா அவர்களுக்கே உண்டு.

அவர்கள் பதவி ஏற்றபோது இரண்டு பாடத்திட்டங்களுக்கு மட்டுமே செமஸ்டர் முறை இருந்தது. ஐயா அவர்கள் இருபத்து மூன்று பாடத்திட்டங்களில் இம் முறையை நடைமுறைப் படுத்தினுர்கள்.

பட்டமேற்படிப்பு அனைத்திலும் செமஸ்டர் முறை வேண்டும் என்ற தம்முடைய கருத்திற்குப் பல்கலைக் கழகப் பேரவையினரிடமிருந்து ஒப்புதலும் பெற்றார்கள்.

ஐயா அவர்கள் பொறுப்பேற்ற ஆறுமாத காலத்திற்குள் 'வித்வான்' என்பதைப் 'புலவர்' என உயர்த்தினார்கள். அடுத்து தமிழ்க் கல்லூரித் தேர்வை 'பி. லிட்டரச்சர் (B. Literature)—அதாவது 'இளம் இலக்கியம்' என்ற பட்ட நிலைக்கு உயர்த்தினார்கள்.

தனித்தமிழ் தவிர, வேறு எந்த ஒரு மொழியையும் படிக்கும் தேவை இல்லாமலேயே த்னித்தமிழ்ப் படிப்பாளர்களை பி. லிட். (B. Litt.,) என்ற பட்டநிலைக்கு உயர்த்தினார்கள்.

முன்னரே புலவர் சான்றிதழ்ப் பெற்றுப் பணியாற்றும் ஆசிரியர்கள் இரு துணைப்பாடங்களில் தேர்வு எழுதி, பி.லிட். பட்டம் பெறலாம் என்ற ஆணையிட்டது ஆசிரியர் குலத்திற்கு நெ. து. சு. அவர்கள் ஆற்றிய அரும்பெரும் பணியாகும்.

தமிழுக்கென்று தனிப் பட்டம் கொடுக்கும் தகைமையை அவர்களைத் தவிர, வேறு யாரால் ஆற்றமுடியும்?

நெ. து. சு. அவர்கள் பொறுப்பேற்றுப் பணியாற்றிய ஆறு ஆண்டுக்காலத்தில் முப்பத்து இரண்டு புதிய கல்லூரிகள் செயல்படத் தொடங்கின. ஆறு மாலைக் கல்லூரிகள் மட்டும் இயங்கிக் கொண்டிருந்த நிலைமாறி, நாற்பத்தைந்து மாலைக் கல்லூரிகள் இயங்க ஆரம்பித்தன. இதனால் பயனடையும் பணியாளர்கள் பல்லாயிரவர் எனின் மிகையா ?

மூன்று கல்லூரிகளில் மட்டும் எம். காம். பட்டப்படிப்பு இருந்ததை, பதினைந்து கல்லூரிகளுக்கு உயர்த்திக் காட்டினார்கள்.

பி. காம். பட்டப்படிப்பு பத்துக் கல்லூரிகளில் மட்டும் இருந்தது. ஆனால் ஐயா அவர்கள் ஐம்பத்து இரண்டு கல்லூரிகளில் இப் பட்டப்படிப்பு இடம்பெறச் செய்தார்கள்.

இவை மட்டுமன்று! அவர்கள் பொறுப்பேற்றபோது, ஒரு மகளிர் கல்லூரியில்கூட பி. காம். பட்டப்படிப்பு இடம் பெறவில்லை. இப்போது, ஆறு மகளிர் கல்லூரிகளில் பி. காம். பட்டப் படிப்பு நடைபெறுகிறது.

அம்மட்டோ? ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான விதி முறைகளைத் தளர்த்தி பல கல்லூரிகளில்—அதுவும் குறிப்பாக நாட்டுப்புறக் கல்லூரிகளில்கூட ஆராய்ச்சிக்கு ஒப்புதல் கொடுத்த மிகப் பெரும் சிறப்பு ஐயா அவர்களுக்கே உண்டு.

நெ. து சு. ஆவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் இரண்டு இலட்சம் பேர்களே உயர்கல்வித் தேர்வெழுதினர்கள். அவர்கள் ஓய்வு பெறும் போது நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்வெழுதினர்கள் என்றால், இந்த உயர்வுக்கு அவர்களைத் தவிர வேறு யார் காரணமாக இருக்க இயலும்!

இதனல், எந்த அளவுக்கு அவர்கள் உயர்கல்வியை உயர்த்திக் காட்டினர்கள் என்பதும் தெளிவாகும்.

ஆறு ஆண்டு காலத்தில், அளவில் மட்டும் அல்லாது தரத்திலும் இத்தனை துறைகளில் இவ்வளவு பெரும் சாதனைகளை யாரும், எந்த இந்தியப் பல்கலைக் கழகத்திலும் சாதிக்கவில்லை; இதை உலகக் கல்வி அறிஞர்கள் பாராட்டியிருக்கிறார்கள்; பாராட்டுகிறார்கள்!

மேட்டுக்குடியினருக்கும், செல்வச் சீமான்களுக்குமே உரிய பட்டப்படிப்பை — பட்டமேற்படிப்பை — அதற்குமேற்பட்ட ஆராய்ச்சிக் கல்வியைக் குடிசைவாசியும்—கூழ் குடிப்போனும் பெறுமாறு, உயர்கல்வியைச் சாதாரண மக்களின் "அடிப்படை உரிமை"யாக்கிய அந்தக் கல்வி வள்ளல், செனய் நகர்—கிழக்குப் பூங்காச் சாலே, தொண்ணூறும் எண் கொண்ட இல்லத்தில் மட்டும் வீற்றிருக்கவில்லை; தமிழக மக்கள் ஒவ்வொருவர் இதய வீட்டிலும் வீற்றிருக்கிறார்!

நெ. து. சு. அவர்களின் எழுச்சி முழக்கத்தை, இதோ, இன்னெரு முறை கேட்போமா?

> எல்லோரும் கற்போம்; நன்றாகக் கற்போம்! ஒன்றாகக் கற்போம். கற்றபின்,
>
> எல்லோரும் உழைப்போம்; நன்றாக உழைப்போம்; ஒன்றாக உழைப்போம்; அத்தகைய உழைப்பின் பயனாக, எல்லோரும் வாழ்வோம்; நன்றாக வாழ்வோம்; ஒன்றாக வாழ்வோம்!



நல்லாசிரியர் கா. நமச்சிவாயர்



வனமலர் சங்கத்தில் திரு. நெ. து. சு. அவர்கள்
(தரையில் வலப்பக்கம் முதலாவதாக உட்கார்ந்திருக்கிறார்கள்)

# கல்விநெறிக் காவலரும்
# கன்னித் தமிழும்

# கல்விநெறிக் காவலரும் கன்னித்தமிழும்

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்—இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்று 'தமிழ்விடு தூது' நூலின் ஆசிரியர், தமிழ்ப்பற்றின் எல்லையாகக் கணக்கிடமுடியாத காலத்திற்கு முன்பே வாழ்ந்து வந்திருக்கிறார்.

தமிழ் வாழத் தான் வாழ்ந்து—தான் வாழ்ந்து தமிழை வாழச் செய்த எண்ணற்ற புலவர்களும், புரவலர்களும் தோன்றிய நன்னாடு நம் தாய்த்திரு நாடாம் தமிழ்நாடு!

என்றும் வாராத விருந்தினர் ஒருநாள் வந்துவிட்டால், பெற்றோரும், குழந்தைகளும் அவரை அளவில்லாமல் உபசரித்து—அவரையே எந்நேரமும் உபசரித்துக் கொண்டிருப்பதைப்போல, தமிழ் உணர்வின் சிகரமாய் நிற்கும் ஓர் இயக்கத்தை உடைய கால கட்டத்தில் நாம் வாழ்கின்றோம்!

அப்படிப்பட்ட இந்தக் கால கட்டத்தில்தான், தன் எண்ணம்-சொல்-செயல் ஆகியவற்றின் மூலம் தமிழ்மொழித் தொண்டை ஒல்லும் வகையான் ஓவாது ஆற்றிவருபவர் நம் துணைவேந்தர் பெருந்தகை அவர்கள். அவர்களது தாய்மொழிப்பற்றும், தமிழ்த் தொண்டும் ஆரவாரத்தில் வெளிப்படுபவை அல்ல; அடக்கத்தில் வெளிப்படுபவை.

இப்படிப்பட்ட நெ. து. சு. அவர்களின் தமிழன்பு அளவிடற்கரியது. 1954ஆம் ஆண்டு கல்வி இயக்குநர் என்ற குறிப்பிடத்தக்க பெரும் பதவியில் அமர்ந்த முதல் தமிழர்—ஒப்பற்ற தமிழர் நெ. து. சு. அவர்கள்தான்! அதுவரையில் புரியாத ஆங்கிலத்தில், தெரியாமல் பேசி, நிருவாகம் நடத்திவந்த அதிகாரிகளுக்கு,

ஒரு விதிவிலக்காகத் தமிழ்மொழியிலே பேசி, தமிழுக்குரிய இடத்தைப் பிடித்துக்கொடுத்தார்கள்.

அத்தகு தமிழ்ப்பெருந்தகையின் தமிழ்த்தொண்டினைச் சற்றுத் தனித்துக் காண்பது நமக்கெல்லாம் கனிச் சுவையை ரசித்து உண்பதைப் போன்றது.

காஞ்சிபுரம் ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அங்குத் தமிழாசிரியராக இருந்த திருவாளர் நரசிம்மாச்சாரியாரால் 'தமிழ்ப்பற்று' விதை ஊன்றப் பெற்றூர்கள். இப் பற்றிற்கு உரமும் நீருமாகப் பயன்பட்டது திரு. டி. என். சேசாசலம் அய்யர் அவர்கள் நடத்திவந்த 'கலா நிலையம்' என்ற இதழ் என்ருல் மிகையில்லை. பின்னர், திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர் போன்றவர்களும் அப் பற்றிற்கு உரம் இட்டனர்.

பிறகு உயர் கல்விக்காகச் சென்னை மாநிலக் கல்லூரியில் இணைந்தபோது, அங்கே தமிழ்த்தொண்டாற்றி வந்தவர்—மற்ற பேராசிரியர்களுக்கு அளிக்கும் உரிமையையும், உயர்வையும் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் தரவேண்டும் என்று அல்லும் பகலும் போராடி—மற்றவர்களைவிட எந்தவிதத்திலும் நாங்கள் குறைந்தவர்களல்ல என்பதை நிலைநாட்டிய தமிழ்ப்பெரும் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் ஆவார்கள். அவரின் நல்லுரைகள்தான் நெ. து. சு. அவர்களின் தமிழ்ப்பற்றுக்குப் பெருங் காரணம்! அதைப் பசுமையாய்—இன்றும் நெக்குருகச் சொல்லிக் கொள்வதிலே, ஒரு தனி இன்பம் அடைகிருர்கள் இத் தமிழ்த் துணைவேந்தர் அவர்கள்!

"துண்டுதுண்டாகப் படிக்காதே! எதையும் முழுமையாகப் படி! சிந்தித்து முடிவுசெய்து நட" என்று அன்று பேராசிரியர் கா. நமசிவாயர் கூறிய அறிவுரையைத் தமது நெஞ்சில் பசுமரத் தாணிபோல் பதித்து இன்றளவும் நடந்து வருகிருர்கள். இது ஒன்றுதான், தன் ஆசானுக்கு ஒரு மாணவன் செய்யும் முழுமையான பெருந்தொண்டு! நெ. து. சு. அவர்கள் மாநிலக் கல்லூரி மாணவராக—விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்தார்கள். அப்போது உடன் உறைந்தவர்கள் திருவாளர்கள் ஓ. வி. அளகேசன், கே. எஸ். பழனிசாமி, ம. ப. பெரியசாமித் தூரன் போன்ற பெருந்தகையாளர்கள். மத்திய அரசின் அமைச்சராக வீற்றிருக்கும் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களும் அப்போது உடனுறை கல்லூரி மாணவர். இப்போது ஈரோட்டில்

வசித்துவரும் டாக்டர் ல. கி. முத்துசாமி அவர்கள் மருத்துவக் கல்லூரி மாணவர்.

இவர்களும், இன்னும் நம்நாட்டு விடுதலையிலும் தாய்மொழி வளர்ச்சியிலும் பற்றுக்கொண்ட மாணவர் பலரும் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்தார்கள். அதுதான் 'வனமலர்ச் சங்கம்' அத்துடன் நின்றார்களா—இல்லை. அச் சங்கத்தின் வாயிலாக 'பித்தன்' என்ற ஒரு திங்கள் இதழையும் நடத்தினார்கள்.

இதழின் பெயர் புதுமையாக இருக்கின்றதா? ஆம். நாட்டின் மீதும், மொழியின்மீதும் பித்துக்கொண்ட அன்றைய மாண வர்கள் பின் எப்படித்தான் பெயர் வைப்பார்கள்? இன்றைய மாணவர்களைப்போல—கவர்ச்சிக் கானல் நீரைத் தேடி ஓடிய வர்கள் அல்லவே!

பித்தன் இதழுக்கு ஆசிரியர் பொறுப்பேற்ற முதல்வர், மருத்துவக் கல்லூரி மாணவர் திரு. ல. கி. முத்துசாமி.

தமிழகத்தில் பல கல்லூரிகளிலும் வனமலர்ச்சங்க உறுப் பினர் இருந்தனர். அந்தச் சங்க உறுப்பினர் பலருக்கு, நாட்டு விடுதலையே அன்று பெரிதாகத் தோன்றியது. எனவே, சிறை செல்லவும் தயாராக நின்றனர். ஆனால், 'வேறு சிலருக்கு, நாட்டு விடுதலையில் மாளாத விருப்பம் உண்டென்றாலும், தமிழ்மொழி வளர்ச்சியே அதைவிடப் பெரிதாகத் தோன்றியது. அந்தச் சிறு பான்மைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்க தங்கங்கள், நம் நெ. து சு. அவர்களும், திரு. பெ. தூரன் அவர் களும் ஆவர்.

அன்றைய சூழ்நிலையில் யாராவது மாணவன் நெ. து. சுந்தரவடிவேலுவைப் பார்த்து, 'நீ காந்தியடிகளின் துணையை ஏற்று விடுதலைக்காகச் சிறை செல்லத் தயாரா? அல்லது தமிழ் மொழி வளர்ச்சிக்கு உன்னால் இயன்ற பணிகளைச் செய்கின்றாயா? என்று கேட்டால், "தாய்மொழியாம் தமிழ்மொழி வளர்ச்சி யைத்தான் முதலில் தேர்ந்தெடுப்பேன்" என்ற உள்ள உறுதி யோடு இருந்த அந்த மாணவர்தான் பின்னாளைய துணைவேந்தர் பெருந்தகை அவர்கள்.

நெ. து. சு. அவர்கள், வனமலர்ச் சங்கத்தை நினைவுகூர்ந்து குறிப்பிடுவதைக் கேட்போம்:

"வனமலர்ச் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு உறுப்பினரகா நான் இருந்தபொழுது நான் ஒன்றுமே பேசாமல், எழுதாமல் இருக்கிறேன் என்று எண்ணி, என்னைச் சங்கச் செயலாளராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். இந்தக் குறும்பு, டாக்டர் முத்துசாமி அவர்கள் செய்தது."

"நெருக்கடி காரணமாகச் செயலாளர் என்ற முறையில் நான் பேசுவேன் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர் மருத்துவக் கல்லூரியில் கடைசி ஆண்டு படித்துக்கொண்டிருந் தார். அவர் வீட்டு மாடியில்தான் கூட்டம் நடக்கும். முதல் கூட்டம் முடிந்தது. பேச்செல்லாம் முடிந்து நன்றி சொல்லும் கட்டம் வந்தது. நான் நன்றி சொல்லவேண்டும். ஒரே வாக்கியம் எழுதி வைத்துக்கொண்டு அதைப் படித்துவிட்டேன். பேச் சென்றால் அவ்வளவு கூச்சம், எனக்கு அந்த நாளில்!"*

இன்று, இருமொழிப் புலமையின் உருவாய்—பேச்சாளராய்—நாட்டுமக்களுக்கு நற்கருத்துக்களை முழங்கிக் கொண்டிருக்கும் இவர்கள் அன்று கூச்சமான பேர்வழி! நம்ப முடியவில்லையே, நம்மால்! இருப்பினும் உண்மையே!

பேரறிஞர் அண்ணா அவர்களும், இவ்வாறுதான் கூச்சப் பேர்வழியாக இருந்தார். அண்ணல் காந்தியடிகளும் தொடக்க காலத்தில் இந்நிலைக்கு விதிவிலக்கில்லை என வரலாறு கூறுகிறது. நாம் உவகையும் இறும்பூதும் எய்துகிறோம்.

இவ்வளவும் ஏன்? நெ. து. சு. அவர்களின் தமிழ் மொழிப் பற்றைக் கோடிட்டுக் காட்டத்தான். வனமலர்ச் சங்கத்தின் முக்கிய நோக்கமாம் தாய்மொழி வளர்ச்சிப் பணியோடு இன்னும் இரு நோக்கங்களாம், தாய் நாட்டுக்குப் பணி ஆற்றுதல், கலப்பு மணம் போன்ற சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுதல் ஆகியவற்றிலும் தன் கடமையை மறக்கவில்லை ஐயா அவர்கள்; அவற்றிலும் வெற்றியே கண்டார்கள்!

இப்படி எல்லாம் புடம் போட்ட தங்கத் திருமலரை—தாமரைச் செல்வரை "வனமலர் தந்த ஒரு மணமலர்" என்று

---

* திரு. நெ. து. சு. வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள்-Padmasri N. D. Sundaravadivelu 61st Birthday Commemoration Volume—P. S. G. Educational Institutions

போற்றி மகிழ்கிறார், கலைக்களஞ்சிய ஆசிரியர் திரு. பெ. தூரன் அவர்கள்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் டாக்டர். பி. வரதராஜலு நாயுடு அவர்கள் நடத்தி வந்த 'தமிழ்நாடு' என்ற நாளிதழின் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்றமையை இங்கும் குறிப்பிட வேண்டும்.

இவ்விதழில் பணியாற்றியபோது ஆரிய சமாஜத்தின் சார்பில் தயானந்தர் விழா ஒன்று நடந்தது. அவ்விழாவில் டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, டாக்டர் பி. சுப்பராயன் ஆகியோர் உரையாற்றினர். பேச்சை ரசிக்கச் சென்ற இளைஞர் சுந்தரவடிவேலு, செய்தியாளர் அங்கு வராத காரணத்தினால், தானே குறிப்பெடுத்துத் தமிழில் எழுதி, மறுநாள் இதழில் வருமாறு செய்தார்.

"ஆங்கிலத்தில் பேசப்பட்ட உணர்வுகளும் கருத்துக்களும் அப்படியே, சுவை கெடாமல் தமிழில் வெளியிடப் பெற்றிருக்கிறது" என்று அந்த இரு டாக்டர்களும் பாராட்டியதை நினைந்து நினைந்து இன்றும் நெ. து. சு. அவர்கள் மகிழ்கிறார்கள்.

இவ்வாறு, இளமையில் நெ. து. சு. அவர்களிடம் முளைத்து—வளர்ந்த தமிழ்ப் பற்று, படிப்படியாகச் செயலிலும் வளர்ந்து வந்தது. ஆலமரமாகப் பெருத்துக் கிளைத்து இன்று எண்ணற்ற தமிழ்க்கனிகள் பழுத்துக் குலுங்கும் 'பழுமரமாக' வீற்றிருக்கின்றார்கள்.

இவற்றிற்கிடையில் நெ. து. சு. அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் காட்டிய தமிழ் உணர்வைப் போற்றாதார் இல்லை!

"தமிழ்நாட்டுக் கல்வித்துறை இயக்குநராகப் பணி ஆற்றிய காலத்தில் அவர் காட்டிய மொழிப் பற்றும், தாய்மொழியாம் தமிழ்மொழி, கல்வித்துறையில் விரிவாக இடம் பெற அவர் ஆற்றிய பணிகளும் பல்கலைக் கழகத்திலும் தமிழ் மணம் பரப்பிடும் சீரிய பணிக்கு அன்றை உயர்த்தியுள்ளன."*

மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த மதிப்பீடு ஒரு மாற்றுக் குறையாத வாய்மை அன்றோ?

---

* மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி—தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர், கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.

"Thiru. Sundaravadivelu has made a mark in the educational field of Tamil Nadu. He has contributed to the development of Tamil Language and culture, and I am sure, that he will continue to do for many years to come."*

*மத்திய அமைச்சராக இருந்து—மறைந்த சிறப்புக்குரிய மோகன் குமாரமங்கலம் அவர்களின் கணிப்புரை என்றுதான் வீணாகியது?*

"Thiru. Sundaravadivelu is himself a great scholar in Tamil and as is well known, he has written a number of books which have enriched the Tamil Literature."*

*இவ்வாறு ஓர் ஆராய்ச்சி உள்ளம் கூறி மகிழ்கிறது.*

*இயல்பாக ஒருவருக்கு வரும் தமிழ் நடையை—அன்ன நடை—அரிமா நடை என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவற்றில், அரிமா நடையின் சொந்தக்காரர்தான் நம் நெ. து. சு. அவர்கள்!*

*அன்ன நடையைப் பின் பற்றி எழுதுகிறவர்கள், வெறுமனே படிக்கும்போது மட்டும் இதம் அளிக்குமாறு எழுதிச் செல்பவர்கள். அதுவும் ஒரு வகையான தமிழ்த் தொண்டு.*

*ஆனால், நெ. து. சு. அவர்களின் நோக்கம், தமிழ்மொழியும் வளர வேண்டும்; அதே சமயத்தில் செயல் முறைகளும் வளர வேண்டும். அதனால், சொல்லவேண்டிய கருத்துக்களை நேரடியாக—கூர்மையாக, அது அலங்காரம் இல்லாமல் இருந்தாலும் சரி—படிப்போர்—கேட்போர் நெஞ்சில் ஆழப் பதிய வேண்டும். 'சொல்லுக சொல்லினை, சொல்லொடு பொருளும் பயனும் சேர்த்து' என்பதுதான் இக் கல்வியாளரின் நடைநோக்கம் எனின் தவறாகாது.*

*அதுதானே ஆக்க பூர்வமான மொழித் தொண்டு? அதைத் தான் நெ. து. சு. அவர்கள் செய்து வருகிறார்கள்.*

---

* Hon'ble S. Mohan Kumaramangalam, Minister of steel & Mines—*தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா மலர்—கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்.*

* G. S. Laddha—Padmasri. N. D. Sundaravadivelu-61st Birthday commemoration volume—P. S. G. Educational Institutions.

நெ. து. சு. அவர்கள் ஒரு தேர்ந்த எழுத்தாளர் என்பதற்கு, இவர்கள் நூற்கள் வழங்கிய கருத்து மணிகளே சான்று!

'எதிர்கால உலகம் தொண்டை எதிர்பார்க்கும் உலகம். அத்தொண்டு உலகம் உங்களையும் என்னையும் அழைக்கிறது. சுரண்ட அழைக்கவில்லை; சுருட்ட அழைக்கவில்லை. தலைகளை உருட்ட அழைக்கவில்லை; வலைகளை வீச அழைக்கவில்லை; நல்லறிவைக்கொடுக்க, நல்லுணர்ச்சியூட்ட — நற்றொண்டைச் செய்ய நானிலம் அழைக்கிறது. சோம்பாதே! சந்தை இரைச்சலில் மயங்காதே! குறிக்கோளோடு நெறியோடு வாரீர்!'

ஆகா! வளரும் இளைய தலை முறையினருக்கு இவ்வளவு இரத்தினச் சுருக்கமான முறையில் எடுத்துக்கூறும் எழுத்துப் பணியை என்னென்று போற்றுவது! அம்மட்டோ? எழுத்தில் தோய்ந்து எழுந்த அவரது சிந்தனைச் சிதறலைப் பாருங்கள்:

"பற்றியிருந்தால் இலை; விட்டுப் போனால் சருகு; ஊன்றி வளர்ந்தால் ஆற்றல்; அதே இயல்பு தாவிச் சென்றால் தேய்தல்."

ஆற்றலுள்ள இவர்களது அரிமா நடைக்குச் சில எடுத்துக் காட்டுக்களையும் கண்டு மகிழ்வோம்.

"கை தட்டுகிறீர்கள், தட்ட மட்டுமா கை? வேலை செய்யவும் கை; செடி நடவும் கை; மரம் வளர்க்கவும் கை; தூலம் இழைக்கவும் கை; வீடு கட்டவும் கை; பாவு ஓட்டவும் கை; துணி நெய்யவும் கை; ஏர் ஓட்டவும் கை; போர் அடிக்கவும் கை; இயந்திரத்தை இயக்கவும் கை; ஆலை ஓட்டவும் கை; எழுதவும் கை; எல்லோருக்கும் நல்லதை எழுதவும் கை; என்றும் நிலைப் பதை எழுதவும் கை. இத்தனையும் செய்யவந்த கை, தட்டிக் கொண்டே இருப்பது சரியா? ஓய்ந்திருப்பதும் ஒழுங்கா? உழைப்பதன்றோ முறை?"

* * *

கோடி கோடி கைகள் கூடிக் கூடி உழைத்தால், கோடி கோடி பொருள்கள் நாடி நாடி வருமே

* * *

ஆளை ஆள் தள்ளும் பணியிலும் கோடி கோடி கைகள் ஈடு படலாம். ஆளுக்கு ஆள் கை கொடுக்கும் தொண்டிலும் ஈடு

படலாம். இந்தியாவுக்கு எது தேவை? தள்ளல் தொழில் புரியும் கைகளல்ல; தாங்கள் தொழில் புரியும் கைகள்; கூடித் தொழில் புரியும் கைகள். அத்தகு கைகளும் சில—பல போதா; கோடி கோடி கைகள் தேவை.''

மனிதனின் முக்கிய உறுப்பாம் கையை மையமாக வைத்து எவ்வளவு அரிய கருத்துக்களைப் படைத்துள்ளார்கள்!

''கற்க வந்தோமா, கல்லெறிய வந்தோமா என்பதே தெரியாத நிலையில் தம்பிகளை வைத்திருக்கிறோம், தொழில் திறமையைப் பற்றிச் சிந்திப்பதை விடத் 'தகுதி' என்கிற பொய் மான் வேட்டையிலேயே விரைகிறது ஆசிரியர் உலகம்.''

மன வேதனையோடு, ஆசிரியர்—மாணவர் ஆகிய இரு சாராரையும் தம் சிந்தனையினால் சிறைப் பிடித்திருக்கும் பெற்றியை நோக்குங்கள்!

மனிதனின் பொறாமை முதலிய தீய குணங்களை எதற்கு ஒப்பிடுகிறார் என்று அவர்கள் வாயிலாகவே கேட்போம்.

''மலைப்புக் காமாலையும், பொறாமைக் காய்ச்சலும் பற்பல இடங்களிலே தோன்றின; எதிர்ப்புப் பிதற்றலும், தூற்றலும் முழங்கின; இருப்பினும் நியூட்டனை அறிஞர் என்று உலகம் ஒப்புக் கொண்டது.''

தாம் சொல்ல வந்த கருத்திற்கு, எவ்வளவு வலிவான உவமானம் காட்டி உலவ விடுகிறார்கள் என்பதை மேலே காட்டிய வரிகள் சான்றுகளாகக் கூறும்.

பழமொழியைப் பேசியே பொழுதைக் கழிக்கும் ஒரு கூட்டத்திற்கு தன் கல்விச் சிந்தனையின்மூலம் ஒரு சாட்டையடிக் கொடுக்கிறார்:

'''விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது பிற உயிர் வகைகளுக்குப் பொருந்தலாம். மாந்தர்களுக்குப் பொருந்தாது என்பது இப்போது தெரிகிறதா? படைப்பிலே அறியவன் மனிதன்; வியப்பிற்குரியவனும் மனிதன் என்று எந்த வேளையில், எந்த நெருக்கடியில், எவ்வளவு தூரம் அவன் அறிவு, ஆற்றல் உளப்பண்பு வளருமென்றும் முன்கூட்டியே உறுதிகாட்ட முடியுமா? காலம்தான் காட்டும்''

பழமொழிகளைப் பல இடங்களுக்குப் பொருத்திக்காட்டித் தோல்வியைக் கட்டிக்கொள்ளும் நண்பர்களுக்கு அறிவார்ந்த சொற்கள் மேற்கண்டவை. எனவேதான், அவற்றின்மூலம் அவர்களின் சிந்தனைகள் அமரத்துவம் பெறுகின்றன.

குடிப்பிறப்பு, ஒழுக்கம், சான்ருண்மை, கல்வி இன்னபிற நற்பண்புகள் நிரம்பிய குடும்பத்தில் மலர்ந்து, கல்வி பயின்று பல்கலைக் கழகப் பட்டமும் பெற்று, திருமுறையில் தோய்ந்து மெய்கண்ட நூல்களில் மூழ்கி, காப்பியங்களில் கலந்து, சங்க இலக்கியங்களில் சார்ந்து, பொதுமறையாம் திருக்குறள் பேரொளியேந்தி, தமிழ் நாகரிகத்தை, பண்பை, கலையை இயன்ற வகையில் பரப்பி வருகின்ருர். நீடுவாழலாம் என்ற மறைநெறியும் நல்ல வண்ணம் வாழலாம் என்ற முறை நெறியும் இவர்தம் சொற்பொழிவில் ஒலிக்கும்.

சொல்வன்மை என்பது அரசியல் துறையினருக்கு மட்டுமே உரித்தன்று; அறிவு ஒளி பரப்பும் கல்வித்துறைக்கே மிகவும் இன்றியமையாதது.

"'யார்கொலோ இச்சொல்லின் செல்வன்?' என்று, அநுமனைப் பார்த்து இராமன் வியந்தானே, அத்தகைய சொல் வன்மையை கல்வித்துறையில், தலைமைப் பதவியில் வீற்றிருக்கும் கல்வியாளர் கைக்கொள்ளவேண்டியது அவசியம். தவருன வழியில் எளிதில் திரும்பவல்ல பிஞ்சு நெஞ்சங்களை-இள உள்ளங்களை, நேரிய வழியில் திருப்பவல்லது சொல்லாற்றல்!"

இவ்வாற்றல், நெ. து. சு. அவர்களின் இயற்கையான ஆற்றல்! இதனுல் அவர்கள் குவித்துவரும் வெற்றிகள் கணக்கிலடங்கா.

கல்விநெறிக் காவலர் அவர்கள், தன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின்போது, புதிய ஜெர்மனிக்குச் சென்று அங்கிருந்து வரும் கல்விக் கொள்கைகளைக் கண்களால் கண்டும், மனத்தால் உணர்ந்தும் வந்தார்கள். அங்குள்ள "ஹம்போல்ட்" பல்கலைக் கழகத்திற்குச் சென்ருர்கள். அப்போது, அவர்களின் நெஞ்சம், "இவ்வளவு பழமையான பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழித் துறை இருக்கிறதா?" என அறிய விழைந்தது. உடனே அதன் துணைவேந்தரைக் கேட்டார்கள். அவர் தமிழ்த்துறை இல்லை என்று கூறினர். நெ. து. சு. அவர்கள் வாளாவிருந்துவிடவில்லை. "இந்த ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிப்

பிரிவை விரிவுபடுத்தும்போது, தமிழையும் சேர்த்துக்கொள்ளுங்கள்'' என்று ஆலோசனை வழங்கினார்கள். பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும் நினைவில் வைத்துக்கொள்வதாகக் கூறினார்.

சோவியத்து நாட்டிற்குச் சென்றபோது, அந் நாட்டிலுள்ள மிகப் பெரிய நூலகமான 'லெனின் நூலக'த்திற்குச் சென்றார்கள். பிறகு? ஐயா அவர்களே கூறுகிறார்கள், கேட்போம்;

"லெனின் நூலகத்தில் எத்தனை மொழிகளில் நூல்களும், வெளியீடுகளும் உள்ளனவென்று வினவினேம். 160 மொழிகளில் உள்ளன என்றாள். அந்த நூற்றுஅறுபது மொழிகளின் பட்டியலில் தமிழ்மொழியும் இடம் பெற்றுள்ளதா என்று துழாவினேன். நம் தமிழ்மொழியும் பட்டியலுள் இருந்தது. அங்குள்ள தமிழ் நூல்களும், சஞ்சிகைகளும் நம் அன்பளிப்பல்ல; அவர்கள் விலை கொடுத்து வாங்கியவை என அறிந்து மகிழ்ந்தேன்."

நெ. து. சு. அவர்களின் தமிழ் நெஞ்சத்தை என்னென்று கூறி வியப்பது? 'டெல்லிக்கு அரசனாக இருந்தாலும் ஒரு தாய்க்கு அவன் மகன்தான்' என்ற பழமொழிக்கு ஏற்ப அவர்கள் வேந்தராக இருந்தாலும் தாம் ஒரு 'தமிழர்' என்ற தனித் தன்மையை என்றும் மறவாமல், சென்ற இடங்களில் எல்லாம், 'நம் தமிழ் இங்குள்ளதா?' என்று உலகமெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்கின்ற பான்மையைப் பாராட்ட நமக்குச் சொற்கள் ஏது? அம்மட்டோ? இன்னும் கூறுகிறார்கள்:

"தென்னாடுடைய தமிழ்மொழியை எந்நாடும் கவனிக்கும் இரஷ்யாவில்—வடபால் உள்ள இரஷ்யாவில்—லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் கற்றுக்கொடுக்கிறார்கள் என்று கேட்ட போது, காதும் இனித்தது; கருத்தும் இனித்தது; ஊனும் உயிரும் இனித்தன ......"

இந்த இன்பப் பெருக்கை எவற்றோடு ஒப்பிடலாம்? அசோக வனத்தில், தான் தேடித் திரிந்த சீதாபிராட்டியை, ஒரு மரத்தின் அடியில் சோகமே உருவாகக் கண்ட அநுமன்—துள்ளிக் குதித்துக் கூத்தாடினான். கம்பர் அநுமனின் அந்த உள்ள நிலையை விளக்கப் பல பாக்களைப் புனைந்துள்ளார். அந்த நிலையை நம் நெ. து. சு. அவர்கள் அடைந்த இந்த இன்பப் பெருக்கோடு ஒப்பிட்டு மகிழலாமா!

பேரறிஞர் அண்ணு அவர்கள் தமிழகத்தின் தலைமை அமைச்சராகப் பணியாற்றியபோது, உலக வரலாற்றில் இடம் பெறும் ஒரு நிகழ்ச்சியை நடத்திக்காட்டினர். அதுதான், 'இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு' அம் மாநாட்டின்போது, உலகத்தில் உள்ள பல நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் வந்து உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். அப்படிப் பட்டவர்களில் ஒருவர், இரஷ்ய நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர்—ரூதின் என்ற செம்பியன் என்பவர்; இளைஞர்.

தமிழ்க் காதல் கொண்ட ரூதின் அவர்கள், நம் நெ. து. சு. அவர்கள் சோவியத்து நாட்டில் பயணம் மேற்கொண்ட போது தாமே வந்து வலிய அறிமுகமாகி உரையாடி மகிழ்ந்தார்களாம். அவ்வுரையாடலின் தன்மையை அவர்கள் குறிப்பிடுகிருர்கள்.

"நண்பகல் உணவு வேளை. நாங்கள் மூவரும் ஒரு விடுதிக்குள் நுழைந்தோம். ஒரு வாலிபர் எங்களை அணுகினர். என்னை, நீங்கள்தாளு வேலு என்பது?" என்ருர் தூய தமிழில். 'ஆம்' என்றேன். "என் பெயர் ரூதின் என்பது. இது இரஷ்யச் சொல்; தமிழில் செம்பியன் என்பது. நாங்கள் ஏற்பாடு செய்துள்ள ஒரு நிகழ்ச்சிக்குத் தாங்கள் வரமுடியுமா?" என்று கேட்டார். எனக்குக் கலந்துக் கொள்ள கொள்ளை ஆசை. ஆனல், அருகில் உள்ள அதிகாரி, முறைப்படியான நிகழ்ச்சிகளை எல்லாம் காட்டி வேறு எதிலும் கலந்துகொள்ள முடியாது என்று கூறினர். என் நிலையைப் புரிந்துகொண்ட ரூதின், "பரவாயில்லை, அடுத்தமுறை வந்தால் தாங்கள் வரவேண்டும்" என்று அன்போடு விடைபெற்ருர்.

"இதே செம்பியன்தான்—ரூதின்தான் பின்னர், சென்னைக்கு வந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றவர்; கர்மவீரர் காமராஜர் இரஷ்யப் பயணத்தின்போது, மொழிபெயர்ப்பாளராக விளங்கியவர்."

இவ்வாறு, நெ. து. சு. அவர்கள் எங்குச் சென்ருலும் தமிழ், தமிழருக்கென்று ஒரு முத்திரையைப் பதித்து விட்டுத்தான் மறு வேலை பார்க்கும் தமிழ்ச் சுடர் மணியாய்த் திகழ்கின்றமையை நாம் காண்கின்ருேம்.

நெ. து. சு. அவர்கள் படைத்த நூல்களில் ஒன்று 'அங்கும் இங்கும்' என்பது. அந்த நூலைத் தன் தமிழ்ப் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் அவர்களுக்குக் காணிக்கையாகப் படைத்து மகிழ்ந்து கூறுகிருர் :

"சென்னைப் பல்கலைக் கழகத்தில், கல்லூரிக் கல்வி நிலையில் தமிழுக்கு முதன் முதலாக இடம் தேடித் தந்தவரும், சென்னை நகரில் எல்லாச் சமயத்தாரும் சேர்ந்து கொண்டாடும் தமிழ்த் திருநாளாகப் பொங்கல் விழாவை நடத்திக் காட்டியவரும் எனக்கு நல்லாசிரியராக இருந்து தமிழ்ப்பற்று ஊட்டியவருமான கா. நமசிவாய முதலியார் அவர்களின் நினைவுக்கு இதை என் நன்றியின் அறிகுறியாகக் காணிக்கை ஆக்குகிறேன்."

"மனத்திலிருந்து கனிந்து வரும் வார்த்தை சுவையானது; அனுபவத்தால் கனிந்த வார்த்தை அதை விடச் சுவையானது; அனுபூதியாய் கனிந்த வார்த்தை உண்மையில் அமிர்தமேயாகும்" —என்ற அருள்வாக்கிற்கு இணங்க, தன் அனுபூதியால் (மெய்ம்மறந்த நிலையால்) கனிந்த வார்த்தைகள் அல்லவோ, இவை? இதனுல்தான் ஒவ்வொரு சொல்லும் அமிர்தமாக இருக்கின்றன; இனிக்கின்றன.

இவ்வாறு நெ. து. சு. அவர்கள், இன்று, நேற்று அல்ல, அன்று தொடங்கியே ஆரவாரமும் விளம்பரமும் இல்லாமல், தன் கல்விப் பணியோடு, தமிழ்ப்பணியையும் இணைத்தே ஆற்றி வந்திருக்கிருர்கள் என்பதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்களைக் காட்டலாம்.

## சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை

நம் வணக்கத்திற்குரிய ஐயா அவர்கள், 1969ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவராகப் பதவி ஏற்ருர்கள். அன்றுதொட்டு நேற்று வரை, அவர்கள் வழக்கமாகச் செய்துவரும் தமிழ்த் தொண்டுகளை விடுத்து, பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக்கென்று ஆற்றி வந்த தொண்டுகளை நோக்கினுல், நம்மை வியந்து நிற்கச் செய்து விடுகிறது!

ஆம்! நாளெல்லாம் பட்டினிக்கிடந்த பஞ்சைப்பராரி - முக்கனி கலந்த விருந்து கிடைத்தால் எப்படி இருப்பான் - அதுவும் தொடர்ந்து கிடைத்தால் - தனிக் கவனத்தோடு கிடைத்தால் - அதுவும், அவன் உண்ணும்போது - உண்ணும் அழகை விருந்து கொடுத்தவரே ரசித்தும் பார்க்கும் பேறுபெற்ருல் எப்படி இருக்கும்?

அந்த உயர்ந்த - மிக உயர்ந்த நிலையைத்தான் இன்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை அடைந்திருக்கிறது; யாரால்?

'காணவேண்டின் காக்கவேண்டா' என்பன போன்ற புதிய முழக்கங்களை முழங்கிவரும் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களைப் பேராசிரியராகவும், இளைஞர்களுக்கு இன்முகத்தோடு தமிழறிவு நெறிப்படுத்தும் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களைத் துணைப் பேராசிரியராகவும், திருக்குறள் கனியைச் சுவைத்து, அச்சுவையைப் பிறருக்கும் தந்து கொண்டிருக்கும் பாவலர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., அவர்களை விரிவுரையாளராகவும் பெற்று வலிவோடும் பொலிவோடும் நடைபோட்டு வருகின்றதே, யாரால்?

பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் உதவித்தொகை மாதம் இருநூறு ரூபாயாக இருந்ததை, இருநூற்றைம்பதாக—அறிவைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கும்போது வறுமையைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கக்கூடாதே என்று—உயர்த்தப்பட்டுள்ளதே, யாரால்?

புலவர் பட்டப்பெற்ற தமிழாசிரியர்கள் புகுமுகம், பி.ஏ. தேர்வுகளில் ஆங்கிலத் தேர்வு மட்டும் எழுதி, எம்.ஏ. தேர்வு எழுத வழி திறந்துவிடப்பட்டுள்ளதே, யாரால்?

'புலவர்கள்' என்ற டிப்ளமா பட்டத்துடன் "பி.லிட்." என்ற பட்டப் படிப்பை உண்டாக்கித் தமிழில் பட்டம் பெற்றவர்கள் நேரடியாக எதிலும் மேலே மேலே சென்று, கல்வித்துறையில் போட்டியிடலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளதே, யாரால்?

நெய்யாடுபாக்கம் சுந்தரவடிவேலுப் பெருந்தகை துணை வேந்தராக வீற்றிருந்த பான்மையால்—அவர்களின் மெய்யான தமிழ்ப்பற்றால்—தமிழ்க் காதலால்—தமிழன்பால்!

இவற்றை மிகை என்று கூறுவது மனிதப் பண்புக்கு அப்பாற்பட்டதுதானே!

இம்மட்டோ? தாமரைச் செல்வர் அவர்கள் தமிழ்த்துறைக்கு ஆற்றியுள்ள தமிழ்ப்பணியினை மேலும், சில வரிகள் கோடிட்டுக் கண்டு மகிழ்தல் நலந்தானே!

பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் ஆண்டுதோறும் முதுகலை (எம்.ஏ.) மாணவர்களுக்காக நடத்தும் பத்துநாள்

ஆராய்ச்சிக் கருத்தரங்குகளாயினும் சரி, விடுதலை வெள்ளிவிழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிக் கருத்தரங்குகளாயினும் சரி அல்லது பல்வேறு ஆன்ருேர் பெயரிலும் சான்ருேர் இட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவுகளாயினும் சரி, அந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் எல்லாவிதமான உதவிகளும் ஒத்துழைப்புக்களும் நல்குவதோடு, நிகழ்ந்தேறிய கருத்தரங்கக் கட்டுரைகளை—சொற்பொழிவுகளைக் கேட்டது மட்டுமேயன்றிக் கேளாத பல்லோரும் பயன்பெறும் வண்ணம் நூல் வடிவாக்கி வெளியிட உடனே ஆணைபிறப்பித்துள்ளார்கள்.

"தமிழா, அது ஒரு மூலையில் இருக்கவேண்டிய மொழி" என்று கருதப்பட்ட 'அந்த' நாளை மாற்றி, அங்கே தகுதி வாய்ந்த பலருக்கும் பதவியளித்து இன்று விரிவடைந்து வருகிறது—தமிழ்த்துறை!

சொந்த நாட்டிலே, தமிழ் மண்ணிலே தமிழராகப் பிறந்து—தாயின் வயிற்றிலிருந்து கீழே விழுந்ததும், 'அம்மா' என்று தமிழிலே கத்தி—பின்பு தத்தி வளர்ந்து—தமிழைப் பேசி—அதன் மூலம் பிறமொழிப் புலமைபெற்ற பல பெரியவர்களும் சிறியவர்களும், அரைவேக்காடுகளும் தமிழ்மொழியின் ஆற்றலை—மாண்பை ஆழ்ந்து அறியாமல், தமிழ்த்துறையையும் தமிழ்ப் படித்தவர்களையும் தாழ்வாக எண்ணும் மனப்போக்கு—பாழாய்ப் போன இந்த மாநிலத்தில்—சொந்த மாநிலத்தில்—இந்தத் தமிழ் மாநிலத்தில் இன்றும்கூட மாறவில்லையே! என்று, தெரியாமல் தமிழ்ப் படித்துவிட்டு பல முதிய உள்ளங்களும்—இளைய உள்ளங்களும், ஏங்கிய ஏக்கத்தைப் போக்க வந்த புதிய ஞாயிறன்ருே நம் துணைவேந்தர்!

அவர் யார்? தமிழர்களிடத்திலேயே தமிழுக்காக—தமிழருக்காகப் போராடி "உரிமை" வாங்கித் தந்த பெரியவர், வணக்கத்திற்குரியவர் கா. நமசிவாய முதலியாரிடம் தமிழ் கற்றவராவர்! தம் ஆசான் விட்டுச்சென்ற எஞ்சியுள்ள உரிமைகளையும் மீட்டுத் தரும் பொருட்டு இப்போது வீற்றிருக்கிருர்கள் என்ருல், இவை உபசார வார்த்தைகள் அல்ல; அது அவர்களுக்குத் தேவையுமில்லை! உண்மை வார்த்தைகள்!

ஆராய்ச்சித்துறை மாணவர்களுக்குப் பணத்தை மட்டும் அதிகப்படுத்தவில்லை. ஆராய்ச்சி செய்யும் மாணவர்களையும் அதிகப்படுத்தியுள்ளார்கள். முன்பெல்லாம் ஆராய்ச்சி செய்கிறவர்களைப் பிறர் ஆராய்ச்சி செய்யும் வண்ணம் ஒரு சிலரை மட்டும் பல்கலைக் கழகம் ரகசியமாக—மிகமிக ரகசியமாக அனு

மதித்தது. அந்தக்காலம், காலங்கடந்தாகிவிட்டது, இவர்கள் தம் பணியால்!

இப்போது நடப்பது, சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பொற்காலம். எனவே, இன்று தமிழ்த் துறையில் மட்டும் ஏறத்தாழப் பதினாறு ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். இவர்களுள் கல்லூரிகளில் ஆசிரியப் பணி ஆற்றும் பேராசிரியர்களும் அடங்கும்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தால் எப்படியிருக்கும்? இல்லையேல், சர்க்கரைப் பந்தலின்மீது தேன்மழைப் பொழிந்தால் எப்படி இருக்கும்? — இவை வினா.

குறள் நெறிக் காவலர் நெ. து. சு. அவர்கள் துணைவேந்தராக வீற்றிருக்க, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையோடு இணைந்த—திருக்குறள் ஆராய்ச்சித் துறைபோலிருக்கும்—இது விடை!

ஆம்! சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது திருக்குறள் ஆராய்ச்சிக்கென்று தமிழ்நாட்டில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்கும்—ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மூன்று இலட்சம் ரூபாய்களை ஒதுக்கினார்கள், அன்றைய முதலமைச்சராக வீற்றிருந்தவர்—ஈரோட்டு வழி நடந்த ஈமான்—செந்தமிழ்ச் சீமான்—பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்கள் நிறுவிய திருக்குறள் ஆராய்ச்சி அறக் கட்டளையைத் தொடர்ந்து இயக்கி, அல்ல, தாய்போல் அரவணைத்துப் பல ஆய்வு நூல்கள் வெளிவரச் செய்துள்ளார்கள் நம் நெ. து. சு. அவர்கள்.

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய 'திருக்குறள்—நீதி இலக்கியம்' என்ற பெருநூல்—சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட திருநூல்—இந்திய சாகித்திய அகாடமியின் பரிசைப் பெற்றுள்ளது. ஐயா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான்—குறள் நெறிக் காவலரின் ஆட்சிக் காலத்தில் தான் பல்கலைக் கழகம் வெளியிட்ட ஒரு நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு கிடைத்த சிறப்பைப் பெற்றுள்ளது என்றால் இதைவிட ஒரு சிறந்த வேறு பொருத்தம் என்ன வேண்டும்? பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு முத்திரையைப் பதித்து விட்டார்கள். மேலும் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் எல்லாம் முறையாக நடக்கும் சீர்மை! நேரம் இருப்பின் நெ. து. சு. அவர்களே சொற்பொழிவுக்கு வந்து

இறுதிவரை இருந்து கேட்டுச் செல்லும் எளிமை! முடிவில் அவை நூலாகும் பான்மை! தமிழாராய்ச்சித் துறையினர், எப்போது— என்ன உதவி கேட்டாலும் உடனே பெறும் நல்வாய்ப்பு! அம் மட்டோ? தமிழ்த் துறையினர் என்ன பணி ஆற்றினாலும் அவற்றில் குற்றம் காணுமல் குணம் கண்டு ஊக்குவிக்கும் தெய் வத் தன்மை!

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைக்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும் பணியொன்று நடைபெற்று வருகிறது. அதுதான், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் மட்டும் நடத்தும் 'தமிழாய்வு' என்ற ஆண்டு இதழ்—இல்லை —இது இதழ் என்று சொல்லப் பட்டாலும், ஆய்வுகள் நிறைந்த ஒரு கருத்துக் கோவையாக—கலைக்களஞ்சியமாகத்தான்— துறைத்தலைவர்—நூலறிபுலவர்-பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து ஒளி வீசுகிறது.

அனைத்திற்கும் மேலாக, தமிழ்த்துறை வெளியீடுகளை அதிக மாக்கிச் சிறப்பளிப்பது, பல்கலைக் கழகத்திற்கே ஒரு தனிச் சிறப்பை அளிப்பதாகும்.

செயற்கரிய பணிகளை நெ. து. சு. அவர்களின் தலைமையின் கீழ் செய்துவந்த சென்னைப் பல்கலைக் கழகத்தில், கலைஇயல், அறிவியல், தொழில்நுட்பவியல் போன்ற பல்வேறு துறைகளில், அவற்றின் கிளைகள் இருக்கின்றன. இருப்பினும், தமிழ்த்துறை வெளியீடுகளே அதிகமாக வெளிவந்திருக்கின்றன. இதற்குத் தாமரைச் செல்வரின் தணியாத தமிழ்ப்பற்றே காரணமாகும்!

இதோ, நெ. து. சு. அவர்களே கூறுகிறார்கள் :

"சென்னைப் பல்கலைக் கழகம் பல்லாண்டுகளாகவே, ஆண் டிற்குச் சில நூல்களை வெளியிட்டு வருகிறது. நூல் வெளியீட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் புதிய வேகம் வந்துள்ளது. இதன் விளைவாகவே, ஐந்தாண்டுகளில் நூற்றுமுப்பத்து நான்கு நூல்கள் வெளியாகியுள்ளன. இவை போக, முப்பத்துமூன்று நூல்கள் அச்சில் உள்ளன. வெளியானவற்றில் முப்பதைந்து நூல்கள், தமிழ்—தமிழ்நாடு பற்றியன. எங்கள் நூல்கள் இப்பொழுது நல்ல கட்டமைப்போடும், அழகிய முகப்போடும் வெளியிடப் படுகின்றன. இவை அடக்கவிலைக்கே விற்கப்படுகின்றன"*

---

* சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பேட்டி, 'தமிழரசு'—1-4-1975. (பேட்டி: பி. வி. ஜி.)

நெ. து. சு. அவர்கள் குறிப்பிட்ட தமிழ்—தமிழர் பற்றிய நூல்களில் குறிப்பிடத்தக்கனவாகப் பல உண்டு. அவற்றில் சில, டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்களின், "பத்துப்பாட்டாராய்ச்சி," பேராசிரியப் பெருந்தகையாளர் டாக்டர் கா. மீனுட்சிசுந்தரனுர் அவர்களின், 'The Contribution of European scholars to Tamil,' பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின், 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்' திருக்காம்புலியூர் ஆராய்ச்சி நூல், ஜி. யூ. போப்பின் திருவாசக மொழிபெயர்ப்பு, திருவாய்மொழி மறுபதிப்பு, திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் பலவும் ஆகும்.

'சென்னைப் பல்கலைக் கழகம் பழையது. ஆனல், அதில் இயங்கும் தமிழ்த்துறை புதியது' என்பதுபோல பல தேவைகளை இவர்களால்தான் அத்துறை பெற்றது.

இவ்வாருக, பெரும்பேராசிரியர்கள் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் வீற்றிருந்த தமிழ்த்துறையில்—டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் வீற்றிருந்த தமிழ்த்துறையில்—அவர்களுடைய மாணவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் வீற்றிருக்கும் இக் காலத் தமிழ்த்துறை புதிய பொலிவு பெறுகிறதென்ருல், அதற்கு நாம் செய்த தவப்பயன் நம் நெ.து.சு. அவர்கள் துணைவேந்தராக வீற்றிருந்ததே என்பது தெற்றென விளங்கும்.

*　　*　　*

நெ. து. சு. அவர்கள் தலைசிறந்த பேச்சாளர்—கைதேர்ந்த எழுத்தாளர்; இதை உலகம் அறியும். இவர்கள் ஏறி, அருந் தமிழிலும், ஆங்கிலத்திலும்,

"கொட்டடா, கொட்டடா, கொட்டடா ஜெயப் பேரிகை
கொட்டடா, கொட்டடா, கொட்டடா"

என்று எழுச்சி முழக்கம் செய்யாத மேடை இல்லை!

இவர்களின் கையெழுத்துக்களைப் பதித்து வெளியிடாத தமிழ்—ஆங்கிலச் செய்தித்தாள்கள் இல்லை.

இவர்கள் ஒரு திறம்படைத்த எழுத்தாளர் எனக் கண்டோம். எப்படிப்பட்ட எழுத்தாளர்? கல்வி நெறிக்கும் தமிழ் நெறிக்கும் சமூகச் சீர்திருத்த நெறிக்கும் அரண் செய்யும் கருத்துக் கருவூலங்களையே வடித்துக் கொடுக்கும் எழுத்தாளர். இவர்கள் தம் எழுத்து, சில மணி நேரத்திற்கோ ஒரிரு நாள்களுக்கோ மட்டும்

இன்பம் பயப்பன அல்ல; இவர்களது கட்டுரைகள் வருங்காலச் சமுதாயச் சிறப்பினை உருவாக்கும் மாண்புடைய அற்புதப் படைப்புக்களாகும்.

உண்மைத் தமிழ் உள்ளம் படைத்த நெ. து. சு. அவர்கள் ஒரு தலைசிறந்த குழந்தை எழுத்தாளரும் ஆவார்கள். பெரியவர்களுக்கு யாரும் எழுதிவிடலாம். ஆனால், பிஞ்சு நெஞ்சங்களுக்கு எழுத, தனித்ததோர் தன்மைவேண்டும். அத் தனித்தன்மையான தாய்ப்பாசம் இவர்கள் நெஞ்சில் இழையோடியிருப்பதால்தான் 'இன்றைய குழந்தை நாளைய தலைவன்' (child of today is the citizen of tomorrow) என்பதை நினைந்து, பதின்மூன்று நூல்களை மழலைச் செல்வங்களுக்குத் தந்துள்ளார்கள். அவை, அருமை வள்ளுவன் நினைவாக, 'வள்ளுவன் வரிசை' என்று வெளிவந்துள்ளன.

தம்பி, நில், நஞ்சுண்டவர், சிலுவையில் மாண்டவர், குண்டுக்கிரையானவர், தங்கத் தாத்தா, தோற்றும் வென்றவர், வானொலி வழங்கியவர், ரேடியம் கண்டவர், செஞ்சிலுவை தந்தவர், ஆறு, விளக்குப் பாவை, நெம்புகோல், மின்விளக்கு, பாக்கு வெட்டி, அடித்தா அணைத்தா என்பனவே அவை.

'குண்டுக்கிரையானவர்' என்றால், காந்தியண்ணல் நினைவுக்கு வருவார்.

'நஞ்சுண்டவர்' என்றால், உடனே சாக்ரடீசு நிழலாடுவார்.

'சிலுவையில் மாண்டவர்' என்றால், உடனே ஏசுநாதர் தோன்றுவர்.

இவ்வாறு குழந்தை உள்ளத்தில் எப்படிப்பட்ட பெயர் நிலைத்திருக்கும்—நினைவுக்கு வரும் என்று ஆராய்ந்து பெயரிட்டு அந்த நூல்களையும் குழந்தை இலக்கியம் என்று சொல்லிவிட்டு இராமாயண—மகாபாரதம் கதைகளைப் போலப் பெரிதாக எழுதாமல், சிறிய அளவு பக்கங்களுடன், அவைகளையும் குழந்தைகளாகவே படைத்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

குழந்தை எழுத்தாளர்களாகிய அழ. வள்ளியப்பா, பூவண்ணன் போன்றவர்களும், இத் துறையில், நெ. து. சு அவர்களின் வெற்றியைக் கண்டு பெருமிதம் அடைந்திருக்கிறார்கள்.

நெ. து. சு. அவர்கள் ஒரு இளைய தலைமுறையின் எழுத்தாளர் மட்டுமல்ல; இளைய தலைமுறைக்கே உரிய எழுத்தாளர். ஆம்!

அவர்களது நூலில் காணும் கருத்துக்கள் விரக்தியடைந்து கலங்கும் இளைஞர்களுக்கு தெம்பூட்டும் 'டானிக்'. தொல்லை - துயரங்களால் தவிக்கும் உள்ளங்களுக்கு 'அஞ்சாதே' என அபயம் அளிக்கும். 'அறிவுப் புதையல்,' 'சிந்தனை மலர்கள்,' 'பூவும் கனியும்' போன்ற பல நூல்களை எடுத்துக்காட்டலாம்.

நெ. து. சு. அவர்கள் ஒரு முதியோர் கல்வி எழுத்தாளர் இத் துறையில் ஈடுபடுவோர் மிகக் குறைவு. அது கருதியோ என்னவோ அவர்களே முதியோருக்குரிய நூல் ஒன்றையும் முன் வந்து படைத்துள்ளார்கள்.

அவர்கள் ஒரு பயண நூல் எழுத்தாளர். ஆம்! 'சென்றேன்-மீண்டேன் என்று எழுதாமல் அங்கே அறிந்தவற்றை மட்டுமல்ல; உணர்ந்தவற்றையும், இங்கு எடுத்து வந்து எழுத்தில் வடித்துத் தந்து நம்மவர்களை வியக்கச் செய்வது அவ்வளவு எளிதல்ல. ஆனால், நெ. து. சு. அவர்கள் அக்கலையிலும் வெற்றி கண்டார்கள். இவர்கள் எழுதிய, 'புதிய ஜெர்மனியில்', 'அங்கும் இங்கும்' போன்ற நூல்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

சுருங்கக் கூறின்—தமிழ்மொழி வழியாக நெ. து. சு. அவர்களைக் கண்டால் இதோ ஒரு சொல்வலை வேட்டுவர்; எழுச்சியூட்டும் எழுத்தாளர்; திறன் மிகுந்த இதழாசிரியர்; ஆற்றலுள்ள மொழிபெயர்ப்பாளர்.

இவர்களின் படைப்புக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்:

* தமிழ் நூல்கள்
* இதழில் வெளிவந்த கட்டுரைகள்
* சொற்பொழிவுகள்
* ஆங்கிலக் கட்டுரைகள்.

எழுத்தாளர் ஆவதற்குரிய தகுதிகளில் தலையாயது, ஒவ்வொன்றைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருப்பது; மிகச் சாதாரணமானவற்றைப் பற்றியும் தெரிந்துவைத்திருப்பது.

"நிபுணன் என்றால் யாரென்று கேட்கிறீர்கள்? மிகமிகச் சிறியனவற்றைப் பற்றி மிகமிகக் கூடுதலாக அறிந்திருப்பவனே ஆவான்" என்கிறார் அறிஞர் 'நிகோலஸ் பட்லா'. அங்ஙனம் பார்க்கும்போது, நெ. து. சு. அவர்கள், பலவற்றைப் பற்றியும் அறிந்து வைத்துள்ளார்கள். தேவையான இடத்தில் தேவையானவற்றை வழங்குகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கருத்துச் செல்வத்தை மட்டுமா வழங்கியிருக்கிறார்கள்? பொருட்செல்வத்தை மட்டுமா வழங்கியிருக்கிறார்கள்? அதுதான் இல்லை, புத்தகச் செல்வத்தையும் வழங்கியிருக்கிறார்கள். ஆம்! 'அடித்தா அணைத்தா' எனும் தலைப்பில் வெளிவந்த—ஐயா அவர்களும் அம்மையார் அவர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு நூலினை முப்பதாயிரம் படிகள் அச்சிட்டு, ஆசிரியப் பெருமக்களுக்குக் காணிக்கையாக்கியதன் மூலம் அவர்களின் பெருமையை உயரச் செய்தார்கள்.

அவர்கள் மனிதர்களிலே தனி. தமிழர் உண்ணக் கிடைத்த கனி. எப்படிப்பட்ட கனி? நாம் சொன்னால் பெருமை இல்லை. கவி மன்னர் கம்பரை அழைத்துச் சொல்லச் சொல்லுவோம்,

கம்பர் சொல்கிறார்—இல்லை, பாடுகிறார்:

"ஏகம்முதல் கல்விமுளைத் தெழுந்து எண்ணில்கேள்வி
ஆகம்முதல் திண்பனை போக்கி யருந்தவத்தின்
சாகந் தழைத்து அன்பரும்பித் தருமம்மலர்ந்து
'போகக்கனி' யொன்று பழுத்தது போலுமன்றே"

ஆம்! போகம் தரும் இன்சுவைக் கனிதான் நம் நெ. து. சு. அவர்கள். இந்தக் கனி தமிழகத் தருவில் தோன்றியது தமிழர்களின் தனிப் பேறு!

சென்னைப் பல்கலைக் கழகம். அதன் எதிரே வங்கக் கடல். எல்லைகாண முடியாதபடி பரந்து — விரிந்து கிடக்கும் கடல். கோடிக்கணக்கான பொருட் செல்வங்களையும், கோடிக்கணக்கான வரலாற்று உண்மைகளையும் தன்கையிடத்தே மறைத்துவைத்து அவற்றைத் தண்ணீரால் போர்த்தி போற்றிக் காக்கும் கடல்!

அக் கடல் அமைதியின் இருப்பிடம்! ஆழத்தின் உறைவிடம்! அதையொட்டி மாபெரும் கலங்கரை விளக்கம்!

வாழ்க்கைப் போராட்டம் நடத்தக் கடல்மீது பயணம் செய்யும் உயிர்கள் எத்தனை? அத்தனை உயிர்களும் திசையறியாமல் கலங்கும்போது, இருட்பேயால் வலிந்து அணைக்கப் படும்பொழுது, "கடல் அன்னைக்குள் ஐக்கியம்தான் நம் கதியா?" என்று அலரும்போது—

கடற்கரையில் கம்பீரமாக வீற்றிருக்கும் அந்தக் கலங்கரை விளக்கம் — ஒளி உமிழும் அந்த உற்ற துணைவன், "கலங்க



படிப்பும் பயிற்சியும் இணைந்த கல்வி பற்றிய கருத்தரங்கில் துணைவேந்தர் திரு. நெ. து. சு. உரைநிகழ்த்தும் காட்சி

வேண்டாம், கலங்கரைவிளக்கம் இதோ, நானிருக்கிறேன் என்னைப் பார்த்தாயா? பார்த்தவாறு வந்து நீர்மகளை விட்டு நில மகளை அடைவாய்" என மௌன மொழிகளால் ஆறுதல் உரைக் கிறது. உயிர்கள் மீள்கின்றன.

உயிர்கள் மீண்டவுடன் தன் ஒளியை நிறுத்திக் கொள்கிறதா? இல்லை—எந்நேரமும் ஒளிகூட்டி — வழி காட்டிய வண்ணம் நிற்கிறது.

அதனையொட்டி அமைந்திருக்கும் சென்னைப் பல்கலைக் கழகம்! அதில் ஒரு மனிதர்—நெ. து. சுந்தரவடிவேலு. அம் மனிதரின் வேறு பெயர், கலங்கரை விளக்கம். ஆம். கடலுக்கு 'ஆழி' என்று வேறு பெயர் இருப்பதில்லையா, அதுபோல!

கல்வித்துறையில் எத்தனை வகைகள்! அவற்றுள் எத்தனை பிரிவுகள்! அவையனைத்தின் உறைவிடம் பல்கலைக் கழகம்! அதாவது கல்விக்கடல்!

நீர்க்கடலில் பயணம் செய்வோர் உறும் துயரங்களையும், நிலக்கடலாம் கல்விக்கடலுக்கு வருவோரும் — திக்குவது, திணறுவது, அஞ்சுவது, ஓடுவது, தேடுவது, வாடுவது ஆகிய துன்பங்களுக்குப் பல்வேறு சமயங்களில் பல்வேறு காரணங் களால் ஆளாவதுண்டு.

அவர்கள் அனைவருக்கும் அபயம் அளித்து, "அஞ்சாதீர்! நானிருக்கிறேன்; நான் காட்டும் ஒளி வழியே வாருங்கள்; வாழ்க்கை உங்களுக்கு ஒரு போராட்டமாகத் தெரியாது; பூந் தோட்டமாகத் தெரியும்" என்று ஒளிகாட்டி கைநீட்டி அழைத் துக்கொண்டிருந்தது இந்த நிலவுலகின் கலங்கரை விளக்கம். அதன் வேறு பெயர் நெ. து. சுந்தரவடிவேலு.

ஆம்! கல்விக்கடலில் அவர்கள் ஒரு கலங்கரைவிளக்கம்! இன்று அந்தக் கலங்கரை விளக்கம் இடமாறினும் அந்த விளக் கொளியில் வாழ்கிறோம், நமக்குக் கலக்கம் எதற்கு?

உலகப்பெருஞ் சான்றோர்கள் கட்டிக் காத்து வந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் மாண்பைத் தொடர்ந்து கட்டிக்காத்து வந்தவர் ஈடு இணையற்ற துணைவேந்தர் நெ.து.சு. அவர்களே!

ஆம்! பல்துறைக் கல்விகளையும் பலநிலைகளிலிருந்து படிப் படியாகப் புகட்டிவந்த கல்வித்தந்தை, அவர்கள்!

Let Him Make N D S gay;
unfolding happiness day by day!

"கல்விநெறிக் காவலர்"

தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்

# எழுதிய நூல்கள்

1. அங்கும் இங்கும்† : சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1968; ப. iv+102, ரூ. 1-00.

2. அடித்தா? அணைத்தா? : (காந்தம்மா சுந்தரவடிவேலு- துணை ஆசிரியர்) சென்னை ஆசிரியர் இலவச வெளியீடு, 1958; ப. 30, காசு 25.

3. ஆறு : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1961; ப. 16, காசு 25 வள்ளுவன் வரிசை 10)*

4. உதிரிப் பூ : கோவை, கலைக்கதிர், பீளமேடு, 1960; ப. 125, ரூ. 1-50.

5. உலகத் தமிழ் : சென்னை, தமிழ் எழுத்தாளர் கூட்டுற வுச் சங்கம், 1972; ப. 112, ரூ. 2.

6. எண்ண அலைகள் : சென்னை, முருகன் அண்டு கம் பெனி, 1964; ப. viii+240, ரூ. 2-40.

7. எல்லோரும் வாழ்வோம் : சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1970; ப. vi+151, ரூ. 2-50.

8. குண்டுக்கு இரையானவர் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1959; ப. 16, காசு 25 (வள்ளுவன் வரிசை 4)*

9. சிந்தனை மலர்கள் : கோவை, கலைக்கதிர், 1968; ப. viii+125, ரூ. 2-70.

---

† தமிழக அரசு பரிசு பெற்ற நூல்.

* குழந்தை இலக்கியம்

10. சிலுவையில் மாண்டவர் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1959; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 3)*

11. சுதந்திரம் காப்போம்: சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1965; ப. 103, ரூ. 1-00.

12. செஞ்சிலுவை தந்தவர் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1963; ப. 20, காசு 25. (வள்ளுவன் வரிசை 12)*

13. சோவியத் மக்களோடு: சென்னை, வானதி பதிப்பகம், 1973, ரூ. 3-50.

14. தங்கத் தாத்தா : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1960; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 6)*

15. தம்பி நில் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 1)*

16. தோற்றும் வென்றவர் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1960; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 7)*

17. நஞ்சுண்டவர் : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1959; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 2)*

18. நான் கண்ட சோவியத் ஒன்றியம் : சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1971.

19. பாக்கு வெட்டி : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1960; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 9)*

20. புதிய ஜெர்மனியில் : சென்னை, வானதி பதிப்பகம், 1974; ரூ. 3-00.

21. பூவும் கனியும் : கோவை, கலைக்கதிர், பீளமேடு, 1959; ப. 125, காசு 70.

22. மின் விளக்கு : சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1960; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 5)*

23. மேதை மேகநாதன் : சென்னை, வானதி பதிப்பகம், 1974; ரூ. 2-00.

---

* குழந்தை இலக்கியம்

24. ***ரேடியம் கண்டவர்:*** சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1964; ப. 20. (வள்ளுவன் வரிசை 13)*

25. ***வள்ளுவர் வாய்மொழி:*** சென்னை, வானதி பதிப்பகம், 1973; ரூ. 2-00.

26. ***வானொலி வழங்கியவர்:*** சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1960; ப. 16, காசு 25. (வள்ளுவன் வரிசை 8)*

27. ***விளக்குப் பாவை:*** சென்னை, முருகன் அண்டு கம்பெனி, 1965; ப. 18, காசு 25. (வள்ளுவன் வரிசை 11)*

28. ***வையம் வாழ்க:*** சென்னை, ஆசிரியர் இலவச வெளியீடு. ப. 20, 1962.


---

* குழந்தை இலக்கியம்